வெளியீடு : 16-8-2007 Issued : 16-8-2007

1102
09-01-08

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 12, 2007—தொகுதி 27—எண் 2**

**Thursday, the 12th April 2007—Volume 27—No. 2**


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00


227651

**12-4-2007**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 365-366 |
| **2. கவன ஈர்ப்பு—** | |
| சீர்காழி-சென்னை விரைவுப் பேருந்துகள் இயக்குதல் | 366-369 |
| **3. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 369 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு | 369 |
| (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 370 |
| **5. மானியக் கோரிக்கைகள், 2007-2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 370-492 |
| திரு. ஆர். ஞானதாஸ் | 370-374 |
| *திரு. கே. கோபிநாத் | 374-381,488 |
| திரு. க. சுந்தர் | 381-385 |
| திரு. கு. செல்வம் | 385-391 |
| *திரு. கே.பி. அன்பழகன் | 391-392,<br>394-398 |

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை —தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை —தொடர்ச்சி

*திருமதி டி. யசோதா 401-415

திரு. ஓ.கே. சின்னராஜ் 417-418, 420-427

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 432-486

6. அறிவிப்பு—

உறுப்பினர்களுக்கு, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல்—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய புத்தகங்கள் வழங்குதல் 427

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 492

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 29, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 12, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங்கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான திரு. பு.உ. சண்முகம் அவர்கள் 11–4–2007 அன்று மறைவுற்ற செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முந்தைய வட ஆற்காடு மாவட்டம், தற்போதைய திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலைத் தொகுதியிலிருந்து 1957-1962, 1971-1976, 1977–1980 ஆகிய ஆண்டுகளிலும், முந்தைய தென்னாற்காடு மாவட்டம், தற்போதைய விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர்த் தொகுதியிலிருந்து 1985–1988 ஆகிய ஆண்டுகளிலும் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றியுள்ளார். மேலும், 1969 முதல் 1976 வரை மற்றும் 1985 முதல் 1988 வரை அமைச்சராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. கவன ஈர்ப்பு

### சீர்காழி–சென்னை விரைவுப் பேருந்துகள் இயக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழியிலிருந்து சென்னைக்குத் தொடர்வண்டிச் சேவை நிறுத்தப்பட்டதால், அரசு விரைவுப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தடம் எண் 326–ல் சீர்காழியிலிருந்து சென்னைக்கு, தினசரி இரவு 22 00 மணிக்கு ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், கீழ்க்காணும் இக்கழகத் தடப் பேருந்துகள், [illegible] நிலைபெற்று, சீர்காழி வழியாகச் சென்னைக்கு [illegible] வருகின்றன :

227655
சென்னை 600 009



| வ. எண் | தடம் எண் | செல்லுமிடம் | வழி | பேருந்துகள் | நடைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | 304டி | மயிலாடுதுறை–சென்னை | சீர்காழி | 13 | 22 |
| 2. | 324ஈ | வேளாங்கண்ணி–சென்னை | சீர்காழி (கிழக்குக் கடற்கரைச் சாலை) | 4 | 8 |
| 3. | 324 | வேளாங்கண்ணி–சென்னை | சீர்காழி | 10 | 20 |
| 4. | 326 | நாகப்பட்டினம்–சென்னை | சீர்காழி | 11 | 22 |
| 5. | 330 | திருநள்ளார்–சென்னை | சீர்காழி | 2 | 4 |
| 6. | 335 | வேதாரண்யம்–சென்னை | சீர்காழி | 2 | 4 |
| | | **மொத்தப் பேருந்துகள்/நடைகள்** | | **42** | **80** |

இயக்கப்பட்டு வரும் மேற்படி பேருந்து வசதிகளையும் சீர்காழி–சென்னை உள்ளிட்ட பயணிகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். விவர அறிக்கையில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தடம் எண் 326–ல் சீர்காழியிலிருந்து சென்னைக்கு, தினசரி இரவு 10–00 மணிக்கு ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லியுள்ள தகவல், உண்மைக்கு மாறான தகவல். சீர்காழி வழியாக 42 பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பேருந்துகளெல்லாம், வேளாங்கண்ணி, நாகப்பட்டினம், வேதாரண்யம், திருநள்ளார், மயிலாடுதுறை ஆகிய இடங்களிலிருந்து புறப்படுகின்றபொழுதே இருக்கைகள் நிரம்பிவிடுகின்றன. அப்பேருந்துகள் சீர்காழி வழியாக வருகிறபொழுது, இருக்கைகள் இல்லாததால் பயணிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளார்கள்.

## (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2006–2007* ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் சார்பாக முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை** — தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2007–2008* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் *11–4–2007* ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானதாஸ், நேற்றைக்கே ஐந்து நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள்தான் பேசினேன். இன்றும் தொடர்ந்து பேச வாய்ப்பளித்ததற்காகத் தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நகராட்சி நிருவாகத்திற்கு, குடிநீர் வசதி, சேரிப் பகுதிப் பராமரிப்பு, சுகாதாரம், மழை நீர் சேகரிப்பு, பசுமை காத்தல், சுற்றுச்சூழல், சாலை வசதிகள், கழிவு நீர் அகற்றல், திடக் கழிவுகள் மற்றும் இரசாயனக் கழிவுகளை அகற்றுவதில் சிறப்புக் கவனம் தேவை.

சிறந்த முறையில் நிர்வாகம் செய்யப்படுவதற்காக ஜாம்ஷெட்பூர் நகரத்திற்கு ஐ.நா. சபை விருது வழங்கியுள்ளது. ஜாம்ஷெட்பூர் மற்றும்



இலண்டன் நகரங்களில் நிர்வாகங்கள் மக்களிடம் எந்த நகராட்சி வரியையும் வசூலிக்காமல் சிறந்த சேவைகளைத் தருகின்றன. ஜாம்ஷெட்பூர் நகரை JUSCO-Jamshedpur Utility and Services Company எனும் டாடா நிறுவனத்தின் ஒரு அங்கம் நிர்வாகம் செய்கிறது. அங்கு நிலவும் நிலையைத் தமிழக அரசும் ஆய்வு செய்ய வேண்டும்.

தமிழகத்தில் நாமக்கல் நகரம் சுமார் 55,000 மக்கள் தொகையைக் கொண்டது. சிறந்த நிர்வாகம், சுற்றுச்சூழல், பாதுகாப்பான சாலை வசதிக்காக I.S.O. 14001 என்னும் உலகத் தரச் சான்றிதழை நாமக்கல் நகராட்சி பெற்றுள்ளது. தமிழகத்தின் மற்ற நகரங்களும் அந்த நகரத்தின் வெற்றிக்கான முயற்சிகளைக் கடைப்பிடிக்கலாம்.

மும்பை மாநகராட்சியை, 50 சதவிகிதம் மக்களின் பங்குகளுடனும், மீதத்தை மும்பை மாநகராட்சி, மும்பைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், H.D.F.C. ஆகிய நிறுவனங்கள் இணைந்து Public company–யாக மாற்றுவதற்கு ஒரு கட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதில் உள்ள நல்ல அம்சங்களையும், சாதக, பாதகங்களையும் தமிழக அரசும் ஆய்வு செய்ய வேண்டும்.

*முற்பகல் 9–40*

குடிதண்ணீர் வழங்கலைத் தனியார்மூலம் செய்யக் கருத்து உள்ளதாகச் செய்திகள் வருகின்றன. உலக வங்கி மற்றும் தனியார் தண்ணீர் நிறுவனங்களடங்கிய The World Water Council—உலகத் தண்ணீர் அமைப்பு, தண்ணீரைப் பொதுப் பொருள்—common goods—என்பதிலிருந்து, அதை விற்பனைக்குரிய பொருள்—tradable commodity—என்று கருதத் தொடங்கியுள்ளதால், தண்ணீர் சேவை தனியார் வசம் செல்லும்போது மக்கள் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும்.

குறிப்பாக, ஆர்.டபிள்யு.இ., விவெண்டி, சூயஸ், என்ரான் போன்ற பன்னாட்டுத் தண்ணீர் சேவை நிறுவனங்களின் குறிக்கோள், வளரும் நாடுகளின் தண்ணீர் சேவையில் நுழைந்து, தண்ணீர் சேவையைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும் என்பதுதான். நமது நாட்டிற்குள் வேறு பெயர்களில் பின் கதவு வழியாக நுழையும் முயற்சிகள் உள்ளன. டெல்லியில் தனியார்மூலமான தண்ணீர் சேவை தோல்வியடைந்துள்ளது. இங்கிலாந்து, பிலிப்பைன்ஸ், லத்தீன், அமெரிக்கா, பொலிவியா, அர்ஜென்டைனா, கானா. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானதாஸ், இந்தியாவில் இருக்கிறோம். தமிழ்நாட்டைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** அதைத்தான் சொல்ல வருகிறேன். டெல்லியில் தோல்வியடைந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. ஆர். ஞானதாஸ்:** ஏனென்றால், தனியார்மயம் என்பது மேலைநாடுகளிலிருந்து நம்மிடம் திணிக்கப்பட்ட ஒன்று. ஆகையால், மேலைநாடுகளில் இந்தத் தண்ணீர் சேவை தோல்வியடைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், இந்தியாவில் மான்சான்டோ விதை நிறுவனமும் மற்றொரு நிறுவனத்துடன் தண்ணீர் சேவைக்கு ஒரு கூட்டு முயற்சியில் (Joint Venture) இறங்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்காக Water Health International எனும் நிறுவனத்தின் பங்குகளைக்கூட வாங்கிவிட்டது. விதைகளுக்கு எப்படி ஏகபோக உரிமை கொண்டாடுகிறதோ, அதேபோன்று, ஒரு கட்டத்தில் தண்ணீர் சேவையிலும் தனியார் சேவை ஏகபோக உரிமை ஏற்பட வாய்ப்புகள் உண்டு. எனவே, தண்ணீர் சேவையில் பிற நாடுகளில் ஏற்பட்ட தோல்விகளைக் கருத்தில்கொண்டு, தண்ணீர் சேவையைத் தனியாருக்கு வழங்கும் கருத்தை நிராகரிக்க வேண்டும்.

சிவகாசி தொகுதியில், சிவகாசி, திருத்தங்கல் மற்றும் பல கிராமங்களுக்காக உருவாக்கிய மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இன்னும் முழுமையான பயனை மக்களுக்குத் தரவில்லை. எனவே, இத்திட்டத்தை விரைவில் முழுமையாக முடித்தும், இத்திட்டத்தை விரிவுபடுத்தியும், மேலும் பல கிராமங்களுக்கு விரைந்து குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

திருத்தங்கல் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட வேண்டும். திருத்தங்கல் நகர மக்களுக்குப் பேருந்து நிலைய வசதியை நகரின் முக்கியப் பகுதியான திருநின்ற நாராயணப் பெருமாள் கோயிலின் அருகே அமைத்து, மக்களின் நீண்ட காலத் தேவையை நிறைவேற்ற வேண்டும்.

நகராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் சாலைப் பராமரிப்புப் பணிகள் சரிவர நடைபெறுவதில்லை. மின் விளக்குகள் பழுதானால் மாற்றுவதற்கு உடனடி நடவடிக்கைகள் இல்லை.

மயானங்களுக்குச் செல்லும் பாதைகள், மயானக் கூரைகள், மேடைகள் நல்ல நிலையில் இல்லை. இவற்றை அவசரமாகச் சீர்



செய்ய வேண்டும். நகர்ப்புறங்களில், இறந்த உடல்களை எரிப்பதற்கு மண்ணெண்ணெய், விறகுபோன்ற பொருட்கள் தட்டுப்பாடாக உள்ளதால், நகரங்களில் மின் மயானங்களை அமைக்க வேண்டும். இதனால் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும்.

சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் கங்கர்செவல்பட்டியிலிருந்து லட்சுமிபுரம் சாலை; வெம்பக்கோட்டை, சூரார்பட்டி, கோட்டைப்பட்டி வழியாக ஓ. மேட்டுப்பட்டி சாலை; துலுக்கன்குறிச்சி–நடுச்சத்திரம் சாலை; வல்லம்பட்டி–கன்னக்குடும்பன்பட்டி சாலை; ஏழாயிரம் பண்ணை–குகன்பாறை சாலை; வெற்றிலையூரணி–கீழ்த்தாயில்பட்டி சாலை; கோட்டைப்பட்டி–தாயில்பட்டி சாலை; அப்பையநாயக்கன்பட்டி–குண்டாம்பட்டி சாலை; திருவேங்கிடபுரம்–கோடாங்கிபட்டி சாலை; பாறைப்பட்டி–கள்ளமநாயக்கன்பட்டி சாலை, அச்சங்குளம்–கண்டியாபுரம் சாலை; ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியத்திலே, சாமிநாதபுரம்–கன்னித்தேவன்பட்டி சாலை; சாமிநாதபுரம் காலனி–அனந்தப்பநாயக்கன்பட்டி சாலை ஆகிய சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இவற்றை விரைவில் சீர் செய்து தர வேண்டும்.

அதேபோல, சிவகாசி–நாரணாபுரம் புதூர் சாலை, நாரணாபுரம்–அனுப்பங்குளம் சாலை, செங்கமலப்பட்டி–நாரணாபுரம் சாலை, செங்கமலப்பட்டி–சிவகாசி சாலை ஆகியவை கடந்த 18 முதல் 20 வருடங்களாகப் பராமரிக்கப்படாத நிலையில் உள்ளன. எனவே, இவற்றிலும் தனிக் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை ஊராட்சிகளே செயல்படுத்த ஆவன செய்ய வேண்டும். வீட்டு வரி நிலுவை இல்லாமல் 100 சதவிகிதம் வசூலித்த ஊராட்சிகளுக்கு, வீட்டு வரி இணை மானியம் பழையபடி மூன்று மடங்காக வழங்கப்பட வேண்டும். கிராம ஊராட்சிகளின் மின் கட்டணத்தை அரசு பரிசீலிக்க வேண்டும். காலங்கடந்து மின் கட்டணத்தைச் செலுத்தினால் விதிக்கப்படும் 18 சதவிகித வட்டியை இரத்துச் செய்ய வேண்டும்.

கிராம ஊராட்சியில் மனைப் பிரிவு அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் ஊராட்சித் தலைவருக்கே வழங்கப்பட வேண்டும். ஊராட்சித் தலைவருக்கான பயணப் படியை உயர்த்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். நேற்றைக்கும் time எடுத்திருக்கிறீர்கள். நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. ஆர். ஞானதாஸ்:** ஊராட்சி எழுத்தர்களுக்குப் பணிவரன்முறை செய்து, அரசு ஊழியர்களுக்குள்ள அனைத்துச் சலுகைகளும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஒன்றியத்தில் அ.இ.அதிமுக. யூனியன் சேர்மன் உள்ளார். யூனியன் பொது நிதியிலிருந்து நான்கு தார்ச் சாலைகளை அமைக்கும் பணிக்குத் தீர்மானம் போட்டு மாவட்ட நிர்வாகத்திடம் அனுப்பி மூன்று மாத காலம் ஆகியும் நிர்வாக அனுமதி தரப்படவில்லை என்பதை ஆதாரத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. ஞானதாஸ். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத். (குறுக்கீடு)

**திரு. ஆர். ஞானதாஸ்:** நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத்.

முற்பகல் 9-45

*** THIRU K. GOPINATH**: Hon'ble Speaker Sir, at first, my sincere thanks to you and my party Leader Shri Sudarsanamji and the Deputy Leader Smt. Yasodaji. I shall speak in Tamil after a small break Sir. On behalf of my constituency people and Telugu people in the State, I shall offer a small Telugu lyric praising the Hon'ble Chief Minister on his completion of 50 years as a Legislator.

(தெலுங்குப் பாடல் ஒன்றை உறுப்பினர் வாசித்தார்.)

நான் பாடலின் பொருளை ஆங்கிலத்தில் சொல்கிறேன்.

*"Oh, Ye a proud Warrior without a sword.*
*Never you adorned with a crown*
*But you are an emperor of vast Dravidian Dynasty*
*You are the lone Statesman to occupy the Gaddi of*
*Chief Minister for few decades in the Country*
*You are the symbol of Socialism*



*You are the torch bearer of Democracy*
*A messiah of poor and Backward Classes*
*An architect of Tamil Nadu*
*Let thy Fame shineth for ever in the country."*

Thank you Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வசிக்கும் தெலுங்கு மக்கள் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, தெலுங்கு யுகாதிக்கு holiday அறிவித்ததற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், கடந்த காலத்திலே இதே அவையிலே தெலுங்கு யுகாதிக்கு நான் holiday கேட்டேன். அன்றைய முதலமைச்சர் எங்களுக்கு Restricted holiday என்று ஒதுக்கினார்களே தவிர, தனி holiday-யாக ஒதுக்கவில்லை. ஆனால், கடந்த முறை, அதாவது 23-8-2006-லே நான் இந்த அவையிலே பேசும்போது, தெலுங்கு மக்கள் சார்பில் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சரிடம் வைத்தேன். வைத்தவுடனே, எங்களுக்கு இந்த வருடம் தெலுங்கு யுகாதிக்கு holiday கொடுத்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடந்த வருடம் எங்கள் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, ஓசூருக்கு bus stand இல்லை என்று கேட்டோம். உடனடியாக அந்த bus stand கொடுத்ததற்கு, 6 கோடி ரூபாய் sanction பண்ணியதற்கு அண்ணன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, என்னுடைய தொகுதியிலே underground drainage system கேட்டோம். உடனடியாக sanction கொடுத்தார்கள். இன்றைக்கு administrative sanction நிற்கிறது. அதிலே ஒரு சிறிய பிரச்சினை இருக்கிறது. என்னவென்று சொன்னால், treatment plant-லே இடம் ஒதுக்கியதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை clear பண்ணிக் கொடுத்தால் எங்களுக்கு இந்த வருடமே அந்த underground drainage வந்துவிடும். அதற்கு அண்ணன் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு ஓசூர் என்பது தமிழ்நாட்டிலேயே develop ஆகிற ஒரு டவுன்; கோயம்புத்தூருக்கு அடுத்ததாக ஓசூர் இருக்கிறது. இன்றைக்கு ஓசூரிலே பார்த்தால், குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பது மிகப் பெரும் பிரச்சினை. இந்தப் பிரச்சினையைப் போக்குவதற்கு என்னுடைய ஒரு suggestion என்னவென்று சொன்னால், அண்டை மாநிலமான கர்நாடகத்திலிருந்து upto அத்திப்பள்ளி என்பது நம்முடைய State border. State border-ல் காவிரித் தண்ணீரை அவர்கள் pipeline–லே drinking purpose–க்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் கடந்த காலத்திலே அவர்களிடத்திலே, கர்நாடகத்திலே போய்க் கேட்டோம். அப்பொழுது எங்கள் கட்சியான காங்கிரஸ் கட்சி அங்கே ஆளுங்கட்சியாக இருந்தது. அப்பொழுது கேட்கும்பொழுது, அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், தமிழ்நாடு State எங்களுக்கு representation கொடுத்தால், Government–ல் நாங்கள் அதைப் பரிசீலிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அண்ணன் அவர்களுக்கு என்ன சொல்கிறேன் என்றால், தயவுசெய்து நீங்கள் கர்நாடக மாநிலத்திலே கேட்டீர்கள் என்றால், நிச்சயமாகக் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக, நமக்குக் காவிரி water கிடைக்கிற ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது. தயவுசெய்து இதைப் பரிசீலிக்க வேண்டும்.

முற்பகல் 9–50

இதற்கும்மேலாக முக்கியமான ஒரு பிரச்சினை என்னவென்றால், ஓசூர் 1992–லே Municipality ஆக upgrade ஆனது. 1992–லே Municipality ஆக upgrade ஆன பிறகு, அப்பொழுது இருக்கிற நகராட்சிக் கூட்டத்தில் என்ன செய்தார்கள் என்றால், ஒரு tax fix பண்ணினார்கள். அதற்கு முன்பு அது டவுன் பஞ்சாயத்தாக இருந்தது. 1992–ல் டவுன் பஞ்சாயத்து upgrade ஆன பிறகு, ஒரு தீர்மானம் போட்டு, A, B, C என 3 Classes ஆகப் பிரித்து, A-Class ரூபாய் 2–50 பைசா, B-Class 2 ரூபாய், C-Class ரூபாய் 1–50 பைசா என்று fix பண்ணினார்கள். இதை fix பண்ணியவுடன் மக்கள், இது ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது, நாங்கள் யாரும் கட்டமாட்டோம் என்று சொன்னார்கள். பிறகு மீண்டும் 30–6–2000–ல் A-grade–க்கு 80 பைசா, B-grade–க்கு 65 பைசா, C-grade–க்கு 50 பைசா என்று மூன்று வகைகளாகப் பிரித்துத் தீர்மானம் போட்டு அனுப்பினார்கள். ஆனால், இதிலே என்ன ஆயிற்று என்றால், தீர்மானம் போட்டு இங்கே C.M.க்கு அனுப்பிய பிறகு, C.M.இடமிருந்து approval வரவில்லை என்ற காரணத்தாலே, பழைய rate தான் fix பண்ணிவிட்டோம்; அந்த மாதிரி ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதை மக்கள் யாருமே ஏற்றுக்கொள்ளவில்லை.



கிட்டத்தட்ட 1999 முதல் இன்றைய தேதி வரை மக்கள் யாருமே tax கட்டவில்லை. Tax கிட்டத்தட்ட 14 கோடி ரூபாய் pending ஆக இருக்கிறது. 14 கோடி ரூபாய் pending ஆக இருப்பதால், நகராட்சியிலே எந்தவிதமான பணிகளையும் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது.

அதற்கும் மேலாக என்னவென்றால், கடந்த வாரம், அதாவது மார்ச் 23 ஆம் தேதி நகராட்சியின் சார்பிலே பண வசூல் செய்யச் சென்றபோது, நீங்கள் பணம் கட்டவில்லையென்றால் நாங்கள் ஜப்தி பண்ணுவோம் என்று சொன்னார்கள். சொன்னவுடனே மக்கள் எல்லாம் கொந்தளித்து, கிட்டத்தட்ட 3 மணி நேரம் four track national highway–ல் சாலை மறியல் செய்தார்கள். அதற்குப் பிறகு நம்முடைய District Collector, Municipal Commissioner, Sub–Collector, இவர்கள் எல்லாம் போய் மக்களைச் சமாதானப்படுத்தி, அதற்குப் பிறகு இங்கிருந்து நான் திரும்ப அன்றைக்கு evening போய், கண்டிப்பாக இதை நான் Government knowledge-க்குக் கொண்டு போகிறேன், ஏற்கெனவே 23–8–2006 அன்று நான் கொண்டு போய் இருக்கிறேன், அண்ணன் அவர்கள் பரிசீலிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள், தயவுசெய்து இந்த மாதிரிப் பண்ணக் கூடாது என்று மக்களிடம் சொன்ன பிறகு, அந்தச் சாலை மறியலை அவர்கள் வாபஸ் பெற்றார்கள்.

தயவுசெய்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்களைக் கேட்டுக்கொள்வது, நிச்சயமாக இந்த அவையிலே நீங்கள் அறிவீப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். நான் இங்கே பேசப்போகிறேன் என்று நேற்று ஊர் முழுவதும் தெரிந்து போய்விட்டது. தெரிந்ததால், இங்கே எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் மேலேயும், எங்களுடைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பின்னாலேயும் இருந்து இரண்டு பேரும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். என்ன ஆகப் போகிறது, என்ன அறிவிப்பு வருகிறது என்று. இதில் உள்ள மிகப் பெரிய சோகம் என்னவென்றால், இந்த tax collection–ஐப் பொறுத்தவரையில் irrespective of politics (குறுக்கீடு) இன்றைக்கு இல்லை. நேற்று இரண்டு பேரும் வந்து மேலே ஒன்றரை மணி நேரம் உட்கார்ந்து இருந்தார்கள்; இந்தப் பக்கம் present எம்.பி., மிஸ்டர் சுகவனம், அந்தப் பக்கம் முன்னாள் எம்.பி., இரண்டு பேரும் உட்கார்ந்து இருந்தார்கள். காரணம் என்னவென்றால், அவர்கள் (குறுக்கீடு) இன்றைக்கும் திடீர் என்று வந்து உட்கார்ந்து இருக்கிறார்கள். இன்றைக்கு நிலைமை ரொம்பப் பெரிய

issue–வாக இருக்கிறது. மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இன்றைக்கு மட்டும் நீங்கள் வாங்கிக்கொண்டு வரவில்லையென்றால், ஓசூருக்கு வரக் கூடாது. இந்த அறிவிப்பு வரவில்லையென்றால் நீங்கள் சாலை மறியல் பண்ண வேண்டும், இல்லையென்றால் உங்கள் வீட்டிற்கு முன்னால் மறியல் பண்ணுவோம் என்கிற ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே நான் உங்களிடம் சொல்லியிருக்கிறேன், நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று. கண்டிப்பாக அறிவீப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நீங்கள் அறிவிக்கவில்லையென்றால் நான் ஓசூரே போக முடியாது. நிலைமை அந்த மாதிரி மோசமாக இருக்கிறது. தயவுசெய்து இதற்கு ஒரு நல்ல தீர்வு காண வேண்டும்.

அதேபோல, இதைவிடப் பெரிய பிரச்சினை என்னவென்றால், கடந்த வருடம் நம்முடைய P.W.D. Minister ஓசூர் வந்தார்கள். ஓசூரில் 25 வருட காலமாகத் தீராத ஒரு பிரச்சினை; அதாவது, எங்களுக்கு dam இருக்கிறது, கெலவரப்பள்ளி dam. அந்த அணைக்குத் தண்ணீர் தென்பெண்ணையிலிருந்து வருகிறது. It comes from Nandi Hills. Nandi Hills-லிருந்து தண்ணீர் வருகிறது. இந்தத் தண்ணீர் ஓசூர் வரும்போது, polluted water ஆக வருகிறது. Last year அண்ணன் P.W.D. Minister வந்து open பண்ணினார்கள் வந்த பிறகு இன்றைக்கு 10,000 ஏக்கர் cultivate பண்ணிக்கொண்டிருக்கிறோம், அந்தத் தண்ணீரில். ஆனால், அந்தத் தண்ணீரில் பெரிய ஒரு சிக்கல், ஆபத்து என்னவென்றால், இப்போது இருக்கிற, பக்கத்து மாநிலத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் இராமய்யா ஷெட்டி, பி.ஜே.பி. எம்.எல்.ஏ. அந்த பி.ஜே.பி. எம்.எல்.ஏ. இன்றைக்கு இருக்கிற Government–ல் பேசி, 20 கோடி ரூபாய் sanction பண்ணிக்கொண்டு, lift irrigation மூலமாக நமக்கு வருகிற தண்ணீரைப் பக்கத்தில் உள்ள கர்நாடக மாநிலத்திற்கு diversion செய்து எடுத்துப் போகிற மாதிரி பேப்பரிலே செய்தி வந்திருக்கிறது, கர்நாடகப் பத்திரிகைகளிலே எல்லாம் வந்திருக்கிறது. நான் அவரிடம் இது பற்றிக் கேட்டபோது, என்னிடம் ரொம்ப நக்கலாகப் பேசினார். உன்னுடைய ஏரியாவை நீ பார்க்கிறாய், என்னுடைய ஏரியாவை நான் பார்க்கிறேன், அது எங்கள் கர்நாடகத் தண்ணீர்தான் என்று சொல்கிறார். இந்தத் தண்ணீரை மட்டும் lift irrigation மூலமாக எடுத்துக்கொண்டு போய்விட்டால், கர்நாடகாவிலிருந்து வருகிற தண்ணீர், அதாவது ஓசூருக்கு வருகிற கெலவரப்பள்ளித் தண்ணீர், I mean, கிருஷ்ணகிரியில் இருக்கிற முத்தூர் dam-க்குப் போகிறது. முத்தூர் dam-லிருந்து திருவண்ணாமலை சாத்தனூர் dam, upto பாண்டிச்சேரி வரை இந்தத் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு உடனடியாக நாம் steps எடுக்கவில்லையென்றால், நிச்சயமாக அந்தத் தண்ணீர் வருவது cut



ஆகிவிடும். தயவுசெய்து நம்முடைய அரசாங்கம் ஒரு special attention செலுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன். ஓசூரைச் சுற்றி நிறைய tanks இருக்கின்றன. Heart of the town–ஐச் சுற்றி நான்கு பெரிய, பெரிய tanks இருக்கின்றன. இன்றைக்கு இருக்கிற குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகப் போக்க வேண்டுமென்றால், அந்தத் தண்ணீரை நாம் clean பண்ணி, treatment plant அமைத்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ரொம்ப முக்கியமான பிரச்சினை. தயவுசெய்து கொஞ்சம் time கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** அந்த மாதிரி, அந்தத் தண்ணீரை மட்டும் treatment plant அமைத்து ஓசூரிலே இருக்கிற நான்கு ஏரிகளை நிரப்பினாலே, தண்ணீர்ப் பிரச்சினை solve ஆவதற்கு easy ஆக இருக்கும். தயவுசெய்து நீங்கள் உடனடியாகப் பரிசீலிக்க வேண்டும்.

ஓசூரைப் பொறுத்தவரையில், agricultural புறம்போக்கு land–க்குப் பட்டா இல்லை. 25 வருடங்கள் ஆகிவிட்டன. 25 வருடங்களாகப் புறம்போக்கு land–க்குப் பட்டா கொடுத்ததே கிடையாது. ஓசூர், தேன்கனிக்கோட்டை ஆகிய இரண்டு தாலுகாக்களைத் தவிர, இன்றைக்குத் தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் பட்டா கொடுத்தாகிவிட்டது. 25 வருடங்களாக அந்த ban அப்படியே இருக்கிறது. தயவுசெய்து அந்த ban–ஐ நீங்கள் lift பண்ண வேண்டும்.

அதேபோல, இன்றைக்கு ஓசூர் தொகுதியைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 400 ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளை இதுவரையில் யாருமே clean செய்யவில்லை. அந்த ஏரிகளைத் தூர் வாரி, தண்ணீரை அதிலேவிட்டால் ஓசூரின் குடிநீர்ப் பிரச்சினை solve ஆகிவிடும். அதே மாதிரி, ஓசூரைப் பொறுத்தவரையிலே. . .

முற்பகல் 9–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** S.E.Z., I.T. Park. இன்று I.T. Park என்பது கர்நாடக மாநிலத்தில் ஓசூரை ஒட்டியிருக்கின்ற கர்நாடக எல்லை வரை வந்துவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து

immediate ஆக ஒரூருக்குக் குறைந்தபட்சம் 3 I.T. Park-களையாவது தாங்கள் தர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கின்றேன். அதேபோல, S.E.Z.—Special Economic Zone—கடந்த முறை நான் இதே அவையிலே பேசும்போது முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள்; மற்ற அமைச்சர்களும் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர். (குறுக்கீடு) சுந்தர், பேசுங்கள்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தர், உட்காருங்கள். கோபிநாத், one minute–ல் பேச்சை முடியுங்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சிறுபான்மைப் பிரிவைச் சார்ந்தவன். எனக்குத் தமிழ் அவ்வளவு fast ஆக வராது. இருந்தாலும், எனக்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் point–ஐ மாத்திரம் முதலில் சொல்லுங்கள். ஒவ்வொன்றுக்கும் விளக்கம் சொல்லிக்கொண்டிருந்தால் it will take time.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு நாமே திட்டம் கடந்த ஆட்சியிலும், நம்முடைய ஆட்சியிலும் இருந்தது. இப்போது மீண்டும் நமக்கு நாமே திட்டத்தைக் கொண்டு வந்தால், எங்களை மாதிரிப் பகுதியில் இருக்கின்ற town–ல் development அதிகமாக இருக்கும். ஏனென்றால், ஒரு industry இருக்கிறது. ஆகவே, நமக்கு நாமே திட்டத்தைக் கொண்டு வந்தால் industry அமைக்க நிறையப் பேர் முன்வருவார்கள். தொகுதி develop ஆக அதிக வாய்ப்பிருக்கிறது. ஆகவே, தாங்கள் தயவுசெய்து மீண்டும் நமக்கு நாமே திட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.

அதே மாதிரி என்னுடைய தொகுதியில் ring road பணி கிட்டத்தட்ட 10 ஆண்டு காலமாக pending–ல் இருக்கிறது. ஆகவே, ring road–ஐ அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்று



சொன்னால், அண்ணன் சுதர்சனம் அவர்கள் முதலில் இன்றைக்குப் பேச வேண்டாமென்று சொல்லியிருந்தார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கும், எங்கள் கட்சித் தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்களுக்கும், யசோதா அம்மா அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி, அதே மாதிரி உடனடியாக இந்த tax–ஐக் குறைக்க வேண்டுமென்று தளபதி அண்ணன் அவர்களை மீண்டும் கேட்டு, நன்றி சொல்லி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையிலே பொன் விழாக் கண்டிருக்கின்ற ஒப்புவமையில்லாத முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களை வாழ்த்தி, வணங்கி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே பேசிய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் நேற்றுப் பேசியபோது, பாரபட்சமாக நடப்பதாகச் சொன்னார். இன்றைக்குக்கூட ஓர் உறுப்பினர் குறிப்பிட்டார். ஆனால், எந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அவர்களுக்குப் பெருமையைத் தேடித் தந்தவர்தான் நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சர் தலைஞர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1996–க்கு முன்பு சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களெல்லாம் இங்கே இருக்கிறார்கள். மூத்த சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் அவர்கள் தொகுதியிலே எந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டாலும் குறிப்பாக ஒரு பள்ளிக்கூட விழா என்று சொன்னால், அதிலே எங்களுக்கு ஒரு பள்ளிக்கூடக் கட்டடம் கட்டித் தாருங்கள் என்று சொன்னால், அங்கேயே அந்த நேரத்திலேயே சட்டமன்ற உறுப்பினரால் உடனே அறிவித்துவிட முடியாது. அவர்கள் அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரிடம்தான் தங்களுடைய கோரிக்கையைச் சொல்ல முடியும். ஒன்றியக் குழுத் தலைவருக்கோ அல்லது வட்டார வளர்ச்சி அலுவலருக்கோதான் அதைப் பரிந்துரை செய்ய முடியும். அங்கேயே

உடனே அறிவிக்க முடியாத ஒரு நிலைமை 1996–க்கு முன்பு இருந்தது. ஆனால், 1996–லே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 4–வது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 'சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம்' என்ற ஒன்றை அறிமுகப்படுத்திய பிறகு, இன்றைக்கு அதனை நம்முடைய தளபதி அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே வழங்கிய பிறகு, (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதியிலே எந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டாலும், ஒரு பள்ளிக் கட்டடம் தேவை அல்லது இந்தப் பணிக்கு இது தேவை என்று சொன்னால், உடனே அறிவிக்கின்ற ஒரு வாய்ப்பு எல்லாக் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதிலேயும் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். கடந்த மாதம் பொதுக் கணக்குக் குழுக் கூட்டம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியிலே, பொதுக் கணக்குக் குழுவில் உறுப்பினராக உள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து அன்றைக்கு 5 இலட்சம் ரூபாயை அங்கேயே அறிவித்தார்கள். ஆக, இப்படி சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பெருமை தேடித் தந்த பெருமை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மிகுந்த பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அது மட்டுமல்ல, அதற்குப் பிறகு 2006–லே தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு—1996–லே அந்தப் புரட்சி. 2006–லே தளபதி அவர்கள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்து, இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்க்ளுடைய பளுவையெல்லாம் குறைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெரும்பாலான பணிகளை எல்லாம் மிகவும் சீராக்கி, எளிதாக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1997–லே அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கண்டார் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு ஊராட்சியைத்தான் தேர்வு செய்ய முடியும் என்ற நிலைமை அன்றைக்கு இருந்தது. அதைப் பொலிவுபடுத்தி, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற அனைத்து ஊராட்சிகளிலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் மேம்படுத்துகின்ற



திட்டத்தைக் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தி, இந்த ஆண்டு 2,534 ஊராட்சிகளிலே இரண்டாவது கட்டமாக எடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 10–00

இப்போது நமது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம் மட்டுமல்லாமல், 20 இலட்சம் ரூபாய்—ஓர் ஊராட்சிக்கு 20 இலட்சம் ரூபாய் என்கிற வகையிலே நிதி ஒதுக்கி, அது மட்டுமல்லாமல், 12–வது நிதிக் குழுவின்மூலமாகவும், இன்னும் பல்வேறு வகையான திட்டங்களின்மூலமாகவும் ஏறத்தாழ அந்த ஊராட்சிக்கு 20 இலட்சம் ரூபாய்க்குமேல் ஒரு கோடி ரூபாய் வரை நிதி தருகின்ற வகையிலே அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இன்றைக்குப் பயன்படுகின்றது. அதன்மூலம் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாமெல்லாம் தொகுதியிலே பெருமையுடன் வலம் வர முடிகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நம்முடைய பளு குறைக்கப்பட்டு இருக்கிறது.

அதுவும் இல்லாமல், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம், ஊரகப் பகுதிகளிலே மட்டும்தான் செயல்பட்டு வந்தது. ஆனால், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். பேரூராட்சிகளிலே இல்லாதிருந்த ஒரு கொடுமை. எங்கள் பக்கம் எல்லாம் பார்த்தீர்கள் என்றால், பக்கத்துக் கிராமத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், ஆதி திராவிட மக்களுக்கு இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் வரும். ஆனால் பேரூராட்சியிலே இருக்கின்றவர்களுக்கு அந்த நிலைமை இல்லாமல் இருந்தது. இப்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்மூலம் பேரூராட்சிகளிலே இருக்கின்ற ஏழை ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள அந்த அனுமதியையும் வழங்கி, பேரூராட்சிகளிலே இருக்கின்ற ஏழை ஆதி திராவிட மக்களைக் காப்பாற்றியிருக்கின்ற பெருமையும் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்லாமல், இந்தத் திட்டங்களை எல்லாம் கட்சியைப் பார்த்துச் செய்யவில்லை. அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் இவை பொதுவான திட்டங்கள்தான்.

அது மட்டுமல்லாமல், 1989—லே நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்ட அந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் எல்லாம் இப்போது மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டு மகளிர் பொருளாதாரத்தை, அவர்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்றுகின்ற வகையிலே இன்றைக்கு அவர்களுக்குப் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக, காஞ்சிபுரம் மாவட்டத்திலே 19,492 குழுக்கள் இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டு, தமிழகத்திலேயே முதல் மாவட்டமாகக் காஞ்சிபுரம் மாவட்டம் திகழ்கின்றது.

அது மட்டுமல்லாமல், இங்கே நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களும் அடிக்கடிச் சுட்டிக்காட்டுவதைப்போல, தமிழகத்தினுடைய குடியாட்சித் தத்துவத்தை உலகிற்கே எடுத்துக் காட்டிய பெருமைக்குரியவை உத்திரமேரூர் கல்வெட்டுகள்தான். அந்த வகையிலே, தமிழகத்திலே மிகச் சிறப்பான முறையிலே உள்ள அந்தக் கல்வெட்டுகளைப் பற்றி அடிக்கடி இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலேகூடக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், 73 ஊராட்சிகளைக்கொண்ட மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியம். அந்த ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை அந்தப் பகுதி மக்களிடையே 40 ஆண்டு காலமாக இருக்கிறது. 1989—1990—லேயும், 1996—2001—லேயும் இந்த அவையிலே நானேகூடச் சொல்லியிருக்கிறேன். அந்த 7 ஆண்டு காலத்திலே இந்த அவையிலே நான் வைத்த பல்வேறு கோரிக்கைகள், தொகுதியின் சார்பிலே வைக்கப்பட்ட கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரே ஒரு கோரிக்கை, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை மட்டும் இன்னும் நிலுவையிலே இருக்கின்றது. அதை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலித்து, அதை இரண்டாகப் பிரித்துத் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், சாலவாக்கம் பகுதியிலே சார் பதிவாளர் அலுவலகம் ஒன்று 20 ஆண்டு காலமாக இயங்கி வந்தது. கடந்த ஆட்சிக் காலத்திலே 2003—லே அந்த சார் பதிவாளர் அலுவலகம் மூடப்பட்டுவிட்டது. எனவே, அதை உடனடியாகத் திறக்க வேண்டும்.



அதைப்போலவே, நம்முடைய வாலாஜாபாத், காஞ்சிபுரத்திலிருந்து தனித் தாலுகாவாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் அந்தப் பகுதி மக்களிடையே இருக்கின்றது. எனவே, அதையும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—05*

இங்கே நம்முடைய தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற பிரச்சினைகளையெல்லாம், நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையிலே இருக்கின்ற அந்தக் குறைகளையெல்லாம் போக்குகின்ற வகையிலே தொடர்ந்து அவர் ஈடுபட்டதன் காரணமாக, இன்று ஊரக வளர்ச்சித் துறையிலே 12,365 ஊராட்சி உதவியாளர்கள் கால முறை ஊதியத்திலே பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

அதைப்போல, ஒன்றிய அடிகுழாய் பொருத்துநர்கள் 1,110 பேர் கால முறை ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால், இதிலே இன்னும் ஒரு குறை. அந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலே தொழில்நுட்ப உதவியாளர்களாக அவர்கள் 1988—லேயிருந்து இன்றைக்கு வரைக்கும் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை அந்தப் பணி மேற்பார்வையாளர் பணியிடங்களிலே நிரப்புகின்ற வகையிலே அரசு உத்தரவினைப் பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மிகச் சிறப்பான இந்த ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிருவாகத் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த நம்முடைய அவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெறுகின்ற விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்பை அளித்த தங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஒரு தேசத்திற்குள் இன்னொரு தேசம் நிர்வாகம் செய்வதுபோல, தமிழக மக்களில் 60 முதல்

70 விழுக்காடு மக்களுக்குப் பணியாற்றுகின்ற துறையாக நம்முடைய உள்ளாட்சித் துறையை நல்லாட்சியாகச் செயல்படுத்துகின்ற மாண்புமிகு அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாகப் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சித் துறையில் எத்தனையோ பாராட்டுகின்ற அம்சங்கள் இருந்தாலும், எத்தனையோ போற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் இருந்தாலும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இவ்வளவு காலமாக, ஜனநாயக மறுப்பு என்று தமிழகத்திலே ஒரு நிலை இருந்தது. அந்த ஜனநாயக மறுப்புகளை எல்லாம் மாற்றியமைத்து, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, கொட்டக்காச்சியேந்தல், நாட்டார்மங்கலத்திலே ஜனநாயகத்தை நிலைநாட்டி, ஆதி திராவிட மக்களுக்கு அந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுத்த உள்ளாட்சித் துறை அமைச்சரை மனமார, நெஞ்சாரப் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துணிச்சலான நடவடிக்கைக்கு உறுதுணையாக இருந்து ஆணையிட்ட நம்முடைய முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அங்கே அந்த இரு சமூக மக்களுக்கும் எந்தவொரு கசப்புணர்வும் இல்லாமல், எந்தச் சேதாரமும் இல்லாமல், எந்த வழக்குகளும் இல்லாமல், அவர்களுடைய திறமையை வெளிப்படுத்தி, இவ்வளவு காலமாக எதிரும், புதிருமாக இருந்த அந்தச் சமூக மக்களைத் தாயாக, பிள்ளையாக, அவர்களுடைய பணியிலே அந்த மக்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு வழிவகுத்த அமைச்சரவையையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எவ்வளவோ திட்டங்களைத் தீட்டி வருகிறார் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள். எப்படி இந்தியப் பெருநாட்டிற்கு முதன்மை முதலமைச்சராக நம்முடைய முதலமைச்சர் இருக்கிறாரோ, அப்படி இந்தியாவில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணமாக இன்று நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவருடைய பணிகளைச் செய்து வருகிறார்.

அப்படிப் பார்க்கும்போது, எவ்வளவோ நலத் திட்டங்களைத் தீட்டி வருகிறீர்கள். இந்தத் திட்டங்களை எல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகளை வைத்துத்தான் நாம் செயல்படுத்த முடியும். அப்படி



இருக்கும்போது, தமிழகத்திலுள்ள வட்டார வளர்ச்சித் துறை அதிகாரிகள்—Block Development Officers—எந்த அளவிற்கு இந்தப் பணிகளைச் செய்யப் போகிறார்கள் என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. வயதான காலத்தில் அவர்கள் ஓய்வெடுக்க வருவதுபோன்று அந்தத் துறைக்கு B.D.O.வாக வருகிறார்கள். அவர்களால் நீங்கள் தீட்டுகின்ற திட்டங்களுக்கு ஈடு கொடுத்து வேலை செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. கடந்த காலத்திலே எப்படி E.O. என்று, Extension Officer-களை நியமித்தார்களோ, அப்படி இளைஞர்களை நீங்கள் அதிகாரிகளாக நியமிக்க வேண்டும். அந்த ஏழையெளிய கிராம மக்களுக்கு உங்களுடைய திட்டங்களை, நம்முடைய முதலமைச்சருடைய கனவுகளை வெளிப்படுத்தும்விதமாக அந்த அதிகாரிகள் செயல்பட வேண்டும். ஆகவே, உடனடியாக நீங்கள் இந்த Block Development Officer-களை நம்பாமல், உள்ளாட்சித் துறையிலே Assistant Director, Extension Officer போன்ற பதவிகளை உடனே நிரப்ப வேண்டும். எப்படிக் காவல் துறையிலே Sub-Inspector என்று தேர்வாணையத்தின்மூலம் எடுக்கிறார்களோ, துணைக் கண்காணிப்பாளர்கள் என்று எடுக்கிறார்களோ, கூட்டுறவுத் துறையிலே Co-operative Registrar என்று எடுக்கிறார்களோ, Commercial Taxes துறையில் A.C.T.O., C.T.O., என்று எடுக்கிறார்களோ, அப்படி உள்ளாட்சித் துறையிலே அதிகாரிகளை நாம் எடுக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே 30 Assistant Directors' backlog vacancies இருக்கின்றன. அவர்களை உடனே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நியமிக்க வேண்டும். அதிலே இவ்வளவு B.D.O.க்கள்—வட்டார வளர்ச்சி அதிகாரிகள் இருந்தாலும், ஆதி திராவிட மக்கள் மூன்று சதவீதம்கூட இல்லையென்ற ஒரு ஏக்கம் இருந்துகொண்டிருக்கிறது.

*முற்பகல் 10-10*

உள்ளாட்சித் துறையிலே நேற்றையதினம் பல புத்தகங்களை இங்கே அளித்தார்கள். இந்த மானியக் கோரிக்கையிலே அருமையான வரலாற்றுச் சிறப்பு மிக்க புத்தகங்களை நமக்கெல்லாம் வழங்கி இருக்கிறார்கள். தகவல் அறியும் உரிமைச் சட்டம், ஊராட்சித் தலைவர்களின் முகவரிகள், அவர்களுடைய தொலைபேசி எண்கள், எந்த ஊராட்சி மன்றத் தலைவரைத் தமிழகத்திலே தொடர்புகொள்ள வேண்டுமானாலும் ஒரு நிமிடத்திலே தொடர்புகொள்ளும் அளவுக்கு

உங்கள் துறையைச் சார்ந்த அதிகாரிகள் நல்ல வடிவமைப்பிலே புத்தகங்களைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் தமிழகத்திலே ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆதி திராவிட ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு ஓர் அச்சுறுத்தல் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. நீங்கள் பல திட்டங்களைத் தீட்டினாலும், நல்லாட்சி புரிந்தாலும், சில இடங்களிலே சில சங்கடங்கள் இருக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக, திண்டுக்கல் மாவட்டம், வாகரையிலே அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் உட்காரக்கூட அனுமதியில்லையென்ற ஒரு செய்தியை நாம் எல்லாம் கேள்விப்பட்டிருப்போம். இப்படிப்பட்ட அந்த sensitive பகுதிகளிலே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அனுப்பி, அங்கே என்ன நடக்கிறது என்பதை ஒவ்வொரு கூட்டத்திலும் ஆய்வு செய்ய நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12,618 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. 12,618 பஞ்சாயத்துக்களிலே மின்சாரத் தொகையைக் கட்டுவதற்குக்கூடப் பணம் இல்லாத பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால், பஞ்சாயத்துக்களில் வருகின்ற வருவாயில் 70 சதவிகிதம் தொகையை மின்சார வாரியத்திற்குப் பஞ்சாயத்துத் தலைவர்கள் கொடுக்கிறார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துக்களில் இருக்கும் அனைத்து மின்சாரக் கட்டணத்தையும் இரத்துச் செய்ய வேண்டும். இல்லையென்றால் 50 சதவிகிதமாக அதைக் குறைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே கலைஞருடைய ஆட்சியிலே ஒரு ரூபாய் 60 பைசாவாக இருந்தது. பிறகு வந்த ஆட்சியிலே ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 40 பைசாவாக உயர்த்திவிட்டார்கள். இதை நீங்கள் பழைய முறையிலே ஒரு ரூபாய் 60 பைசாவுக்குக் கொண்டு செல்ல வேண்டும். அப்படியில்லையென்றால், முற்றிலுமாக அதை இலவசமாகப் பஞ்சாயத்துக்கு நீங்கள் அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் எவ்வளவோ நல்ல திட்டங்களைத் தமிழக மக்களுக்குத் தீட்டி வருகிறார். தமிழகத்திலுள்ள 100 சதவிகித மக்களில் 70 சதவிகித மக்கள் அவர்களுடைய உள்ளாட்சியை நம்பித்தான் இருக்கிறார்கள். பயனாளிகளாக இருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களிலே பணம் இல்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு



பஞ்சாயத்துக்கும் இரண்டு இலட்சம் முதல் நான்கு இலட்சம் ரூபாயை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்கள் காசோலையிலே கையொப்பமிடும் அதிகாரத்தை அளித்திருக்கிறீர்கள். கடந்த ஆண்டில் எல்லாம் நீங்கள் பார்த்திருப்பீர்கள். தேர்தல் வருகிறது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி ஒட்டுமொத்தமாக வெற்றிபெறும் ஒரு நிலை தமிழகத்திலே ஏற்பட்டது. அப்போது அங்கிருந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் தன்னுடைய காசோலையைக் கிழித்துக்கொண்டு போனதாகப் பல பஞ்சாயத்துகளிலேயிருந்து புகார் வந்துகொண்டிருக்கிறது. அந்தக் காசோலைகளை வேறுவிதத்தில் பயன்படுத்தியதாகப் புகார் இருக்கிறது. உடனே நம்முடைய அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடம்—அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற அதிகாரிகள், ஒன்று, இணையாகக் கையொப்பமிட வேண்டும்; இல்லையென்றால் அந்தத் தொகையை எப்படிச் செலவு செய்கிறார்கள் என்று கண்காணிக்க வேண்டும். சுடுகாடுகளை (மணியடிக்கப்பெற்றது) இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

சுடுகாடுகளைப் பற்றியெல்லாம் இங்கே பேசுவதற்கு நிறைய நேரம் தேவைப்படுகிறது. நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்கூட நாவல் எழுதியிருந்தார். திரைப்படம் எடுத்திருந்தார். ஆனால், பெரியார் வாழ்ந்த பூமியிலே, 21 ஆம் நூற்றாண்டிலே, பெரியாரின் வாரிசாக இருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞர் அவர்களுடைய ஆட்சியிலே சில சங்கடங்கள் ஆங்காங்கே இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால், தமிழகத்திலே மயானம் இருக்கிறது. மயானம் இருந்தால் பாதை இல்லை. பாதை இருந்தால் அந்தப் பாதையிலே எடுத்துச் செல்வதற்கு அனுமதி இல்லை. இப்படிப்பட்ட ஒரு நிலை தமிழகத்திலே ஒரு சில இடங்களிலே இருக்கின்றது. குறிப்பாகச் சொல்லப் போனால், கடலூர் மாவட்டத்திலே சேடப்பாளையம் பகுதியிலே அங்கே ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு பெரியவர் இறந்துவிட்டார். அவருக்கு இறுதியஞ்சலி செலுத்துவதற்குக்கூட, அவரைப் புதைப்பதற்குக்கூட அங்கு அனுமதி இல்லாமல் வீட்டின் பின்புறமாக, காவல் துறையே அதை ஏற்பாடு செய்து இருக்கிறது. அப்படி, மயானம் இருந்தால் சாலை இல்லை. சாலை இருந்தால் அனுமதி இல்லை என்கிற ஒரு நிலையை மாற்றி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டம் தீட்டி, எந்த மக்கள் இறந்தாலும், குறிப்பாக, ஆதி திராவிட மக்கள் இறக்கின்ற காலங்களில், அவர்களை நல்ல முறையில் அடக்கம் செய்வதற்கு

[திரு. கு. செல்வம்] [2007 ஏப்ரல் 12

மயானம் அமைப்பதும், பாதை அமைத்துக் கொடுப்பதும், அந்தப் பாதையில் செல்வதற்கு இடையூறாக இருப்பவர்களை ஒடுக்குவதும் என்ற நடவடிக்கையிலே நீங்கள் இறங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

அதேபோன்று, ஆதி திராவிடத் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்று நம்முடைய அமைச்சர் அவர்களை நாங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டோம். எந்த இடத்தில் இருக்கிறது என்று கேட்டார்கள். கடலூர் மாவட்டத்திலே இப்படிப்பட்ட ஒரு நிகழ்வு நடந்து இருக்கிறது. வடக்கு மேலூரிலே ஓர் ஆதி திராவிடர், ஊராட்சிப் பெண் தலைவராக இருக்கிறார். அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்று நாங்கள் தொலைபேசியிலே சொன்னோம். உடனே நம்முடைய அமைச்சர் அவர்கள், முதலமைச்சரிடத்திலே நான் பேசுகிறேன் என்று சொல்லி, 12 மணி நேரத்திற்குள்--அந்தப் பெண் ஊராட்சி மன்றத் தலைவர் சென்னையிலே எங்களிடம் வந்து புகார் கொடுத்த 12 மணி நேரத்திற்குள், இங்கே முதல்வரிடம் ஆணை வாங்கி, அவர் வீடு செல்வதற்கு முன்பாக, துப்பாக்கி ஏந்திய காவலரை அங்கே நியமித்த உள்ளாட்சித் துறை அமைச்சரை நெஞ்சாரப் பாராட்டுகிறோம். தென் மாவட்டங்களில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வம், quick ஆக உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** பஞ்சாயத்துத் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். கோவில்பட்டி அருகிலே ஒரு பஞ்சாயத்துத் தலைவரை, அவர் வெற்றிபெற்றார் என்பதற்காக ஆதிக்க சக்திகள் சொலை செய்து இருக்கின்றன. இந்த நடவடிக்கையிலே ஈடுபடுபவர்களை நம்முடைய அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும். 40 மருத்துவமனைகள் உள்ளாட்சித் துறையிலே இருக்கின்றன. அந்த 40 மருத்துவமனைகளை சுகாதாரத் துறையிலே நாம் சேர்க்க வேண்டும். சுனாமி ஆழிப் பேரலை வந்தபோது, அதற்கு எப்படி நம்முடைய தமிழக அரசு இப்போது ரூ.2.10 இலட்சத்திலே வீடு கட்டிக் கொடுக்கிறதோ. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன். (குறுக்கீடு)

**திரு. ம. குணசேகரன்:** Point of order, Sir.



2007 ஏப்ரல் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) செல்வம், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** ஒரே நிமிடம். Sensitive பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுத்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. கே.பி. அன்பழகன், உட்காருங்கள்.

**திரு. கு. செல்வம்:** நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஊராட்சி மன்றப் பெண் தலைவர்களுக்கு, தலைவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு 2 அல்லது 4 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

***திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டு மக்களுக்கு நேரடியாக அவர்களின் சுக, துக்கங்களில் நிற்கின்ற துறை உள்ளாட்சித் துறை. ஒரு சில கட்சிகள் தங்களுடைய வாரிசுகளை இந்தத் துறையிலே நியமிக்கின்ற சூழ்நிலை உள்ள இந்தத் தமிழகத்தில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரிசுகள் இருக்கிற காரணத்தால் வாரிசுகளை நியமிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. கே.பி. அன்பழகன்:** எங்கேயோ குக்கிராமத்தில் பிறந்த சாதாரணத் தொண்டனான என்னைக் கடந்த ஆட்சிக் காலத்தில் இந்த உள்ளாட்சித் துறைப் பதவியில் அமர வைத்து, சுதந்திரமாகச் செயல்பட வைத்த கருணைக் கடல், தாயுள்ளத்தின் தலைமகள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் உண்மைக்கு மாறாகப் பல்வேறு கருத்துகளை அவையில் நேற்றுத் தெரிவித்தார். கடந்த காலத்தில் உள்ளாட்சித் துறை சரிவரப் பராமரிக்கப்படவில்லை என்று கூறினார். சென்னை மாநகரத்தில் மட்டும் ஒரு மணி நேரம் மழை பெய்தால், தெருக்கள் குளம்போல் காட்சியளித்தன. பூங்காக்கள் காய்ந்து இருந்தன. சீரான சாலை வசதி இல்லை. சென்னை மாநகரத்தின் உட்புறப் பகுதியில் இரவு நேரத்தில் இருள் சூழ்ந்து இருந்தது. தெருக்களில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது. இந்த நிலை, கடந்த கால 1996–2001—தி.மு.க. ஆட்சியிலே இருந்தது. அன்றைய மேயர் இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர். இந்த நிலையை மாற்றி, மழைக் காலங்களில் மழை நீர் வழிந்தோடக் கால்வாய் அமைத்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தரமான சாலை வசதி ஏற்படுத்தித் தந்தது அம்மா அவர்கள். பூங்காக்களைப் பூத்துக் குலுங்குகின்ற பூஞ்சோலைகளாக மாற்றி, உட்புறப் பகுதிகளைச் சூழ்ந்திருந்த இருளை நீக்கி, ஒளி ஏற்படுத்தி, உயர் கோபுர மின் விளக்கு அமைத்து, சாலை நடுவில் வகிடு எடுத்தாற்போல், பூங்காக்களோடு தடுப்புச் சுவர் அமைத்து, பசுமை நகர் என்று பெயர்பெற்ற பெங்களூரைப் பின்னுக்குத் தள்ளி, சீரழிந்து இருந்த சென்னையைச் சீர்படுத்தி, செப்பனிட்டு, சென்னைக்கு சிறப்புச் சேர்த்தவர் எங்கள் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அனைவரும் அறிந்ததே. இதை ஏதோ சிவபுண்ணியம் மறைக்கப் பார்க்கின்றார். (குறுக்கீடு)

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சிவபுண்ணியம்? சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்மேல் குற்றச்சாட்டுச் சொன்னால், அவர் பதில் சொல்லத்தான் செய்வார். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் ஓர் உறுப்பினர் பேசுகிறபொழுது இன்னொரு உறுப்பினருடைய பெயரைக் குறிப்பிட்டுப் பேசினால், பெயர்



குறிப்பிடப்பட்ட அந்த உறுப்பினருக்கு எழுந்து விளக்கம் சொல்ல உரிமை உண்டு. அதைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் பேசுகிறபொழுது, நான் நேற்றுப் பேசிய பேச்சுக்களுக்கு விளக்கம் தருகிறார். அதிலே குறிப்பாக, அவர்களது ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சித் துறை சுதந்திரமாகச் செயல்பட்டது என்று சொல்கிறார். நான் நேற்றுப் பேசுகிறபொழுது சொன்னது, இவர் அதனுடைய அமைச்சராக—துணை அமைச்சராகத்தான் இருந்தாரே தவிர, நேரடியான அமைச்சராக இல்லை. காரணம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் என்றுதான் இருந்தாரே தவிர, தனித் துறையாக அவர்களுடைய ஆட்சியில் செயல்படவில்லை என்பதைத்தான் நான் நேற்றுச் சொன்னேன். அதை அவரால் மறுக்க முடியுமா? இரண்டாவது, எல்லாக் காலங்களிலும் சிறப்பாக அவர்களுடைய ஆட்சி பணிபுரிந்ததாகவும், சென்னை நகரிலே மழைக் காலங்களில் வடிகால்கள் எல்லாம் சிறப்பாக இருந்ததாகவும் சொன்னார். இவர்கள் ஆட்சிக் காலத்தில் மழையே பெய்யவில்லை என்பதுதான் உண்மையான காரணம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன், நீங்கள் மற்றவர்கள்மீது குற்றச்சாட்டுச் சொல்லாதீர்கள். உங்கள் கொள்கைக் குறிப்புகளை மட்டும் சொல்லுங்கள். வாயைக் கொடுத்து வம்பை இழுக்காதீர்கள். பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை சிவபுண்ணியம் தருகிறார். அவ்வளவு நேரம் பேசலாமா என்கிறார்கள். அதை நீங்கள் வேண்டுமானால் கேட்கலாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கேட்கக் கூடாது. விளக்கம் என்ற பெயரிலே மணிக்கணக்கிலே இங்கே மந்திரிகளும், உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். சில ஜால்ராக்களை இங்கே உட்கார வைத்துக்கொண்டு எங்கள் பேச்சுக்களை மறுத்தது எங்களுக்குத்தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், செங்கோட்டையன். அன்பழகன் பேசுகிற time-ல்தான் இதையெல்லாம் எடுப்பேன். ஞாபகம் வைத்துக்கொண்டு பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் அப்படிப் பேசினார்கள் என்று சொன்னால், இன்றையதினம் இவர்கள் பேசுவதை எப்படி ஜால்ராக்கள் இல்லையென்று நீங்கள் மறுக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அன்பழகன், பேசுங்கள். நீங்கள் subject-க்கு உள்ளே பேசுங்கள். வீணாகச் சுற்றிச் சுற்றி வராதீர்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பு, கோரிக்கை எண் 42, பக்கம் 49–ஐ மட்டும் பார்த்திருப்பார் என்று நினைக்கின்றேன். அதனால்தான், 31–3–2006 வரை மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ. 3 கோடி மட்டும் என்று சொல்லிவிட்டார். அதே புத்தகத்தில் பக்கம் 46–ல் 4.3–ஐ அவர் படித்திருந்தால் நன்றாகத் தெரிந்திருக்கும். தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டமானது 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம் 2–2–2006–ல் 6 மாவட்டங்களில் தொடங்கப்பட்டது என்று இருக்கிறது. மார்ச் மாதத்தில் தேர்தல் அறிவிப்பு வந்துவிட்டது. 20 நாட்களிலே 3 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்றால், இன்று மேலும் செலவழிக்கப்பட்டு இருப்பதாக அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருப்பது, அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆரம்பித்து வைத்த காரணத்தினால்தான், மீதம் இருக்கின்ற தொகை தொடர்ந்து இன்று வேகமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, உள்ளாட்சித் துறைகள் கடந்த கால ஆட்சியில் பழிவாங்கப்பட்டன என்று பல்வேறு குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். 1997–லேயிருந்து 2001 காலத்திற்குள்ளாக, மாநில நிதிக் குழுப் பரிந்துரையின்படி வழங்க வேண்டிய தொகை ரூபாய் 204.44 கோடியை ஊராட்சிகளுக்கு வழங்க இயலாமல் விட்டுச் சென்ற அரசுதான் முந்தைய தி.மு.க அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) 2004–2005–ல் மாநில நிதிக் குழு மானியம் ரூபாய் 398.26 கோடி முழுமையாகக் கிராம



ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டது. அதற்குமேலும், கிராம ஊராட்சிகள் செலுத்த வேண்டிய நிலுவை மின் கட்டணத்திற்கு ரூபாய் 198.29 கோடியை சிறப்பு நிதியாக அரசு கூடுதலாக ஒதுக்கீடு செய்து, இந்தத் தொகையினைத் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மார்ச் 2005–லே மாண்புமிகு அம்மா அவர்கள் செலுத்தியுள்ளார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 91–ல் உலக வங்கி உதவிபெறும் 'வாழ்ந்து காட்டுவோம் திட்டம்' 6 ஆண்டு காலம் செயல்படுத்தப்படும், நிதி ஒதுக்கீடு 717 கோடி ரூபாய் என்று இன்று இருக்கின்றதே, அந்தத் திட்டம் நவம்பர் 2005–லே மாண்புமிகு அம்மா அவர்களால் புது வாழ்வுத் திட்டம் என்று ஆரம்பிக்கப்பட்டது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், நமக்கு நாமே திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதாக நம்முடைய ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தார். அந்த நமக்கு நாமே திட்டத்தைத் தன்னிறைவுத் திட்டம் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) 200 கோடி ரூபாயைக் கடந்த ஆட்சிக் காலத்திலே ஒதுக்கியிருக்கின்றார்கள். 2005–2006–ல் மட்டும் ரூபாய் 100 கோடியை ஒதுக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2006–2007–லே அந்தத் திட்டமானது இல்லை. 2007–2008–லும் அந்தத் திட்டம் அறிவிக்கப்படவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் நெடுஞ்சாலைத் துறைக்கும் சேராமல், ஊராட்சிக்கும் சேராமல் இருந்த வகைப்படுத்தப்படாத சாலைகளை 300 கோடி ரூபாய் செலவில் சீர் செய்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்து, அதற்கு மொத்த நிதியாக 400 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, 6,348 கிலோ மீட்டர் செப்பனிடப்பட முடிவு செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 1,744 கிலோ மீட்டர் நீளத்திற்கு 1,204 சாலை வேலைகளை ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து செலவழித்தது புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினத்திலே 1,543.32 கிலோ மீட்டர் நீளத்திற்கான 889 சாலைகள்--பக்கம் 67–ல் குறிப்பிடப்பட்டுள்ளது--அம்மா அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, அன்று நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 6,348 கிலோ மீட்டரில் மீதம் உள்ள 3,061 கிலோ மீட்டர், நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக அந்தப் பணிகள் செய்யப்பட்டன என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும், உலக வங்கி நிதியுதவியுடன் மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் 19–10–2005 அன்று தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ரூ.1,350 கோடி உலக வங்கி நிதியிலும், மீதம் ரூ.575 கோடி மாநில அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுடைய நிதியிலிருந்தும் செயல்படுத்தப்படும். இந்தத் தொகை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர் வழங்குதல், பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலை வசதி மற்றும் பேருந்து நிறுத்த மேம்பாடு, சாலை மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் அமைத்தல் போன்ற பணிகளுக்குச் செலவிடப்படும். மானியக் கோரிக்கை எண் 34. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினர் முன்னாள் அமைச்சராக இருந்தவர். எழுதிக்கொண்டு வந்து பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) ஒதுக்கீடு செய்யப்பட்டது, முடிவு செய்யப்பட்டது, நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டது என்று சொல்கிறாரே தவிர, முடிக்கப்பட்டது என்று எதைச் சொல்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் இதை எழுதிக் கொடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. இங்கே உங்கள் குறிப்பில் இருக்கின்றதை உங்களுக்கு எடுத்துக் காண்பிக்கின்றேன். இதை ஓர் ஆரோக்கியமான விவாதமாக எடுத்துக்கொண்டு, இதில் இருக்கின்ற குறைகளைக் களைய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அந்த பேப்பரை அடுத்தவரிடம் கொடுத்துவிட்டு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.பி. அன்பழகன்:** Number எல்லாம் சொல்ல வேண்டாமா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மானியக் கோரிக்கை எண் 34, பக்கங்கள் 27, 28, 29, 30, 31, 32, 33 ஆகியவற்றில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திற்கான விளக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதில்தான் நம்முடைய ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு கோபிநாத் அவர்கள், எங்களுடைய பேருந்து நிலையத்திற்கு நிதி கேட்டவுடனேயே இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் வழங்கினார் என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தின்கீழ் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றையதினத்தில் சேர்த்த காரணத்தினால் இன்று உடனே நிதி வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இவையெல்லாம் ஓர் ஆட்சி மாற்றம் வருகின்றபோது நடப்பது சகஜம்.

அதேபோல, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கின்றேன். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கிராமப்புறங்களில் இருந்த 39,796 கையிறைப்பான்களை சிறு மின்னிறைப்பான்களாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றினார்கள். அதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. ஒன்று, தாய்மார்கள் ஒரு நாள் முழுவதும் பணியில் இருந்துவிட்டு, அந்தக் கையிறைப்பான்கள்மூலம் தண்ணீர் அடிப்பது சிரமமாக இருக்கிறது என்ற காரணத்திற்காகவும், நிலத்தடி நீர் 100 அடிக்குமேல் கீழே போனால் கையிறைப்பான்களின்மூலமாக அந்தத் தண்ணீரை எடுக்க இயலாது என்பதற்காகவும் ஆயிரம் லிட்டர்கொண்ட சிறு மின்னிறைப்பான்களை 39,796 இடங்களிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து ஆண்டு காலத்திலே நிறுவினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.200 கோடி. ஆனால் இன்றையதினத்திலே அது நிறுத்தப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் நிதி, பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து அது போடப்படுகிறது. ஆனால் அரசுமூலமாக சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்து அதைப் போடவில்லை. இப்போது நிலத்தடி நீர் குறைந்துகொண்டேயிருக்கின்ற காரணத்தினால், 100 அடிக்கு மேல் கையிறைப்பான் பைப்புகள்மூலமாக இறைக்க முடியாத

காரணத்தினால், அதை ஆய்வு செய்து, அவற்றை நிறுவ வேண்டுமென்று இன்றையதினத்திலே கோரிக்கையாக வைக்கின்றேன்.

*முற்பகல் 10–30*

மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் நேற்றையதினம் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தைப் பற்றி, ஒரு பெரிய ஊழல் நடந்துவிட்டதைப்போல இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டமானது, பயனாளிகளைத் தேர்வு செய்து--மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அதே நேரத்திலே, அந்தத் திட்ட அலுவலர்களும், குறிப்பிட்ட ஊராட்சிகளுக்கு எத்தனை வீடுகள் என்று பரிந்துரை செய்கின்றார்கள். அல்லது வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கின்றவர்களை, அவர்களிடம் பட்டியல் இருந்தால் அவர்களுக்கு நேரடியாக யார், யாருக்கு என்று தெரிவிக்கின்றார்கள். இதில் ஏதோ கடந்த அரசு ஊழல் செய்துவிட்டதாக ஒரு மாயையை ஏற்படுத்தி, அதை இங்கே ஒரு பெரிய பலூனைப்போல ஊதிப் பெருக்க வைக்கப் பார்க்கின்றார். ஆனால், அது வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் பட்டியலில், உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே பக்கம் 42 மற்றும் பக்கம் 43–ல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்படும் என்று கூறியிருக்கின்றீர்கள். அதை அவர்கள் பார்த்துவிட்டு. . . (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்)

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் பேசுகின்றபோது என் பெயரைச் சொல்லி (குறுக்கீடுகள்) என் பெயரைச் சொல்லி, நான் ஒரு கருத்தைச் சொன்னதாக அவர்கள் இந்த அவையிலே பதிவு செய்ததால், உடனடியாக எழுந்து பதில் செல்ல வேண்டிய உரிமை எனக்கு இருக்கிறது. அந்த உரிமையை நீங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பலூனை ஊதி, ஊதிப் பெரிதாக்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஊத வேண்டிய இடத்திலே நான் இல்லை. ஊத வேண்டிய



அவசியமும் இல்லை. மேஜையைத் தட்டிப் பதவியைக் காப்பாற்ற வேண்டிய அவசியமும் இல்லை. செருப்பைக் காட்டிப் பதவியைக் காப்பாற்ற வேண்டிய அவசியமும் எனக்கில்லை. எதையும் ஊதிப் பெரிதாக்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. நான் சொல்ல வந்த கருத்து என்னவென்றால், கடந்த ஆண்டுகளில், கடந்த மூன்று (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பெயரைக் குறிப்பிட்டதனாலேதான் அவர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். அவர் பெயரைக் குறிப்பிட்டதனாலே பேசுகிறார். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** யாரையும் நான் சொல்லவில்லையே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், சொல்வதை ஒரு வரியில் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு, கடந்த ஆண்டுக்கு முந்தைய ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டு, நான் நம்முடைய மாண்புமிகு இங்கே இருக்கின்ற முன்னாள் அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதாவது, தொகுப்பு வீடுகள் எப்படி வழங்கப்பட்டன என்பதெல்லாம் ஆவணங்களிலே இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயிருக்கின்ற ஆவணங்களை நீங்கள் எடுத்துப் பார்த்தால், வறுமைக் கோட்டின் எல்லைக்குக்கீழே உள்ளவர்களுக்கு அந்த வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா அல்லது ஒவ்வொரு கிராமத்திற்கும், பஞ்சாயத்திற்கும் முறையாக விநியோகம் செய்யப்பட்டிருக்கிறதா, இதை எல்லாம் (குறுக்கீடுகள்) ஆவணங்கள்மூலமாகச் சரிபார்த்துக்கொள்ளலாம். நான் என்ன (குறுக்கீடுகள்) இதிலே வந்து (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, திரு. ஜெயக்குமார், உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள்.

[2007 ஏப்ரல் 12

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** கூச்சல் போட்டு, சத்தம் போட்டு இங்கே நியாயத்தையும், உண்மையையும் மறைத்துவிட நினைத்தீர்கள் என்று சொன்னால், ஒரு நாளும் மறைக்க முடியாது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. அன்பழகன், பேசுங்கள். *(குறுக்கீடு)* சரி, சொல்லுங்கள். சொல்லி முடியுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஆகவே, எந்த மேடையிலும், எந்த விவாத அரங்கிலும், இந்த இந்திரா நினைவுக் குடியிருப்பு வீடுகள் வழங்கப்பட்டது, கடந்த 3 ஆண்டுகளிலே மிக முறைகேடாக வழங்கப்பட்டது என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதை நான் சந்திக்கத் தயாராக இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. அன்பழகன், சொல்லுங்கள்.

*முற்பகல் 10–35*

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே 1,87,205 வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அவர் சொல்வதுபோல் அந்த வீடுகளில் முறைகேடுகள் நடந்திருந்தால், அதை எங்கும் சந்திக்கத் தயார் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் இந்த அரசுக்கு, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1984–85 ஆம் ஆண்டு முதல் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளில் பழுதடைந்த வீடுகளில் கடந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 1,02,659 வீடுகள் பழுதுபார்க்கப்பட்டன. இன்றையதினத்திலே கச்சா வீடுகளுக்குக் கூடுதலாக நிதி வழங்கி, கிராமப்புறங்களிலே இருக்கின்ற அந்த வீடுகளை மேன்மைப் படுத்துவதற்காக இந்த அரசு தனியாக நிதி ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் இரண்டொரு சந்தேகங்கள் இருக்கின்றன, அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். *(குறுக்கீடு)*



2007 ஏப்ரல் 12]

**திரு. கே.பி. அன்பழகன்:** கோரிக்கை எண் 42. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You have taken more time. மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா. *(குறுக்கீடுகள்)* திரு. அன்பழகன், நன்றி சொல்லி முடியுங்கள். உங்களுக்கு இவ்வளவு நேரம் கொடுத்ததற்கு நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 62–ல், குறிப்பிடத்தக்க வகையில் நிதியாதாரங்களை ஒதுக்கி என்றில்லாமல் ஒருமுகப்படுத்தி என்றும், பக்கம் 63–ல், "இதர திட்டங்களுடனும் இயன்ற அளவு ஒருங்கிணைத்து" என்றும் இருக்கிறது. ஆகவே, இந்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குத் தனியாக மாநில அரசு நிதி ஒதுக்குகிறதா அல்லது மற்ற திட்டங்களுடன் சேர்த்துச் செயல்படுத்துகிறதா என்பதை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவுரையில் சொன்னால் போதும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. Anbalagan, உரையை முடியுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** அது சம்பந்தப்பட்டதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** அதே நேரத்தில், விளையாட்டு மையங்களை ஊராட்சிகள் பராமரிக்க ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் பத்தாயிரம் தலைவருக்கு அனுமதி என்று பக்கம் 65–ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை எந்த நிதியிலிருந்து செயல்படுத்துவது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை எண் 42–ல் நான் பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த எங்கள் சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர். . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அனுமதியில்லை.

**திருமதி டி. யசோதா:** அருமைச் சகோதரர் [illegible] டி. சுதர்சனம் அவர்களுக்கும், அனுமதி அளித்த தங்களுக்கும் [illegible] நன்றியையும் வணக்கத்தையும் கூறி, என்னுடைய உ[illegible]யைத் துவக்குகிறேன்.

D
V211, 31 P07
P07. 27. 2
227655
Madras-600 006

*"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"*

என்ற குறளுக்கேற்ப, தமிழகத்தின் முதல்வர் அவர்கள், ஒரு திறமை மிக்கவரை இந்த உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சராக நியமித்து இருப்பதற்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்ற பழமொழிக்கு உதாரணமாக, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கியிருக்கின்ற இந்தக் கோரிக்கை எண் 42-ஐ உருவாக்கித் தருவதில் அவருக்கு உதவியாக இருந்த அரசுச் செயலாளர்களுக்கும், இயக்குநர்களுக்கும், அதிகாரிகளுக்கும் முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிக்கிறேன்.

நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், மிக விரைவாக என்னுடைய கருத்துகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடு சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்தக் காலக்கட்டத்தில் மத்திய, மாநில அரசுகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக ஏராளமான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றன. கடந்த காலங்களில் மத்திய அரசை மதவாத சக்திகள் ஆதிக்கம் செலுத்திய காரணத்தினால், வளர்ச்சித் திட்டங்களுக்குச் செய்ய வேண்டிய செலவுகள் அனைத்தும் மதவெறி அரசியலுக்கு முக்கியத்துவம் தரப்பட்ட காரணத்தினால், அந்தத் தொகைகள், அந்தப் பகுதிக்குச் செலவிடப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைக்கப்பட்டு, மத்தியிலே காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி அமர்ந்த பிறகு வளர்ச்சித் திட்டங்களுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டது. மத்தியிலே அன்னை சோனியா காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலோடு, டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்த பிறகு, தமிழகத்திலே கலைஞர் தலைமையிலே அமைந்துள்ள நல்லாட்சியின்மூலமாக இன்றைக்குப் பல்வேறு மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் திட்டங்களான தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம், தேசிய ஊரக சுகாதார இயக்கம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுமலர்ச்சித் திட்டம், விரிவுபடுத்தப்பட்ட அனைவருக்கும் கல்வித்



திட்டம், பாரத் நிர்மாண் திட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகியவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசின் திட்டங்களை இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், மாநிலத்தின் வளர்ச்சியிலே மத்திய அரசுக்கு இருக்கின்ற அக்கறையை வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் எனது நோக்கமாகும்.

முற்பகல் 10-40

மத்திய அரசு தமிழகத்தின் வளர்ச்சிக்குத் தனது பங்களிப்பைச் செய்து வருகிறது. அதேபோல, மத்தியிலே அமைந்துள்ள ஆட்சிக்கு, கலைஞர் தலைமையிலே அமைந்துள்ள ஆட்சி தனது பங்களிப்பையும் தவறாது செய்து வருகின்றது. இதன் காரணமாக, மத்திய, மாநில உறவுகள் சிறப்பாக இருக்கின்ற காரணத்தினாலே, இங்கே பல திட்டங்கள் வருவதற்கு உரிய வாய்ப்புகள் அற்புதமான சூழ்நிலையிலே உருவாகி இருக்கின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதன்மூலமாக, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகம் உருவாக முடியும் என்கின்ற என்னுடைய நம்பிக்கையை இங்கே நான் பதிய வைக்க விரும்புகின்றேன்.

இந்தியாவின் மக்கட்தொகையில் 72 சதவிகிதம் மக்கள் கிராமப்புறங்களிலே வாழ்வதால், பெரும்பாலான திட்டங்கள் ஊரகத் தன்மை கொண்டவையாக இருக்கின்றன. தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்கு அல்ல. 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி 3.62 கோடி மக்கள், அதாவது 58 சதவிகித மக்கள் ஊரகப் பகுதியிலே வாழ்ந்து வருகிறார்கள். ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றுவதன்மூலமாகத்தான் கிராமப்புறங்களிலே நிலவுகின்ற வறுமையை ஒழிக்க முடியும்.

கடந்த காலத்திலே வறுமையை ஒழிக்கப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஆனால், வறுமை ஒழியவில்லை. கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன. கிராமப்புறங்களிலே வறுமை ஒழியவில்லை. இதற்கு என்ன காரணம்? மத்திய அரசு ஒதுக்குகின்ற நிதி 6 ரூபாய் என்றால், கிராமப்புறத்திலே வாழ்கின்ற பயனாளிகளிடம் ஒரு ரூபாய்தான் போய்ச் சேருகிறது. 5 ரூபாய் எங்கே போகின்றது என்று சொன்னால், இடைத்தரகர்களிடம் அந்த 5 ரூபாய் போய்விடுகிறது. இந்த இடைத்தரகர்களுக்கும், அதிகார வர்க்கத்திற்கும் என்ன தொடர்பு என்பதைக் கண்டுபிடித்து, இவர்களை அப்புறப்படுத்தினால், நிச்சயமாக வறுமையை நம்முடைய தளபதி அவர்களுடைய காலத்திலேயே ஒழிக்க முடியும் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம். இந்த இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்மூலமாக, குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தொகுப்பு வீடுகள். தொகுப்பு வீடுகள், இன்றைக்கு ஒரு வீடு கட்டுவதற்கு 37,000 ரூபாய். அது இப்பொழுது இருக்கின்ற விலைவாசிக்கு ஏற்புடையதாக இருக்காது, போதாது. நம்முடைய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் அதைக் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாயாகக் கொடுக்க வேண்டும் ஒரு வீட்டிற்கு என்று சொன்னார். நான் ரூபாய் ஒரு இலட்சத்திற்குப் போகவில்லை. 50,000 ரூபாய் கொடுத்தால்கூட அந்தத் தொகுப்பு வீடுகள் இன்னும் சிறப்பாக அமைவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக ஒரு பஞ்சாயத்திற்கு 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து—ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும்—வரும் 5 ஆண்டு காலத்தில் எல்லாப் பஞ்சாயத்துக்களும் நிறைவுபெற்று, அவர்கள் தன்னிறைவு அடையக்கூடிய ஒரு சூழ்நிலைமைக்கு இன்றைக்கு நீங்கள் திட்டத்தைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறீர்கள்.

ஒரு பஞ்சாயத்திற்கு 10 தொகுப்பு வீடுகள் தந்தால், 5 வருடத்திற்கு அந்தப் பஞ்சாயத்துக்கு மறுபடியும் வீடு கிடையாது. அதை முதலிலே மாற்ற வேண்டும். எப்பொழுது ஒரு பஞ்சாயத்திற்கு 20 இலட்சம் ரூபாய் கொடுத்து, அந்தப் பஞ்சாயத்து தன்னிறைவுபெற வேண்டும் என்று நீங்கள் கங்கணம் கட்டிக்கொண்டு பணியாற்றுகின்றீர்களோ, அதேபோல, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உள்ள குடிசைகளை, எத்தனை குடிசைகள் இருக்கின்றன என்று கணக்கெடுத்து, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உள்ள குடிசைகளை ஒட்டுமொத்தமாக ஒழிப்பதற்கான வகையில் இந்தத் தொகுப்பு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதன்மூலமாக நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இதுபோன்று அசைக்க முடியாத திட்டங்களை இப்பொழுது நாம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். டி.வி. கொடுக்கிறோம்; Gas அடுப்புக் கொடுக்கிறோம். சிலிண்டர் கொடுக்கிறோம். சுமார் 7,000 கோடி ரூபாய் கடனை இரத்து பண்ணிவிட்டோம். நல்ல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், இந்த டி.வி., இந்த Gas அடுப்பு இந்த சிலிண்டர் எல்லாம் ஒரு காலக்கட்டத்திற்குப் பிறகு—ஒரு 5 ஆண்டு காலத்திற்குப் பிறகு, 10 ஆண்டு காலத்திற்குப் பிறகு, அவை ரிப்பேர் ஆகும். அதற்கப்புறம் அதைச் சரி செய்ய வேண்டும்.



அதிலே பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், நாம் கட்டிக் கொடுக்கின்ற ஒரு வீடு, அதை அசையாத சொத்தாக இந்த நாட்டு மக்களுக்கு நாம் கொடுப்போம் என்று சொன்னால், நிச்சயமாக இந்த ஆட்சியை ஆண்டவன் நினைத்தாலும் அகற்ற முடியாது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–45

அதேபோல எனது தொகுதியில்கூட பால்நல்லூர் என்ற ஓர் ஊர். அங்கே ஒரு சாமியார் மகாபலிபுரத்திலே இருக்கிறார், ஆனந்தராஜ் என்ற ஒரு சாமியார். அவர் வீடு கட்டிக் கொடுப்பதாகச் சொல்லி, எல்லோருக்கும் 2 இலட்சம் ரூபாயில் வீடு கட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் 25 ஆயிரம் ரூபாய் முன்பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார், சாமியார் ஆனந்தராஜ். ஆனந்தராஜ் சாமியாரிடம் 25 ஆயிரம் ரூபாயை 50 பேர் கொடுத்துவிட்டார்கள், வாங்கிக்கொண்டார். ஒரு contractor–ஐக் கூப்பிட்டார். இந்த 50 வீடுகளைக் கட்டுகிற பொறுப்பை உனக்கே நான் கொடுக்கிறேன், அதனால் இந்த வீடுகளுக்கு நீ முதலில் foundation எழுப்ப வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். Foundation–ஐ அவர்கள் எழுப்பிவிட்டார்கள். எழுப்பியதற்குப் பிறகு நமது அரசாங்கம் ஆனந்தராஜைப் பிடித்து உள்ளே வைத்துவிட்டது. ஏனென்றால், அவர் அவ்வளவு நல்ல மனிதர், அவரை உள்ளே வைத்ததனாலே contractor–ம் ஏமாந்தான், 25 ஆயிரம் ரூபாய் வீடு கட்டுவதற்காகக் கொடுத்த அந்த மக்களும் ஏமாந்தார்கள். இப்போது என்னிடம் வந்து அந்த 50 வீடுகளை நீங்கள் கட்டிக் கொடுங்கள் என்கிறார்கள். நான் எதிலே கட்டிக் கொடுப்பது என்று கேட்டால், உங்கள் தொகுதி மேம்பாட்டு நிதி வருகிறது அல்லவா ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய், அதிலே நீங்கள் கட்டிக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். எனக்கு அந்த மாதிரிக் கட்டிக் கொடுப்பதற்கு அனுமதி இல்லை, எங்களுக்கு வரைமுறை கொடுத்திருக்கிறார்கள். அது பிரகாரம்தான் செய்ய முடியும் என்று சொன்னேன். ஏழையெளிய மக்கள், இல்லாதவர்களை எளிதிலே ஏமாற்றி மோசடி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலைமை இருக்கின்றது என்று சொன்னால், இதுபோன்ற வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று புறப்பட்டு இருக்கின்றவர்கள் அவர்களை ஏமாற்றாமல் இருப்பதற்காக, கூடிய விரைவிலே குடிசைகள் இல்லாதபடிக்கு வீடுகளை, கல்லால் ஆன வீடுகளை உருவாக்கித் தருவதற்கு நீங்கள் நிச்சயமாக முனைப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, ஊராட்சி உதவியாளர்கள் 12,618 பேர், sweepers 35 ஆயிரம் பேர், water operators 40 ஆயிரம் பேர். இவர்கள் அத்தனை பேரையுமே—ஊராட்சிகளிலே இரண்டு வகைகளாகப் பிரிக்கிறோம். நிலை–1, நிலை–2 என்று. ரூ. 4 இலட்சத்திற்குமேல் வருமானம் இருப்பது எல்லாம் நிலை–1 பஞ்சாயத்து. இந்த ரூ. 4 இலட்சத்திற்குள்ளே இருக்கின்ற பஞ்சாயத்துக்களை எல்லாம் நிலை–2 பஞ்சாயத்துக்கள் என்று பிரிக்கின்றோம். அப்படிப் பிரிக்கின்றபோது, அங்கே இருக்கின்றவர்களுக்குச் சம்பளமும் அதுபோல வேறுபடுகின்றது. உண்மையிலேயே சொல்ல வேண்டும் என்றால், முன்னாலே தொகுப்பூதியத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் 2 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டிருந்தார்கள். நாம் இப்போது அவர்களைக் கால முறைக்கு ஏற்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நிரந்தரம் செய்கின்றபோது, நாம் கொடுத்திருக்கின்ற தொகை எவ்வளவு? 2,418 ரூபாய். தொகுப்பூதியத்தில் இருந்து நிரந்தர ஊழியர்களாக மாற்றப்படுகின்றபோது 2,418 ரூபாய்தான் அவர்களுக்குக் கூடுதலாகக் கிடைக்கின்றது என்று சொன்னால், 2,418 ரூபாய்க்கு இன்றைக்கு அவர்களாலே ஒரு குடும்பத்தை நடத்த முடியுமா என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். அதேபோல, அரசு ஊழியர்களுக்கு உரிய அனைத்துச் சலுகைகளும் இவர்களுக்கு இல்லை என்று அரசு உத்தரவு பிறப்பித்து இருப்பதாக அறிகிறேன். இவர்களைக் கால முறை ஊதியத்திற்கு மாற்றியும் எந்தப் பலனும் இல்லை. கருணையும், நிதியும் ஒன்றாக இங்கே அமர்ந்து இருக்கின்ற காரணத்தினால், அதைக் கருணையோடு நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். நிலை 2–லேகூட அவர்களுக்குத் தொகுப்பூதியம் ஆயிரம் ரூபாயாக இருந்தது. இப்போது அவர்களைக் கால முறை ஊதியத்தினுடைய அடிப்படையிலே கொண்டு வந்த காரணத்தினால், அவர்களுக்கு 1,163 ரூபாய் கொடுத்திருக்கிறோம். 163 ரூபாய்தான் அதிகம். 2 ஆயிரம் ரூபாயிலே குடும்பம் நடத்த முடியாது என்று சொல்லும்போது, விலைவாசி ஏற்றம் இருக்கிற காலத்தில், 1,163 ரூபாயில் அவர்களால் குடும்பம் நடத்த முடியமா? ஆகவே, அந்தக் குடும்பத்தை வாழ வைப்பதற்காகவாவது நீங்கள் அதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் கருணையோடு சொன்னார், சத்துணவு ஊழியர்கள் ஓய்வுபெறுகின்றபோது அவர்கள் கண்ணீரோடு போகக் கூடாது, 50 ஆயிரம் ரூபாய் காசோலையோடு போக வேண்டும் என்று அவர்களுக்காக உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். அந்தக்



கருணையை உள்ளாட்சியிலே பணிபுரிகின்ற அந்த ஊழியர்களுக்கும் நீங்கள் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, பஞ்சாயத்தில் இருக்கிற உதவியாளர்களுக்கு வேலையும் அதிகம், பொறுப்பும் அதிகம், இவர்களுக்குச் சம்பள உயர்வில் நிலை–1, நிலை–2 என்று பிரித்து இருப்பதைவிட, ஒட்டுமொத்தமாக ஒரு சம்பளத்தை அவர்களுக்குக் கொடுப்பதற்கான நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

Water man இருக்கிறாரே தண்ணீர் விடுவதற்கு, அந்தத் தண்ணீர் விடுகிறவருக்கு எங்கு பார்த்தாலும் பிரச்சினைதான். அந்தத் தண்ணீர் விடுகிறவருக்கு நாம் கொடுக்கிற சம்பளம் 600 ரூபாய். குறைந்தபட்ச தினக் கூலி 80 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு இருக்கின்றபோது, 600 ரூபாய் ஒரு மாதத்திற்கு நாம் சம்பளம் கொடுக்கிறோம் என்று சொன்னால், ஒரு நாளைக்கு அவருக்கு 20 ரூபாய்தானே கிடைக்கிறது? ஆக, அதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதேபோல, sweeper, அவர்கள் பாவம், ஊராட்சிகளில் ரொம்பச் சிறப்பான முறையிலே அவர்கள் பணியாற்றுகின்றவர்கள், அவர்கள் ஒரு நாளைக்குப் பணி செய்யவில்லை என்று சொன்னால், ஊரே நாறக்கூடிய நிலைமை இருந்தாலும்கூட, அவர்களையும் நீங்கள் கருணையோடு பரிசீலித்து, உதவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10–50

10 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு technician—உதவியாளர் நியமித்து, அவர்களுக்கு முதலில் 4,000 ரூபாய் சம்பளம் கொடுத்தீர்கள். நடுவிலே break செய்து, இப்போது மறுபடியும் அவர்களுக்கு 4,000 ரூபாய் கொடுத்து நீங்கள் பணியமர்த்தியிருக்கிறீர்கள். ஊராட்சி மன்றங்களுக்கு நீங்கள் கணினி கொடுத்திருக்கிறீர்கள். அந்தக் கணினியில் வேலை செய்கிறவர்களுக்கு 2,000 ரூபாய் சம்பளம் போட்டு, அவர்களை இப்போது நிறுத்திவிட்டீர்கள். மே மாதத்திற்குக் கொடுத்து, ஜூலையிலே நிறுத்தியாகிவிட்டது. இப்போது மறுபடியும் அவர்களுக்கு நீங்கள் பணி கொடுக்க வேண்டும். அதற்கு என்ன காரணம் என்றால், மத்திய அரசாங்கம் சம்பளத்தை 4,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று நிர்ணயிக்கிறார்கள். ஒன்றியத்திலே பணிபுரிகின்றவர்களுக்கு 4,000 ரூபாயும், ஊராட்சி மன்றங்களிலே பணிபுரிகின்றவர்களுக்கு 2,000 ரூபாயும் என்ற ஒரு வரைமுறையைக்

கொடுத்து, அதே நேரத்திலே உங்களுக்கு ஒரு கட்டுப்பாடு மாதிரி, 2 per cent-க்கு மேலே நிருவாகச் செலவு போகக் கூடாது என்று ஒரு லகானையும் போடுகிறார்கள். செலவு அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, உங்களாலே முடியாத காரணத்தினாலே—நீங்கள் 13 சதவிகிதம் இன்றைக்கு அதிகமாகக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால், 6 சதவிகிதம் இப்போது மத்திய அரசுமூலம் கிடைத்திருக்கிறது என்று நான் நினைக்கின்றேன். அந்த 6 சதவிகிதத்தைப் பெற்று, இவர்களுக்கு மீண்டும் அந்தக் கணினிப் பணிகள் கிடைப்பதற்கு நீங்கள் உதவியாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

ஊராட்சிப் பணியாளர்களுக்கு இப்போதெல்லாம் சம்பளம் கொடுப்பது யார் என்றால், அந்தத் தலைவர்தான். ஊராட்சி மன்றத் தலைவர்தான் சம்பளம் கொடுக்கிறார். ஊராட்சி மன்றத்திற்குப் பணம் வந்தால்தானே தலைவர் கொடுப்பார்? ஊராட்சி மன்றத்திற்கு வருமானம் இல்லை. சில ஊராட்சிகளுக்கு, ஊராட்சி மன்றங்களுக்கு வருமானம் இல்லை. அந்த ஊராட்சி மன்றத்திலே பணி செய்கின்றவர் அந்தப் பஞ்சாயத்துத் தலைவரை நம்பித்தான் வாழ வேண்டும். அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் நினைத்தால் ஒருவரை உதவியாளராக வைத்துக்கொள்ளலாம்; அப்படியில்லையென்றால், அவரை நீக்கியும் விடலாம். அவருக்குப் பணிப் பாதுகாப்பு கிடையாது. Clerk ஆக இருக்கிறவர், உதவியாளராக இருக்கிறவர், சம்பளத்துக்கு அந்தப் பஞ்சாயத்துத் தலைவரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். பஞ்சாயத்துத் தலைவர் Collector இடமிருந்து பணம் வருமா என்று பார்க்கிறார். வந்த பணத்தை Collector மின்சாரத்திற்கு complete ஆகப் பிடித்துவிடுகிறார். அப்படியென்றால், அங்கே தண்ணீர் கொடுக்கிறவருக்கும் சம்பளம் கிடையாது; அங்கே sweeper-க்கும் சம்பளம் கிடையாது; உதவியாளருக்கும் சம்பளம் இல்லை என்கிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அந்த உதவியாளர்களுக்கும், குடிதண்ணீர் விடுகின்ற அந்தப் பணியைச் செய்கின்றவருக்கும், அதேபோல துப்புரவுப் பணி செய்கின்றவர்களுக்கும் அரசாங்கமே நேரடியாகச் சம்பளம் கொடுப்பதற்குப் பெருமுயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, பஞ்சாயத்துத் தலைவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்களில் பெரும் பகுதி, இப்பொழுதெல்லாம் real estate business செய்கிறதாலே எல்லோரும் ஓரளவிற்குக் கனமாகத்தான் இருக்கிறார்கள். தமிழ்நாடு மக்கள் நலப் பணியாளர்கள் சங்கம் (குறுக்கீடு) நான் சிலரைத்தான் சொன்னேன். நீங்கள் ஏன் குறுக்கே



வருகிறீர்கள்? தமிழ்நாடு மக்கள் நலப் பணியாளர்கள் சங்கம். இந்தப் பணியாளர்களுக்கு வாழ்வு கொடுத்தது நீங்கள்தான். 17 ஆண்டு காலம் தொடர்ந்து அவர்கள் பல கஷ்டங்களுக்கு, இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் வாழ்வு கொடுத்திருக்கின்றீர்கள். அந்தப் பணியாளர்கள் 13,000 பேர்களுக்கும் சம்பளம் 1,000 ரூபாய், அதுவும் ரொம்பக் குறைவாக இருக்கிறது. அதையும் கூட்டி, அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பெல்லாம் பஞ்சாயத்துக்களைப் பார்வையிடுவதற்கு D.D.O. என்று இருந்தார். அந்த D.D.O.வை எடுத்துவிட்டு, இப்போது 2 பொறுப்பாகக் கொடுத்திருக்கிறோம், ஒருவருக்குப் பதிலாக. ஒரு ரூபாய்க்கு இரண்டு வாழைப்பழம் மாதிரி. D.D.O. என்ற ஒருவரே A.D. (Panchayat) வேலையையும் பார்த்தார், A.D. (Audit)-னுடைய வேலையையும் பார்த்தார். ஆனால், இப்போது A.D. (Panchayat) தனியாக இருக்கிறார்; A.D. (Audit) தனியாக இருக்கிறார்; D.D.O. இல்லை. இருந்தாலும்கூட, பஞ்சாயத்துக்களிலே நடக்கின்ற தவறுகளை அவர்கள் இதுவரையிலும் சுட்டிக்காட்டி எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)

உதாரணத்திற்கு, என்னுடைய தொகுதியை நீங்கள் எடுத்துக்கொள்வீர்கள் என்றால், அங்குள்ள பஞ்சாயத்துத் தலைவர்களைப் பற்றிக் கவலையே கிடையாது. ஏனென்றால், நிறைய வருமானம் வரக்கூடிய சில பஞ்சாயத்துக்களில் இருக்கிறவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அடுத்து எந்த ஆட்சி வந்தாலும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்ற காரணத்தினாலே, போன வரைக்கும் எந்த ஆட்சி இருந்ததோ, அந்தக் கட்சியிலே இருப்பார். ஆட்சி மாறியவுடனே அவரும் கட்சி மாறிவிடுவார். அது மாதிரித் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காகக் கட்சி மாறுகின்ற, அந்தத் தவறு செய்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்களைத் தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்றபோது, எந்தக் காலக்கட்டத்திலும் அதுபோன்ற பச்சோந்திகளை நீங்கள் அடையாளம் கண்டுகொண்டு, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், இந்த A.D. (Panchayat), A.D. (Audit), இவர்களால் பிடிக்க முடியவில்லை. கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வந்தும், road போட

முடியவில்லை. அப்படி என்றால், அந்தப் பணம் எங்கே போயிற்று என்ற கணக்கும் கிடைக்கவில்லை. கிடைத்தாலும், அவர்களிடம் விவரத்தைக் கேட்டால் அதற்கு உடனே அவர்கள் ஏதாவது ஒரு பதிலைக் கொடுத்து, யாரைப் பார்க்க வேண்டுமோ அவரைப் பார்த்துச் சரி செய்துவிடுகிறார்கள். இதுபோன்ற நிலைமைகளையெல்லாம் தடுக்க வேண்டும். அதை உங்களிடம் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

*முற்பகல் 10—55*

இன்றைக்குக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சுய உதவிக் குழுக்கள். சுய உதவிக் குழுக்களுக்கு வழங்குகின்ற கடன்களை வசூல் செய்ய ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது பணியிடங்கள் ஏதுமில்லை. அதேபோல, ஆண்களுடைய சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தத் தமிழக அரசு மிகவும் ஆர்வமாக இருக்கிறது. ஏற்கெனவே இப்பணிகளைச் செய்து வந்த விரிவாக்க அலுவலர், கால்நடை, மற்றொரு விரிவாக்க அலுவலர், கூட்டுறவுத் துறை ஆகிய பணியிடங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அதற்குப் பதிலாக, ஆதி திராவிடர் நலத் துறையைச் சார்ந்த விரிவாக்க அலுவலர் தற்போது இப்பணியைக் கவனிக்கின்றார். ஆதி திராவிடர் நலத் துறையே ஒரு பெரிய கடல். அதிலே இருக்கிறவர் அங்கேயே வேலை செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கும்போது, அவரைத் தூக்கி இதிலேயும் கொண்டு வந்து நாம் பயன்படுத்துவோம் என்று சொன்னால், நிச்சயமாக அதையும் சரியாகச் செய்ய முடியாமல், இதையும் சரியாகச் செய்ய முடியாமல் ஒரு குழப்பத்தை உருவாக்கிவிடுவார். ஆகவே, நமது சுய உதவிக் குழுக்களுக்கென்று உடனடியாக அதிகாரிகளைப் போடுவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்கள். அந்தப் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் ஆட்சியர் அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னர், உரிய பணியிடங்களை அனுமதித்து அரசு இதுவரை ஆணை பிறப்பிக்கவில்லை. மாவட்டங்கள் உருவாகிவிட்டன; அதற்குரிய பணியாளர்கள் இன்றைய வரைக்கும் இல்லை. அதனால், பல ஆண்டுகளாகப் போதுமான பணியாளர்கள் இல்லாமல், அந்தப் பணிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரகம், திட்ட அலுவலர், உதவி இயக்குநர், அலுவலர்களுக்குரிய ஊழியர்கள் கட்டமைப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



தொழில்நுட்ப உதவியாளர்களுக்குப் பணி மேற்பார்வையாளராகப் பதவி உயர்வு வழங்க ஊராட்சி ஒன்றியங்களில் காலியாகவுள்ள பணியிடங்களுக்கு 50 சதவிகித வேலைவாய்ப்பின்மூலமாக. . . (மணியடிக்கப்பெற்றது) என்ன? நான் கேட்பது தப்பா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** *20 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

**திருமதி டி. யசோதா:** 50 சதவிகிதம் வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் செய்வதைப் பாராட்டுகின்றேன். இன்னொரு 50 சதவிகிதத்தையும், பதிவு செய்யப்பட்டவர்களுக்கு என்று இருப்பதைக் கொஞ்சம் தளர்த்தி, பணிமூப்பின் காரணமாக இந்தத் துறையிலேயே திறமை மிக்கவர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்குரிய பதவி உயர்வாக நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, மாநகராட்சி, முனிசிபாலிட்டி. கடைகள் வைத்து நடத்துகிறார்கள். திடீரென்று அந்த முதலாளி செத்துவிட்டார் என்று வைத்துக்கொள்ளுங்கள், அந்தக் கடைக்கு ஓனர் செத்துவிட்டார் என்று சொன்னால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு அதைக் கொடுப்பதற்கு நாம் கருணையோடு பரிசீலிக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, முனிசிபாலிட்டியோ, மாநகராட்சியோ உடனே அதைக் கைப்பற்றி மறுபடியும் ஏலத்திற்கு விட்டால் அந்தக் குடும்பம், இவ்வளவு நாள் நம்மை நம்பி வாழ்ந்த குடும்பம் நடுத் தெருவில் நிற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அந்த முனிசிபாலிட்டி கடைகளை அந்த வாரிசுதாரர்களுக்குக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அரசாங்கத்தினுடைய உத்தரவு, கோர்ட் உத்தரவுகூட, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவிகிதம் வாடகையை நீங்கள் உயர்த்தலாம் என்று இருக்கிறது; அந்தச் சட்ட திட்டத்தை நீங்கள் பரிசீலனை செய்தால், நிச்சயமாக அரசுக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

குடிநீர். செம்பரம்பாக்கத்திற்கு எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த எட்டாம் தேதி வந்தார்கள்; புதிதாக அங்கே ஒரு குடிதண்ணீர் சுத்திகரிப்பு ஆலை இருக்கிறது. வந்து, அந்த ஆலையை அவர்கள் திறப்பு விழா செய்தார்கள். செய்து, அப்போது சொன்னார்கள், ஸ்ரீபெரும்புதூருக்கு இனி தண்ணீர்ப் பிரச்சினை இருக்காது என்று. ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறது. ரொம்பவும் வேகமாகத்தான் பணியாற்றுகின்றார். நான் சொல்வேன்,

பஞ்சகல்யாணிக் குதிரை மாதிரி வேகமாக இந்த அரசாங்கத்தினுடைய உள்ளாட்சித் துறை ஓடிக்கொண்டேயிருக்கிறது. வேகம் அதிகமாக இருக்கிறது என்று சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, செம்பரம்பாக்கம் ஏரிக்குக் கழிவு நீர் வருகின்றது, ஸ்ரீபெரும்புதூரிலிருந்து. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தக் கழிவு நீர் தொழிற்சாலைகளிலிருந்து வருகிறது. ஆகையினாலே, செம்பரம்பாக்கம் ஏரியிலேயிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அந்த கம்பெனிகள் அமைவதற்கு நீங்கள் நிச்சயமாக ஒரு கட்டாயமான உத்தரவினைப் போட வேண்டும். இல்லையென்றால், அந்த கம்பெனிகளுடைய கழிவுகள் செம்பரம்பாக்கம் ஏரிக்கு வந்தால்— அந்த செம்பரம்பாக்கம் ஏரித் தண்ணீரைத்தான் அவர்கள் சுத்திகரிப்புப் பண்ணுகிறார்கள். மேஜிக் மாதிரி இருக்கிறது. பச்சைப் பசேல் என்று இருக்கிறது ஓரிடத்திலே; கன்னங்கரேல் என்று இருக்கிறது ஓரிடத்திலே; இரண்டையும் கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். சுத்திகரித்த பிறகு பார்த்தால், இந்தக் குடிதண்ணீர் அருமையான குடிதண்ணீர். விலைக்கு வாங்குகிற தண்ணீர் பாட்டிலிலுள்ள தண்ணீர் போல இருக்கிறது. அந்த அளவிற்கு உங்களுடைய முயற்சியை நான் பாராட்டுகிறேன். அதை என்னுடைய தொகுதிக்குக் கிடைத்த வரப்பிரசாதமாக நான் நினைக்கின்றேன்.

*முற்பகல் 11–00*

அதேபோல, அரசு தரும் நலப் பணிகள்; அந்த நலப் பணிகளைச் சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொடுக்கின்றபொழுது, நாங்கள் எந்தெந்த ஊருக்கு என்னென்ன பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைச் சொல்ல முடியும். நாங்களெல்லாம் அரசாங்கத்தினுடைய நலப் பணிகளைக் கொடுக்கின்ற அந்த நிகழ்ச்சிகளுக்குத் தவறாமல் போகின்றவர்கள். எங்களைக் கூப்பிட்டால், correct ஆக நாங்கள் போகிறோம். ஏனென்றால், அரசாங்கத்தினுடைய நலப் பணிகள் என்னென்ன வந்திருக்கின்றன என்பதைப் பற்றிச் சொல்வதற்காக நாங்கள் போகிறோம். வராதவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. வரக்கூடிய சூழ்நிலையிலே இருக்கும்பொழுது—இப்போது சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சட்டமன்றம் நடைபெறும் இந்த நேரத்திலே, காலையிலே டி.வி. கொடுக்கிற ஒரு நிகழ்ச்சி இருக்கிறது. அதற்குப் பிறகு gas அடுப்பு கொடுக்கிற நிகழ்ச்சி இருக்கிறது. நான் எப்படிப் போக முடியும் என்று அவர்களைக் கேட்டால், அதிகாரிகளுடைய வசதிக்கு ஏற்ப அவர்கள் நிகழ்ச்சிகளைத் தயார் செய்கிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாகத்



தொகுதிக்குச் செல்ல வேண்டும். இதன்மூலமாகத் தொகுதி மக்களைப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு இந்த அரசாங்கத்தினுடைய நலன்களை எடுத்துச் சொல்ல வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கடைசியில் இரண்டு வரி; முடித்துவிடுகிறேன். ஆகவே, நலன்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்கின்ற எண்ணத்தினுடைய அடிப்படையிலே, இதுபோன்று சட்டமன்ற உறுப்பினர்களை நீங்கள் பயன்படுத்துகின்ற அதே நேரத்திலே, சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து அந்த நலப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று அறிவுரை வழங்க நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, என்னுடைய தொகுதியிலே இரண்டு யூனியன்கள் இருக்கின்றன. இரண்டு யூனியன்களுக்கும் retire ஆகப் போகிற B.D.O.-க்களைத்தான் போடுகிறார்கள். கடந்த 5 வருடமும் அப்படித்தான். இப்போது நாம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் ஆகிவிட்டது. இப்பொழுதும் retire ஆகிற அதிகாரிகள்தான் வருகிறார்கள். ஏனென்றால், எனது தொகுதி அந்த retire ஆகிற அதிகாரிகளுக்கு, சென்னைக்குப் பக்கமாக இருக்கிறது என்பது ஒரு காரணம். அவர்கள் file-ல் கையை வைப்பதே இல்லை. File–ல் கையை வைக்கமாட்டேன் என்கிறார்கள். அதன் காரணமாக, இப்போது நிறைய factories அங்கே புதிது புதிதாக வருகின்றன. அவர்களுடைய இடங்களுக்கெல்லாம் plot போட்டு, அதற்குரிய அந்தக் கட்டணத்தை B.D.O. Office–ல் வசூல் செய்கிறார்கள். அந்தப் பணத்தில் 60 சதவிகிதம் நிர்வாகச் செலவுகளுக்குப் போனால், 40 சதவிகிதம் கலெக்டர்மூலமாகப் பஞ்சாயத்துக்களுக்குப் போக வேண்டும். அந்த 40 சதவிகிதப் பணம் பஞ்சாயத்து யூனியனிலேயே பல ஆண்டுகளாக நிலுவையிலே இருக்கிறது என்று சொன்னால், பஞ்சாயத்துக்களுடைய பணி முடக்கப்படுகிறது. ஆகவே, அதையும் தாங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நேரம் இல்லாத காரணத்தினாலே ஒன்றை மட்டும் நான் கூறி, விடைபெறலாம் என்று நினைக்கின்றேன். கடந்த சட்டமன்றத் தேர்தலின்மூலமாகத் தமிழகத்திலே ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வெற்றிபெற்று, ஆற்றலும், அனுபவமும் மிக்க தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர் கலைஞர் தலைமையிலே நல்லாட்சி அமைந்ததை இங்கே பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். கலைஞர் தலைமையில் அமைந்த நல்லாட்சியில், உள்ளாட்சியில் நல்லாட்சி காணத் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சித்

துறை அமைச்சராகப் பொறுப்பேற்றது மிகவும் சிறப்புக்குரியதாகும்; போற்றுதலுக்குரியதாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)* 83 வயது நிரம்பிய தந்தை முதலமைச்சராகப் பதவியிலே இருக்கின்றபோது, அவரது தனயன் அமைச்சராகப் பொறுப்பேற்றது எல்லோருக்கும் வியப்பைத் தந்திருக்கலாம். *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழகத்தின் முதலமைச்சராக ஐந்தாவது முறை பொறுப்பேற்று ஆட்சி செய்யும் கலைஞர் ஆட்சியில், தற்போது தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது, என்னைப் பொறுத்தவரைக் காலம் தாழ்ந்து நிகழ்ந்த நடவடிக்கையாகவே நான் கருதுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

1971-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது கல்லூரி மாணவராக இருந்த தளபதி அவர்கள், 'முரசே முழங்கு' என்ற திராவிடப் பிரச்சார நாடகத்தை அவரே நடத்தி, நடித்து, தமிழகம் முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வந்ததை அவரது முதல் அரசியல் பிரவேசமாக நான் கருதுகின்றேன். அதன்படி, 35 ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்திலே தன்னை ஈடுபடுத்திக்கொண்ட தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் முதல் முறையாக இப்போதுதான் அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்றார். 35 ஆண்டு கால கடுமையான உழைப்பிற்குப் பிறகு, படிப்படியாகத் திராவிட முன்னேற்றக் கழகத்திலே பல்வேறு பொறுப்புகளை ஏற்று, பக்குவத்தையும், அனுபவத்தையும் பெற்று, இன்றைக்கு ஆற்றலும், துடிப்பும் மிக்க அமைச்சராக நம் கண்ணெதிரிலே அமர்ந்திருக்கின்ற மரியாதைக்குரிய தளபதி அவர்கள் கடந்து வந்த பாதை நீண்ட நெடிய பாதையாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தப் பாதையில் நடந்து வரும்போது பல்வேறு சோதனைகளை வீரத்துடன் சந்தித்து, வெற்றி கண்டு, இன்றைக்குத் திராவிட இயக்கத்தின் தளபதியாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக *(மேசையைத் தட்டும் ஒலி)* மின்னிக்கொண்டிருப்பதை காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நான் பெருமையோடு இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அரசியல் தலைவர்களின் வாரிசுகள் அரசியலுக்கு வரக் கூடாது என்பதை எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திரா காந்தியைத் தயாரித்தாரே தவிர, உருவாக்கவில்லை. அதேபோல, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களைத் தயாரித்தாரே தவிர, உருவாக்கவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர் நினைத்திருந்தால் என்றைக்கோ தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களை அமைச்சராக்கி அழகு பார்த்திருக்க முடியும். ஆனால்,



முதல்வர் கலைஞர் அவர்களுக்குரிய ஜனநாயக உணர்வின் காரணமாக, தளபதி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பொறுப்புகள் காலம் தாழ்ந்தே கிடைத்தன.

ஒரு பொதுக் கூட்டத்தில் முதல்வர் அவர்கள், 'என்னுடைய மகனாக ஸ்டாலின் இருப்பதால், அவரது உழைப்புக்கு ஏற்ற பல பொறுப்புகள் உரிய காலத்தில் கிடைக்காமல் போய்விட்டன' என்று குறிப்பிட்டுப் பேசியதை இங்கு நான் நினைவுகூர விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

35 ஆண்டுகாலக் கடுமையான அரசியல் பயணத்தில் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக, இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக மரியாதைக்குரிய தளபதி அவர்கள் சூறாவளிச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்து வருகிறார். உள்ளாட்சித் துறையில் நல்லாட்சி அமைந்திட அவர் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் காங்கிரஸ் பேரியக்கம் என்றைக்கும் துணை நிற்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை, நாட்டுக்கு மிக முக்கியமான கோரிக்கை. இந்த மானியக் கோரிக்கையின்மீது பதில் அளிப்பதற்காக நம்முடைய மாண்புமிகு தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தயாராக இருப்பதை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறேன். அவர் ஒரு துடிப்பான அமைச்சர்; வளர்ந்து வரக்கூடிய அமைச்சர்; உள்ளாட்சித் துறைக்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை நான் முதலிலே பாராட்டிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத் தொடரிலே தொடர்ந்து பாராட்டிப் பேசி வருகிறார்கள். இதை யாரும் மறுக்கவும் முடியாது. ஆனால், உள்ளாட்சித் துறையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இரண்டு பேர் பேச வேண்டுமென்று கேட்டிருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நாளை ஒருவர் பேசுங்கள்

என்று வாய்ப்பளித்தார்கள். இன்று காங்கிரஸ் கட்சியிலே இரண்டு பேர், அ.தி.மு.க. சார்பிலே இரண்டு பேர் பேசுகிறார்கள். ஆனால், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய பெயர் பதிவு செய்யப்பட்டு, மீண்டும் அடிக்கப்பட்டிருக்கிறது. இது சட்டமன்ற ஜனநாயகத்தினுடைய நெறிமுறையா? இது ஏன் மீறப்படுகிறது என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் அறிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட அநீதி தொடர்ந்து நடக்கக் கூடாது என்பதற்காக இதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பெயர் கொடுத்திருந்தார்கள். நேற்று விடுபட்ட காரணத்தாலேதான் இன்று காங்கிரசுக்கும், அ.தி.மு.க.விற்கும் இருவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 11-30 மணிக்குத் தன்னுடைய பதிலுரையை ஆரம்பித்தால்தான், இரண்டு மணி நேரம் இந்த மானியத்திலே நிறைவாக, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல முடியும். அதனால்தான், நேரம் இல்லாத காரணத்தினால் மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க முடியவில்லையே தவிர, அவர்கள் கேட்டபோதெல்லாம் பல மானியக் கோரிக்கைகளிலே வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருவருக்கு வாய்ப்பளிப்பதாகச் சொல்லி, ஒருவருக்குத்தான் வாய்ப்பளித்தீர்கள் என்று உரிமையோடு நம்முடைய திரு. ஜி.கே. மணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இருவர் இன்று பேசுகிறீர்கள்; ஒருவர் பேசிய பிறகு, அந்த இருவரில் ஒருவராக திரு. மு.க. ஸ்டாலின் பேசுவார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், அவரையும் சேர்த்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இரண்டு பேர் பேசியதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.



**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே மீளாத் துயில்கொண்டிருக்கும் எங்கள் தங்கத் தலைவர், என்போன்ற இலட்சக்கணக்கான தொண்டர்களின் அரசியலுக்கு ஈர்ப்பு சக்தியாகத் திகழ்ந்த மறைந்த மாமனிதர், மனிதப் புனிதர், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எனது இதய அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

கழகம் என்கின்ற திருக்கோயிலில் அன்னையாக வீற்றிருக்கின்ற, எங்களையெல்லாம் காத்து நிற்பதோடு, எளிய தொண்டனாக இருந்த என்னை ஒன்றியக் கழகச் செயலாளராக, மாவட்டக் கழக அவைத் தலைவராக, மாவட்ட ஊராட்சி உறுப்பினராக, மாவட்டத் தொழிற்சங்கத்தினுடைய செயலாளராக, இப்படி அரசியலில் என்னைப் படிப்படியாக உயர்த்தி, இன்று இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல இந்த மாமன்றத்தின் உறுப்பினராக்கி அழகு பார்த்துக்கொண்டிருக்கும், தரணி போற்றும் எங்கள் தங்கத் தலைவி, வீரத்தின் விளைநிலமாக, (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றியின் பிறப்பிடமாக, தைரியத்தின் மறுபிறவியாக, சமூக நீதி காத்த வீராங்கனை, ஒரு கோடித் தொண்டர்களைத் தன்னுடைய வாரிசாக ஏற்றுள்ள. . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் பேசுகிறபோது, தன்னுடைய பேச்சின் துவக்கத்தில் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் புகழைச் சேர்க்கிறவண்ணம், அவருக்கு நன்றி தெரிவிக்கிறவண்ணம் வார்த்தைகளை முதலிலே பேசினார், அவரைப் புகழ்ந்தார். பிறகு இன்றைக்கு இருக்கிற எதிர்க்கட்சித் தலைவரைப் புகழ்ந்தார். ஆனால், எதிர்க்கட்சித் தலைவரைப் புகழுகின்றபோது புளகாங்கிதத்தோடு கை தட்டுகிற நீங்கள், எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரைச் சொன்னபோது திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே, ஏன் என்று கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அப்போதே கையைத் தட்டியிருக்கலாம் அல்லவா? (குறுக்கீடுகள்) பேசுங்கள், திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** எம்.ஜி.ஆர். அவர்களைக் கடந்த கூட்டத் தொடரிலே ** என்று சொன்னவர்கள் இன்று எம்.ஜி.ஆரைப் பற்றிப் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதாவது எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை உச்சரிக்கிறார்கள். கடந்த ஐந்தாண்டு காலத்தில் மறந்தும்கூட எம்.ஜி.ஆர். பெயரை உச்சரிக்க மாட்டார்கள். யார் எம்.ஜி.ஆரின் ** என்று சொன்னார்கள் என்பது நாட்டிற்கே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஏற்கெனவே நான் சொன்னதைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் பேசுகின்றார். ** என்பதற்கும், ** என்பதற்கும் பொருளைப் புரிந்துகொண்டு பேச வேண்டும். ** செய்தார் என்றுதான் சொன்னேனே தவிர, ** என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இத்துடன் பிரச்சினையை விடுங்கள். திரு. சின்னராஜ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், கொடை வள்ளல் அவர்களைப் பற்றித் தகாத வார்த்தைகளால் திரும்பத் திரும்ப இங்கே சொல்லிக்கொண்டிருக்கின்றார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கியது யார் என்ற கேள்விக்குத்தான் தமிழகம் விடை காண்கிறபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கம் தோன்றியது. அதையெல்லாம் விடுத்து. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். Subject வேறு எங்கோ deviate ஆகிப் போய்க்கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எழுந்து பேசுகின்றபோது, அங்கே இருந்துகொண்டு, 'உட்கார்' என்று ஒருமையில் பேசுவது சரியாக இல்லை. நான் கேட்க விரும்புவது ஒன்றே ஒன்றுதான். 'என்னுடைய செல்வாக்கைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார், இவர் செயல்படாதவர்' என்று ராஜீவ் காந்திக்குக் கடிதம் எழுதியது யார்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பான பதிலைச் சபையிலே தர வேண்டும். சம்பந்தா சம்பந்தம் இல்லாத வாக்குவாதத்தில் தலையிட்டு, சம்பந்தம் இல்லாத வாதத்திற்குள்ளே போகக் கூடாது. பிரச்சினையைத் தீர்த்து வைப்பதிலேதான் மாண்புமிகு அமைச்சர்கள் முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டுமேயொழிய, பிரச்சினைகளை உருவாக்குகிறவர்களே அமைச்சர்களாக இருந்தால், இந்தச் சபையை எப்படி நடத்த முடியும்? (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். இப்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஆட்சேபகரமான வார்த்தையால் புரட்சித் தலைவரைப் பற்றி இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று நான் சட்டப் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதிக நேரம் பேச வேண்டும். நீங்கள் வேண்டுமென்றே Subject-ஐ வேறு லைனில் deviate பண்ணிக்கொண்டு செல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. சின்னராஜ், பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேவையற்ற திடீர் குழப்பத்திற்குக் காரணமே மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன்தான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். ஏனென்றால், சின்னராஜ் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது அவர் எம்.ஜி.ஆர்.ஐப் பற்றித் தொடுத்த

புகழாரங்களைப் பற்றி அவர் இங்கே சொன்னபோது, அ.தி.மு.க. உறுப்பினர்கள் கையொலி செய்யவில்லை என்றும், முன்னாள் முதலமைச்சரைப் பற்றிச் சொன்னபோது கையொலி செய்தார்கள் என்றும் சொல்லி அந்த வேறுபாட்டை உணர்த்தத் தேவையில்லை. அவர்களுக்கு, அ.தி.மு.க. உறுப்பினர்களுக்குத் தெரியும். எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிப் பேசும்போது, அடுத்தபடியாக முன்னாள் முதலமைச்சரைப் பற்றிப் பேசினால், இரண்டிற்கும் சேர்த்து ஒரே தடவையாகக் கை தட்டிவிடலாம் என்று இருந்திருக்கலாம். ஆகவே, அப்படி இருந்திருக்கலாம். அதில் தவறு ஒன்றும் இல்லை. அதைச் சுட்டிக்காட்டப் போய், கடைசியிலே ** என்கின்ற அந்த வார்த்தை மீண்டும் இந்த அவையிலே ஒலிக்கின்ற ஒரு சூழல் ஏற்பட்டதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகின்றேன். ** என்ற சொல் இங்கே ஒலித்ததை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று தங்களை நான் மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று ** என்ற சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ், பேசுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்குத் தனது பிரதிநிதியாக என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த மேட்டுப்பாளையம் தொகுதி மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே உரித்தாக்கி, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்த தங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ், பில்லூர் அணையிலிருந்து இரண்டாவது குடிநீர்த் திட்டம் 172.8 கோடி செலவில் செயல்படுத்தப்படும்; அதில் மாநகராட்சியின் பங்களிப்பு 68 கோடி ரூபாய் என்று சென்ற ஆண்டு அறிவித்திருந்தீர்கள். அதே திட்டத்தை இந்த ஆண்டு 113.74 கோடி ரூபாயில் செயல்படுத்தப்படும் என்று கூறியுள்ளீர்கள். இதில் மாநகராட்சியின் பங்கு உள்ளதா, இல்லையா என்பதனைத் தெளிவுபடுத்த வேண்டும். அதே நேரத்தில், ஒரே திட்டத்தை இரு வேறு மதிப்பீடுகளில் செயல்படுத்துவோம் என்று கூறியுள்ளதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



44.28 மில்லியன் கியூபிக் மீட்டர் கொள்ளளவுகொண்ட அந்த அணையில் தற்போது அதிக அளவு சேறும், சகதியுமாக உள்ளது. இரண்டாம் குடிநீர்த் திட்டம் வரும் இந்த நிலையில், அணையின் தண்ணீர்க் கொள்ளளவை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. ஆகவே, அந்தத் தூர் வாரும் பணியினை வெகுவிரைவிலே நடத்திக் கொடுக்க வேண்டுமென்று இங்கே கூறிக்கொள்வதோடு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் செய்து முடிக்கப்பட்ட திட்டம், ஆசியாவிலேயே மிகப் பெரிய குடிநீர்த் திட்டம், பில்லூர் குடிநீர்த் திட்டம். தினமும் கோவை மாநகருக்கு 66 மில்லியன் லிட்டர் நீரும், ஊரகப் பகுதிகளுக்கு 125 மில்லியன் லிட்டர் நீரும் இத்திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படுகிறது. பெருகி வரும் தேவைகளைக் கருத்தில்கொண்டு, இத்திட்டத்தை விஸ்தரிப்பதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்தார்கள். அதனடிப்படையில், ரூபாய் 122 கோடி செலவிலே 965 குடியிருப்புகளுக்குத் தண்ணீர் தரும் வகையிலே திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நிர்வாக அங்கீகாரம்பெறும் நிலையிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதாக அறிவித்தீர்கள். உடனடியாகப் பணிகளைத் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கோவை, கவுண்டம்பாளையம்–வடவள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டு, 1–8–2004 அன்று சட்டமன்றத்திலே இந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். 6–12–2004 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. அரசாணை எண் 367. 22–2–2005 அன்று டெண்டர் விடப்பட்டது. ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடனே பணிகளைத் தொடங்காமல், டெண்டர் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த இந்தத் திட்டத்தை இரத்துச் செய்து, சுமார் 80 ஆயிரம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை இந்த அரசு கேள்விக்குறியாக்கியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெளிவுபட எடுத்துச் சொல்ல விழைகின்றேன்.

அதே நேரத்திலே, காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பிலே, தமிழகத்திலே பவானி ஆற்றின்மூலமாக 6 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டுமென்று அந்த ஆணையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே முக்காணி என்ற இடத்திலே தடுப்பணைகளைக் கட்டுகின்ற பணியில் கேரள அரசு முயற்சி மேற்கொண்டது. அந்த

நிலையிலே, அணை கட்டுகின்ற அந்தத் திட்டம் நிறைவேறுகிறபோது தமிழகத்திற்கு வருகின்ற தண்ணீர் தடைப்படும் என்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின்பேரிலே அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்பதனை இந்த மாமன்றத்திற்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

அதேபோன்று, இப்பொழுது மீண்டும் கேரள அரசில் சாவடியூர் என்ற இடத்திலே தடுப்பணை கட்டுகின்ற முயற்சியில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தாவிட்டால், இன்று கோவை, ஈரோடு மாவட்டங்கள் வறட்சிப் பகுதிகளாக மாறக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, தற்போது செயல்பாட்டில் இருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பில்லூர் அணைக் குடிநீர்த் திட்டம்கூடச் செயலிழக்கும் தன்மை ஏற்படும். இரண்டாவது குடிநீர்த் திட்டம்கூடக் கானல் நீராக மாறிவிடும் நிலை இன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதைக் கருத்தில்கொண்டு, அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அரசு இதன்மீது தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் இங்கே தெளிவுபட எடுத்துரைக்கின்றேன்.

இந்தியாவிலேயே மழை நீர் சேகரிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2003–2004-ல் தொடங்கிய இந்தத் திட்டம் நூறு சதவிகிதம் வெற்றியடைந்ததென்று சொன்னால் அது மிகையாகாது. இதன்மூலமாக ஊராட்சிப் பகுதிகளிலே மட்டும் ஏறத்தாழ 66,61,965 மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளும், பேரூராட்சிகளிலே 21,88,348 மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளும், திறந்தவெளியிலே 1,36,026 மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டன. இவை தவிர, மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் இலட்சக்கணக்கான கட்டடங்களிலே மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்பை உருவாக்கித் தந்தவர் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதன் விளைவாக, இந்த ஆண்டு பருவ மழைக் காலத்திலே நிலத்தடி நீர் 0.5 மீட்டரிலிருந்து ஆறு மீட்டராக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது சென்னை மாநகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் நீர் நிலையங்கள் எல்லாம் வறண்டு போய்விட்டிருந்த நிலையிலே, மக்கள் நகரையே காலி செய்துவிட்டு வேறு ஊருக்குச் சென்றுவிடும் அபாய நிலை இருந்தது. அப்பொழுது, நெய்வேலிபோன்ற நீண்ட நெடுந்தொலைவிலிருந்து லாரிகள்மூலமாகத் தண்ணீரைக் கொண்டு வரச் செய்து, சென்னை மாநகர மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்குகின்ற அடிப்படை நடவடிக்கை எடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகராட்சிக்கு நிரந்தரமாகத் தண்ணீர் கிடைக்கப் புதிய வீராணம் என்ற திட்டத்தை ஆய்வு செய்து, அதற்கு உலக வங்கியிலிருந்து 720 கோடி ரூபாய் கடனாகப் பெற்று, அந்தப் புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்து சேர்த்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தத் திட்டத்தை, சாதனையாக ஏறத்தாழ 30 மாதங்களிலே முடித்து, சென்னை நகருக்குக் குடிநீர் விநியோகம் செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு வெளியேயும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களெல்லாம் 'வீராணம் திட்டம் வீணான திட்டம்' என்று விமர்சனம் செய்தார்கள். இங்கே நான் ஓர் உண்மையை உணர்த்த விரும்புகிறேன், இந்தத் திட்டத்திற்கு 720 கோடி ரூபாய் கடன் கொடுத்தது உலக வங்கி. அதிலே பலதரப்பட்ட நிபுணர்கள் இடம்பெற்றுள்ளார்கள். அவ்வளவு பெரிய தொகையைக் கடனாகக் கொடுக்கும் உலக வங்கி, அந்த சாத்தியக்கூறு உள்ளதா என்பதைச் சிந்திக்காமலா கடன் கொடுத்திருப்பார்கள்? எனவே, இந்தத் திட்டத்தினால் சென்னை மக்கள் பயனடைந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லுகின்ற அளவிற்குக் கடந்த காலத்திலே நடந்து முடிந்த தேர்தல் எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகரிலே போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக 9,000 கோடி ரூபாய் செலவிலே 49 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ இரயில் திட்டம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகச் செயல்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஐந்து ஆண்டு காலத்திலே முடியுமா என்று பெரிதும் சந்தேகம் கொள்ள

வேண்டியுள்ளது. ஏனென்றால், சென்னைக் கடற்கரை முதல் லஸ் வரை செல்லும் பறக்கும் இரயில் திட்டத்தில் இரண்டாவது கட்டமாக வேளச்சேரி வரையிலும் 10.3 கிலோ மீட்டர் நீளத்திற்கு 605 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கும் என்று 1998 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பத்து கிலோ மீட்டர் பாதை அமைக்க ஒன்பது ஆண்டு காலமாகியும், பறக்கும் இரயில் இன்னும் வேளச்சேரி வந்து சேரவில்லை. ஆகவே, ஐந்து ஆண்டு காலத்திலே 49 கிலோ மீட்டர் நீளம்கொண்ட மெட்ரோ இரயில் திட்டம் நிறைவேறுவது சாத்தியம்தானா என்பதனை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மோனோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கையை எடுத்தார்கள். அந்த மோனோ இரயில் திட்டம் செயல்படுத்தப்படுமேயானால், அதன்மூலமாகக் கிடைக்கும் வருவாய் நமக்குச் சேரும் என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரியப்படுத்தி, மெட்ரோ இரயில் திட்டத்தின்மூலமாகக் கிடைக்கின்ற அந்த நிதி முழுவதும் மத்திய அரசுக்கே சேரும் என்பதனையும் எடுத்துச் சொல்லி, சென்னை நகரின் நெரிசலைக் குறைக்க விரைவான தீர்வாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த மோனோ இரயில் திட்டம்தான் இங்கே நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட அறிவிக்கப்பட்ட திட்டம், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம். ஆனால், அரசியலுக்காக இந்தத் திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திலிருந்து முட்டுக்கட்டை போடப்பட்டது. தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்ததும் அதே அமைச்சகத்திலிருந்து அனுமதி வழங்கப்பட்டு, 2006-2007 நிதிநிலை அறிக்கையிலே, சென்னை நகருக்கான கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், மத்திய அரசின் நிதி உதவி கோரப்படும் என்றும் அறிவித்திருந்தீர்கள். அதேபோல, மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்த நிதி உதவியைக்கொண்டு கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு திட்டமும் செயல்படுத்தப்படும் என்று அதே அறிக்கையிலே தெரிவித்துள்ளீர்கள். இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே அதே திட்டங்களை மீண்டும் அறிவித்துள்ளீர்கள். ஆக,



இந்தத் திட்டங்களின் உண்மை நிலை என்ன? சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தபடி மத்திய அரசு நிதி உதவி அளித்ததா? அப்படி நிதி உதவி அளித்திருந்தால், அப்பணியின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைப்பதாகக் கூறினீர்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 2005-2006 ஆம் ஓரே ஆண்டிலே மட்டும் 2,40,470 குழுக்களை அமைத்து, தமிழகத்திலே இருக்கின்ற மகளிருடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் தந்த ஓர் அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசாகத் திகழ்ந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாமன்றத்திலே நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற சத்துணவுத் திட்டம், இலவச வேட்டி-சேலை வழங்குகின்ற திட்டம், பள்ளி மாணவ, மாணவிகளுக்குப் பாடப் புத்தகங்கள் வழங்குகின்ற திட்டம், இலவச சைக்கிள் வழங்குகின்ற திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடைகள் வழங்குகின்ற திட்டம், இப்படி ஏழையெளிய மக்களுக்குப் பயன்படும் திட்டங்களைக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித் தலைவி அம்மா அவர்களும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அரசாங்கம் வந்தாலும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சின்னராஜ், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இவை எல்லாம் சாகா வரம் பெற்ற திட்டங்கள். இலவச டி.வி., இலவச நிலம், இலவச அடுப்புபோன்ற திட்டங்கள் எதிர்காலத்தில் தொடருமா என்கின்ற குறைந்தபட்ச உத்தரவாதம்கூட இல்லாத நிலை இருந்துகொண்டிருக்கின்றது என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதானே? நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** ஒரேயொரு நிமிடம். என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வைத்திருந்த பேப்பர்கள் எல்லாம் கலைந்து போய்விட்டன. (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிர்வாகத்தில், கிராம சபைக் கூட்டத்தில் பொது மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை. 5 சதவிகித மக்கள்கூடப் பங்கேற்பதில்லை. அதேபோல, கிராம சபைகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் செயல்படுகின்றனவா என்று சொன்னால், அதுவும் இல்லை. ஆக, பெரும்பாலான மக்கள் பங்கேற்காத நிலையில், பெரும்பாலான தீர்மானங்கள் செயல்படுத்தப்படாத நிலையில், கிராம சபை நடப்பதால் என்ன நன்மை இருக்கும் என்பதனை உணர்ந்து, வருகிற காலத்தில் அந்தக் கிராம சபை சிறப்பாக நடப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் point எதுவும் இல்லை. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** கடந்த நிதிநிலை அறிக்கையின்போது, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 5 ஏக்கர் நிலமும், ஒரு கோடி ரூபாயும் தந்தால் அரசுக் கலைக் கல்லூரி கொடுப்பதாக அறிவித்தார்கள். அந்த அடிப்படையில் இன்று அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்கள் தொகுதியிலே இருக்கின்ற குழந்தை வேலாயுதசாமி கோயிலுக்குச் சொந்தமான 90 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதைப்போல, வன பத்ரகாளியம்மன் கோயிலிலே 10 கோடி ரூபாய்க்கு மேலாக நிதி இருப்பு இருக்கிறது. அதற்கு அறநிலையத் துறையின்மூலமாக இந்தப் பணியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–30*

அதேபோல, நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மேட்டுப்பாளையம் தொகுதி மலையும், மலை சார்ந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே ஏறத்தாழ 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதிவாசி மக்கள், மலைவாழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.



அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு, இன்று யானைகளினுடைய அட்டகாசத்தினாலே, அவர்களுடைய வாழ்க்கையிலே பல்வேறு இடர்கள் ஏற்படுகின்றன.

## 6. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல்—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய புத்தகங்கள் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த புத்தகங்கள் பேரவைச் செயலக நூலகப் பிரிவு-2-ன்மூலம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட உள்ளன. அவற்றை உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2007–2008 விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய பதிலுரையைப் புறக்கணித்து, வெளிநடப்புச் செய்கின்றோம்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியானது வேண்டுமென்றே சென்ற முறை இந்த அவையைப் புறக்கணித்தார்கள். வாக்களித்த மக்களுக்குக்கூடத் துரோகம் செய்கின்ற வகையிலே *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள் கவர்னர் உரையைப் புறக்கணிக்கின்றபோது உள்ளே வந்து என்ன சொன்னார்கள் என்று சொன்னால், 'கலைஞர் அவர்களே, இராஜினாமாச் செய்'—கலைஞர் என்று சொல்லவில்லை, பெயரை வைத்துக் குறிப்பிட்டார்கள். அதேபோன்று, 'உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, இராஜினாமாச் செய்' என்று கோஷமிட்டுவிட்டு, கவர்னர் உரையைப் புறக்கணித்தார்கள். கடந்த இரண்டு நாட்களாக உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது கறுப்புச் சட்டையை அணிந்து வந்து எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், இந்த ஆட்சி பொறுப்பேற்று 11 மாதங்களிலே பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. எப்படியாவது இந்த ஆட்சி கலைந்துவிடும் என்று மனப்பால் குடித்தார்கள். அது நிறைவேறவில்லை.

அது மட்டுமல்ல, இந்த ஆட்சியைப் பார்த்து ஒரு மைனாரிட்டி அரசு, மைனாரிட்டி அரசு என்று சட்டமன்றத்திலே பேசுகின்றபோதும், வெளியிலே அவர்களுடைய பொதுச் செயலாளர் அவர்கள் உரையாற்றுகின்றபோதும் சொல்லிப் பார்த்தார்கள். எதுவும் நடக்கவில்லை. ஒரு பழமொழி உண்டு, தமிழகத்திலே. மகன் செத்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலி அறுக்க வேண்டும் என்ற ஒரு பழமொழி தமிழகத்திலே உண்டு. அதுபோன்று, இந்த ஆட்சி நடந்தாலும் பரவாயில்லை, நடைபெறாவிட்டாலும் பரவாயில்லை, தமிழகத்திலே 7 கோடி மக்கள் எப்படிப் போனாலும் பரவாயில்லை, எதைப் பற்றியும் கவலை இல்லை, நாம் திரும்பவும் எப்படியாவது ஆட்சிப் பீடத்திலே அமர்ந்துவிட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே மனப்பால் குடித்துக்கொண்டு, இப்படியெல்லாம் செய்துகொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த உறுப்பினர்கள் நாட்டு மக்களுக்கு, அந்தத் தொகுதிகளின் மக்களுக்குத் துரோகம் இழைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கடந்த ஐந்து ஆண்டு காலமாக இந்தப் பேரவையில்



இரண்டாவது முறை பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டுக் கெஞ்சியபோதெல்லாம் மறுத்த ஒரு சர்வாதிகாரத் தன்மையை மாற்றி, கூட்டணி இயக்கங்களாக இருக்கின்ற எங்களையெல்லாம் அழைத்து, நீங்கள் சற்றுப் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, இன்றைக்கு ஒரு ஜனநாயகப் பூந்தோட்டமாக அனைத்து மக்களாலும், பத்திரிகைகளாலும் பாராட்டப்படுகின்ற வகையில், ஏன், பிரதான எதிர்க்கட்சியினுடைய முன்னணி வரிசைத் தலைவர்களே பாராட்டுகின்ற வகையில், தமிழகத்தினுடைய வரலாற்றில் எப்பொழுதும் இடம்பெறாத அளவிற்கு, பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குத் தங்கள் கடமையை ஆற்றுவதற்கு, ஒவ்வொரு நாளிலும் அவர்கள் கட்சியில் இரண்டு பேர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்து, தங்கள் கருத்துகளைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பைக் கொடுத்தும்கூட, தயாரித்து அனுப்பப்படுகின்ற அறிக்கைகளை மட்டும் அவர்கள் படித்துவிட்டு, குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துவிட்டு, இன்றைக்குத் தமிழ்நாட்டினுடைய எதிர்காலத்திற்காக அனைத்துத் துறை ஊழியர்கள் இருந்து, தமிழ்நாட்டிலே இதயமாகச் செயல்படுகின்ற உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு தளபதி அவர்கள் அறிவித்திருக்கிற நல்ல திட்டங்களை எல்லாம் மறைப்பதற்காக, வேண்டுமென்றே ஒரு செய்தியை வெளியிலேவிட வேண்டுமென்பதற்காக இதுபோன்று அவர்கள் இன்றைக்கு வெளிநடப்புச் செய்வது என்பது ஏற்புடையது அல்ல என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமும், இன்றையதினமும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அநேகமாக இங்கே பேசியிருக்கிற அனைத்து உறுப்பினர்களுமே பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்றுதான் வேண்டுகோள் வைத்தார்கள். இரண்டு தினங்களாகப் பேசிய அ.தி.மு.க. உறுப்பினர்களும் அதே கோரிக்கைகளை முன்வைத்தார்கள். சில அரசியல் விமர்சனங்கள்

செய்வது என்பது இயல்பான ஒன்று. ஆனால், இரண்டு தினங்களாக அ.தி.மு.க. உறுப்பினர்கள் கறுப்புச் சட்டை அணிந்து வந்து தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். நான் பேசுகிறபோது நேற்றையதினமும் இதைக் குறிப்பிட்டுச் சொன்னேன். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இந்த உள்ளாட்சித் துறை என்பது, செய்தி–விளம்பரத் துறை அமைச்சரின்கீழே ஒரு துணைத் துறையாகத்தான் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதை அவரால் மறுக்க முடியாது, பேசிய அவர்தான் அதற்குப் பொறுப்பு.

மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் செய்தி–விளம்பரத் துறை அமைச்சர் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் என்றுதான் அதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டது. ஆகவே, இவ்வளவு பெரிய மிக முக்கியத்துவமான ஒரு பெரிய துறை ஒரு துணைப் பொறுப்பாகத்தான் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே அவருக்கு அளிக்கப்பட்டது என்பதுதான் யதார்த்தமான உண்மை. ஒரு துணைப் பொறுப்பாக ஒரு மிகப் பெரிய துறை இருந்தால், அது நாட்டு மக்களுக்கு எவ்வளவு பயன் அளித்திருக்கும் என்று கடந்த 5 ஆண்டு காலத்திலே எடுத்துப் பார்த்தால் தெரியும் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலைப் பற்றிய கருத்துகளை அவர்கள் பதிவு செய்கிறார்கள். இதைப் பற்றி எதிர்க்கட்சிகளாக இருக்கக்கூடிய நாங்கள் எல்லோருமே பல கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறோம். ஆனால், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே உள்ளாட்சித் தேர்தல் 2001–லே நடைபெற்றபோது எந்தவிதமான முறைகேடுகளும் வன்முறைகளுமே நடைபெறவில்லையா? இதேபோலப் பல இடங்களிலே தேர்தலிலே பங்குபெறவிடாமலேயே செய்த காரியங்கள் என்பவை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நடைபெற்றன என்பது உண்மை. அதை மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தொகுதியிலே அதற்குச் சான்றுகள் இருக்கின்றன.

என்னுடைய மன்னார்குடி நகராட்சிப் பகுதித் தேர்தலிலேயே துணைத் தலைவர் தேர்தலை நடைபெறவிடாமல், அ.தி.மு.க. வெற்றி பெறுவதற்காக அவர்கள் செய்த காரியங்களும், ஜாலங்களும் இருக்கின்றனவே, அவை எண்ணிலடங்காதவை; அப்படியெல்லாம் செய்தார்கள். ஆக, அப்படிக் காரியங்கள் நடைபெற்றன. புதுவிதமாகவும் அந்த அரசு ஒரு சட்டம் போட்டது. அவர்களுக்கு இருக்கிற காழ்ப்புணர்ச்சி. இன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு சகோதரர் மு.க. ஸ்டாலின் அவர்களை எதிர்க்க வேண்டுமென்ற அந்த



நோக்கத்தோடுதான் அவர்கள் செயல்படுகிறார்கள். அப்படித்தான் அவர் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து, மேயராகவும் பொறுப்பிலே இருந்தபோது, மேயராக இருக்கக் கூடாது என்பதற்காகவே ஒரு புதுச் சட்டத்தையே போட்டது அ.தி.மு.க. ஆட்சி. இப்படிப் பழிவாங்குகிற நடவடிக்கைகளை அ.தி.மு.க., அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு செய்கிறது. என்னுடைய அழுத்தமான கருத்து என்பது, இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சித் துறை என்பது கறுப்புத் துணியால் போட்டு மூடப்பட்டதே தவிர, அது வெளிச்சத்திற்கு வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் நேற்றையதினம் நான் பதிவு செய்தேன், இப்போதும் அதைத்தான் சொல்கிறேன். அவர்கள் உள்நோக்கத்தோடு செயல்படுகிறார்கள். இவ்வளவு நேரம், அவர்கள் இரண்டு நாட்களாகப் பேச வேண்டியதையெல்லாம் பேசிவிட்டு, பதிலை யாரிடம் கேட்பதற்காகப் போய் இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத்தான் நாட்டு மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதைச் சொல்லி இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே அவர்களை நான் கண்டிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கிக் கிடந்த உள்ளாட்சித் துறையைத் தமிழக மக்களே போற்றுகின்ற அளவிற்கு இன்று 24 மணி நேரமும் பணியாற்றுகின்ற நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கே கடந்த கால ஆட்சியில் இருந்த குட்டுகளையெல்லாம் வெளிப்படுத்திவிடுவாரோ என்று பயந்து அவர்கள் சபையைவிட்டு வெளியேறி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்கு எவ்வளவோ துரோகம் செய்த அந்தக் கருஞ்சட்டைக்காரர்கள், இரண்டு நாட்களாக வருகின்ற கருஞ்சட்டைக்காரர்கள் இன்றும் ஒரு மிகப் பெரிய துரோகத்தை இழைத்துவிட்டு வெளியிலே சென்றிருக்கிறார்கள்.

நம்முடைய தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் அவர்கள் இந்தியாவில் உள்ள தலைவர்களுக்கே முன்னோடியாக, ஒரு ஜனநாயகத் தலைவராகத் தமிழகத்திலே இன்று ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சித் தேர்தல் குறித்து ஒரு நீதிபதி சொன்ன கருத்தை உடனே ஏற்று, தாமதிக்காமல், நீங்கள் அனைவரும் இராஜினாமாச் செய்யுங்கள் என்று சொன்னாரே, (மேசையைத் தட்டும் ஒலி) அங்குதான் நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

உடனே தேர்தலை வைத்து, தேர்தலைச் சந்தித்து, மக்கள் அளிக்கும் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று வாக்குறுதி அளித்து, தேர்தலிலே வெற்றிபெற்று, பெருவாரியான வெற்றிபெற்று, இன்று சென்னை மாநகராட்சிமூலம் திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்களுக்குச் சேவை செய்துகொண்டிருக்கிறது. நான்கூட அந்தத் தேர்தலிலே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே ஒரு பள்ளிக்கூடத்தில் இருந்த பூத்துக்குச் சென்றேன். ஓர் ஆய்வாளர் என்னைத் தடுத்து நிறுத்தினார். எதற்காகத் தடுக்கிறீர்கள் என்று கேட்டேன். 'முதலமைச்சருடைய உத்தரவு, உள்ளாட்சித் துறை அமைச்சருடைய உத்தரவு. இந்தக் கோட்டைத் தாண்டி யாரும் உள்ளே செல்லக் கூடாது, ஜனநாயகமாக நடக்கின்ற தேர்தல்' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட ஜனநாயக நாட்டிலே, ஒரு ஜனநாயகத்தின் தலைவராக இருக்கின்ற நம்முடைய முத்தமிழறிஞரைப் பார்த்துக் குறை சொல்வதற்கு ஏதுமில்லை; உள்ளாட்சித் துறையில் குற்றம் கண்டுபிடிப்பதற்கு ஏதுமில்லை; ஆகவே, நாங்கள் தமிழக மக்களுக்குப் பதில் சொல்ல இயலாது என்று, சபையை விட்டு, பயந்து வெளியேறியிருக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எரிமலையாய், சுடுதழலாய், இயற்கைக் கூத்தாய்,
எதிர்ப்புகளை நடுநடுங்க வைக்கும் இடியொளியாய்
இனவுணர்வு தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக் கட்டும் கொடுவாளாய்"

வாழ்ந்திட்ட, தந்தை பெரியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி)

"நந்தாச் சுடர் விளக்காம்;
நறுமணத்துப் பூமலராம்;
கண்ணியத்தை, கடமையினை, கட்டுப்பாடெனும்
பண்பை, கண்போலக் காத்திடற்கு
கற்பித்த பெருந்தகையாம்"

நம்முடைய ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரு பெரும்



தலைவர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட திராவிடப் பெருந்தலைவர், செந்தமிழ்நாட்டு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி)

"உன் நாக்கு தமிழ்மணத்தால் கழகம் நந்தவனம் சிறக்கும்,
உன் வாக்கு திறத்தாலே வஞ்சினப் பகையனைத்தும் பறக்கும்
அருமருந்தே, அன்பழக உடன்பிறப்பே"

என்று தலைவர் கலைஞர் அவர்களின் கற்கண்டு வரிகளால் வர்ணிக்கப்பட்டிருக்கும் பேராசிரியப் பெருந்தகை அவர்களையும் வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும், இன்றும், கடந்த இரண்டு நாட்களாக, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கைகள்மீது 13 பேர், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே உரையாற்றியிருக்கின்றார்கள். அ.தி.மு.க.வின் சார்பில் திரு. ஆர். சாமி அவர்களும், திரு. அன்பழகன் அவர்களும், திரு. சின்னராஜ் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், திரு. கோபிநாத் அவர்களும், அம்மையார் யசோதா அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. ஆறுமுகம் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. சிவாஜி அவர்களும், திரு. சுந்தர் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் திரு. கோவிந்தசாமி அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு இயக்கத்தின் சார்பில் திரு. சிவபுண்ணியம் அவர்களும், ம.தி.மு.க. சார்பில் திரு. ஞானதாஸ் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் திரு. செல்வப்பெருந்தகை அவர்களும் இங்கே பல கருத்துகளை எடுத்து வைத்து உரையாற்றியிருக்கின்றார்கள். பல அறிவுரைகளை, ஆலோசனைகளை, அதையும் தாண்டி சில குறைகளை, ஏன், அதையும் தாண்டி சில குற்றச்சாட்டுகளையும் இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள். நான் அவற்றையெல்லாம் இந்தத் துறைக்கு நீங்கள் தந்திருக்கக்கூடிய ஊக்கமாக, நீங்கள் வழங்கிக்கொண்டிருக்கக்கூடிய உற்சாகமாக எடுத்துக்கொண்டு, அப்படிப்பட்ட அரிய பல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு நாட்களாக அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்களும், ம.தி.மு.க.வைச் சார்ந்தவர்களும் இங்கே கறுப்புச் சட்டையை அணிந்து வந்த அந்தச்

செய்தியைப் பற்றியெல்லாம் இங்கே நம்முடைய பல்வேறு கட்சித் தலைவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். நான் அது பற்றி அதிகம் பேசிட விரும்பவில்லை. ஆனால், ஒன்றை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஏற்கெனவே சென்னை மாநகராட்சியின் மேயர் என்ற பொறுப்பை நான் ஏற்றிருந்த நேரத்தில், அ.தி.மு.க. ஆட்சி அன்றைக்கு ஒரு கறுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து, அந்தப் பதவியிலிருந்து, அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கினார்கள். ஆக, அன்றைக்கு ஆட்சியில் இருந்த காரணத்தால் கறுப்புச் சட்டம் போட்டார்கள். இப்போது ஆட்சியில் இல்லாத காரணத்தால், கறுப்புச் சட்டை போட்டுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் வந்து அமர்ந்து, என்னுடைய பதிலுரையைக் கேட்க முடியாத அளவிற்கு அவர்கள் வெளியேறியிருப்பது, உள்ளபடியே என்னைப் பொறுத்தவரையில் ஒரு வருத்தமான செய்திதான் என்பதை நான் இங்கே அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் என்ற இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இந்தக் குறுகிய 10 மாத காலத்திற்குள்ளாக நம்முடைய முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு, அமைச்சர் பெருமக்களின் ஒத்துழைப்போடு, ஏன் இங்கே அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆதரவோடு, உள்ளாட்சி அமைப்பிலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய பிரதிநிதிகளுடைய அரவணைப்போடு, அரசினுடைய கொள்கைகளையும், திட்டங்களையும் நிறைவேற்றுவதிலே மிகுந்த அர்ப்பணிப்பு மனப்பான்மையோடு தங்களுடைய கடமையை ஆற்றிக்கொண்டிருக்கக்கூடிய இந்தத் துறையின் உயர் அதிகாரிகள், பிற துறைகளைச் சார்ந்து இருக்கக்கூடிய அதிகாரிகள், அலுவலர்கள், இவர்களுடைய துணையோடு, இந்த 10 மாத காலத்தில் இந்தத் துறை ஒரு பெரும் சாதனையைப் படைத்திருக்கிறது என்பதை நன்றி உணர்வோடு நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளோடு, அதிலே பொறுப்பேற்றிருக்கக்கூடிய தலைவர்களோடு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது தொடர்புகொள்ள, இணைந்து தங்களது கடமைகளை நிறைவேற்றிக்கொள்வதற்குத்



துணையாக இருக்க வேண்டும் என்று கருதி, இந்தத் துறை ஒரு பெரிய முயற்சியில் ஈடுபட்டு, அந்த வகையிலே உள்ளாட்சித் தலைவர்களுடைய தொலைபேசி எண்கள், அவர்களுடைய முகவரிகள் ஆகியவற்றை எல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாகத் தயாரித்து, அவற்றை உங்களிடத்திலே நாங்கள் ஒப்படைத்திருக்கிறோம்.

அதேபோன்று, ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலே, 2006 ஆம் ஆண்டிலே அரசின்மூலமாக வழங்கப்பட்டிருக்கக்கூடிய ஆணைகள், அவற்றையும் தொகுத்து உங்களிடத்திலே இந்தத் துறையின் சார்பிலே ஒப்படைத்திருக்கிறோம். அதைவிட இன்னொன்றை நான் முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் இதுவரையிலே நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள், தொடர்ந்து நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள், அவற்றையும் தொகுத்து ஒரு புத்தக வடிவிலே உங்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறோம். இதிலே இன்னொன்று ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிவாரியாகவே அதைத் தயாரித்து அதை உங்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறோம். எனவே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இது ஒரு புதிய முயற்சி என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அதை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப்பான வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் என்னுடைய அன்பான வேண்டுகோளாக உங்களிடத்திலே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஏறத்தாழ 10 ஆண்டு காலமாக நடைபெற முடியாமல் இருந்த தேர்தல், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல்—இந்த ஊராட்சிகளினுடைய தேர்தலை எப்படியாவது நடத்திட வேண்டுமென்று, அரசு பொறுப்பேற்றவுடன் முடிவு செய்து, அதை வெற்றிகரமாக நாம் நடத்தி முடித்திருக்கிறோம். இதே அவையிலே, நம்முடைய முதல்வர் அவர்கள்கூட ஒரு முறை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தத் தேர்தலை முழுமையாக, வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டால், அதிலே தேர்வு செய்யப்படக்கூடிய தலைவர்களை எல்லாம் அழைத்து நம்முடைய தலைநகராம் சென்னை மாநகரத்தில் ஒரு பாராட்டு விழா நடத்துவேன், அரசின் சார்பிலே நடத்துவோம் என்று கூறியிருந்தார்கள். ஆகவே, அந்தத் தேர்தலிலே வெற்றிபெற்றிருக்கக்கூடிய தலைவர்களை, துணைத் தலைவர்களை, உறுப்பினர்களை, அந்த வட்டாரத்திலே இருக்கக்கூடிய சமுதாயத் தலைவர்களையெல்லாம் சென்னைக்கு அழைத்து கலைவாணர் அரங்கத்திலே நம்முடைய முதல்வர் அவர்களே

பங்கேற்கக்கூடிய நிலையில் சமத்துவப் பெருவிழா என்ற ஒரு மாபெரும் விழாவை நடத்தி இந்தத் துறை ஒரு மாபெரும் சாதனையைப் படைத்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சித் துறை என்பது, 6 மாநகராட்சிகள், 152 நகராட்சிகள், 561 பேரூராட்சிகள், 29 மாவட்ட ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள், 12,618 கிராம ஊராட்சிகள். இவை தவிர, மாநில அளவிலே 2 பயிற்சி நிறுவனங்கள், மண்டல அளவிலே 5 ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள். சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம்—METRO, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்—TWAD Board, மகளிர் மேம்பாட்டுக் கழகம், இப்படிப் பல்வேறு துறைகளைப் பெற்றிருக்கக்கூடிய துறை இந்தத் துறை. அரசினுடைய திட்டங்களெல்லாம் மக்களுக்கு முழுமையாகப் போய்ச் சென்றடையக்கூடிய ஒரு சிறப்பான பணியை இந்தத் துறை மேற்கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

நம்முடைய முதல்வர் அவர்கள், நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனே எனக்கு அவர் வழங்கிய முதல் உத்தரவு, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மாவட்டங்களுக்கு உடனடியாகச் சுற்றுப் பயணத்தை நடத்தி, அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை அறிந்து, புரிந்து, மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை எப்படித் தீர்த்து வைப்பது என்பதை ஆய்ந்து, அதற்குரிய பரிகாரத்திலே உடனடியாக நீ ஈடுபட வேண்டுமென்று உத்தரவு தந்தார்கள். அந்த உத்தரவை ஏற்றுக்கொண்ட நானும், இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய உயர் அதிகாரிகளும், அனைத்து மாவட்டங்களுக்கும் அந்தப் பயணத்தை மேற்கொண்டோம். நீலகிரி மாவட்டம் தவிர்த்து, மிச்சமிருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களிலும் அந்தப் பணியை முடித்திருக்கிறோம்.

முற்பகல் 11–50

இன்னும்கூடச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இரண்டாவது கட்ட ஆய்வுப் பணியைக்கூட நாங்கள் தொடங்கி இருக்கிறோம். தஞ்சை, திருச்சி, திண்டுக்கல், திருநெல்வேலி, விழுப்புரம், இந்த மாவட்டங்களில் இரண்டாவது கட்ட ஆய்வுப் பணியைக்கூட நிறைவேற்றி முடித்திருக்கிறோம்.



இப்படி ஆய்வுப் பணிகளில் ஈடுபடுகிற நேரத்தில் ஒரு முறை நான் முதல்வரிடத்திலே சென்று ஒரு மாவட்டத்திற்கான சுற்றுப் பயணத்தை மேற்கொள்கிறபோது, அதற்குரிய செய்தியைச் சொல்லிவிட்டுச் செல்லச் சென்றிருந்தேன்.

நான் மட்டுமல்ல. அமைச்சர்கள் யாராக இருந்தாலும், சென்னையிலிருந்து வேறு ஏதாவது மாவட்டத்திற்குச் செல்கிறார்கள் என்று சொன்னால், நம்முடைய முதல்வரிடத்திலே தகவலைச் சொல்லிவிட்டுச் செல்வதை ஒரு முறைப்படி, ஒரு மரபாகவே நாங்கள் அதைக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறோம். அந்த முறையிலேதான் நானும் ஒரு மாவட்டத்தினுடைய சுற்றுப் பயணத்தை மேற்கொள்கிறபோது தகவலைச் சொல்வதற்காகச் சென்றிருந்தபோது, அப்போது அருகிலிருந்த என்னுடைய தாயார், 'நீ பொறுப்பேற்ற காலத்திலிருந்து நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன், அமைச்சரானதிலிருந்து தொடர்ந்து ஊர், ஊராகச் சுற்றிக்கொண்டிருக்கிறாயே, இப்படியே சுற்றிக்கொண்டிருந்தால் உன்னுடைய உடம்பு என்ன ஆகும்' என்று ஒரு தாய்ப் பாசத்தோடு என்னைப் பார்த்துக் கேட்டார்கள். அப்போது அருகிலிருந்த நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அவன் ஊர், ஊராகச் சுற்ற வேண்டும் என்பதற்காகத்தான் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைப் பொறுப்பை (மேசையைத் தட்டும் ஒலி) அவனிடத்திலே தந்திருக்கிறேன் என்று பெருமையோடு சொன்னார்கள். இது எனக்குக் கிடைத்த பெருமையாக மட்டுமல்ல; நான் இதை ஒரு கடமை உணர்வாகவே கருதி, அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறேன் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆய்வுக் கூட்டத்தைப் பொறுத்தவரையிலே, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதைப்போல உள்ளாட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடிய பிரதிநிதிகள், நம்முடைய உயர் அதிகாரிகள், அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள், பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள், இவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து இந்த ஆய்வுக் கூட்டத்தை நாம் தொடர்ந்து நடத்தியிருக்கிறோம்.

இந்த ஆய்வுக் கூட்டத்தினுடைய நோக்கம் என்பது, நம்முடைய மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்கள்கூட இங்கே பேசுகிறபோது அதைப் பற்றி விளக்கமாகச்

சொல்லியிருக்கிறார்கள். எனவே, நான் அதைப் பற்றி அதிகம் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய பிரச்சினைகள் என்ன? திட்டங்கள் தீட்டப்பட்டு அந்தத் திட்டங்கள் எந்த நிலையில் இருக்கின்றன? ஆக, எதிர்காலத்தில் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன? இவற்றைப் பற்றியெல்லாம் ஆய்வு நடத்தியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளும் பங்கேற்கிற காரணத்தால், அந்தத் துறைகளோடு இணைந்து செயலாற்ற வேண்டிய பல பிரச்சினைகள். ஆக, அவற்றைப் பற்றியும் நாங்கள் முழுமையாக ஆய்வு நடத்தி இருக்கிறோம்.

ஒரு முறை அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். 'அன்புத் தம்பி, மக்களிடம் அணுகு, அவர்களோடு சேர்ந்து வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்குப் பணி செய், அவர்களோடு இணைந்து திட்டமிடு, அவர்களுக்குத் தெரிந்ததை வைத்துத் துவக்கு, அவர்களுடைய உடைமைகளை வளமாக்கு' என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதனால்தான், அறிஞர் அண்ணா பிறந்த மாவட்டமான காஞ்சிபுரம் மாவட்டத்திலேதான் நான் இந்த முதல் ஆய்வுப் பணியைத் தொடங்கினேன். (மேசையைத் தட்டும் ஒலி) காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பணியை மேற்கொண்டபோது, அதிலே பங்கேற்ற ஆலந்தூர் நகர மன்றத்தினுடைய தலைவர் திரு. ஆர்.எஸ். பாரதி அவர்கள், அவர்களுடைய நகராட்சியில் இருக்கக்கூடிய பல பிரச்சினைகளை எல்லாம் பற்றி அங்கே எடுத்துப் பேசினார்கள்.

அதிலே குறிப்பாக, ஆலந்தூர் நகராட்சியிலே நாடாளுமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டு நிதியில் 20 இலட்சம், 10 இலட்சம் கொள்ளளவுகொண்டிருக்கக்கூடிய இரண்டு tanks—குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, 2003 ஆம் ஆண்டிலே கட்டி முடிக்கப்பட்டு, அதற்கான குழாய் இணைப்புகளும் வழங்கப்பட்டு, ஆனால், சென்னைப் பெருநகரக் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக Metro water-லிருந்து வழங்க வேண்டிய அந்தத் தண்ணீர் இதுவரையில் வந்து சேரவில்லை, 2003-லே கட்டப்பட்டது என்ற அந்தப் பிரச்சினையைச் சுட்டிக்காட்டினார். உடனடியாக அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகளை அழைத்து, இது பற்றி உடனடியாக ஆய்வு செய்து, எங்களுக்கு விளக்கம் சொல்லுங்கள் என்று ஆணையை வழங்கினோம். அவர்களும் ஆய்வுக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு, நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று



ஆய்வு நடத்தி, அதற்குப் பிறகு ஒரு வார காலத்திற்குள்ளாக சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக அந்தத் தண்ணீரை அங்கே வழங்கி இருக்கிறார்கள். தொடர்ந்து இப்போது அங்கே வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11-55

அது மட்டுமல்ல, ஏதோ அ.தி.மு.க. என்றால், எதிர்க்கட்சி என்றால் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்றெல்லாம்கூட இங்கே கருத்துகள் எடுத்துப் பேசப்பட்டன. கட்சி பேதமின்றி இந்த ஆய்வுக் கூட்டத்தை நாங்கள் எப்படி நடத்தியிருக்கிறோம் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர் வெளிநடப்புச் செய்துவிட்டார். இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். நாமக்கல் மாவட்டத்தினுடைய ஆய்வுக் கூட்டம். அந்தக் கூட்டத்தை நாங்கள் நடத்திக்கொண்டிருந்தபோது அங்கே திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள், அவர் தன்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பல பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேசி முடித்து, குறிப்பாக, அவருடைய தொகுதியைச் சார்ந்த பள்ளிப்பாளையம் ஒன்றியம், கொக்கராயன்பேட்டை; அங்கே எட்டு ஊரகக் குடியிருப்புப் பகுதிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது; பணிகள் எல்லாம் முடிந்துவிட்டன; ஆனால், இதுவரையில் எங்களுக்குக் குடிநீர் வழங்கப்படவில்லை என்ற ஒரு பிரச்சினையைச் சுட்டிக்காட்டினார். உடனே அன்று ஆய்வுக் கூட்டத்திலே பங்கேற்றிருக்கக்கூடிய அதிகாரிகளை அழைத்து நாங்கள் விசாரித்தபோது, இல்லை, இல்லை, தொடர்ந்து நாங்கள் தண்ணீரைத் தந்துகொண்டிருக்கிறோம் என்று விளக்கம் சொன்னார்கள். உடனே அந்தச் சட்டமன்ற உறுப்பினர், இல்லை, இல்லை, இன்னமும் எங்களுக்கு வழங்கப்படவில்லையென்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார். அதற்குப் பிறகு, சரி, இந்தப் பிரச்சினையை இத்தோடு நிறுத்துங்கள், மாலையிலே இந்தக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு, ஒரு குழுவை அமைத்து—அதிகாரிகளைக்கொண்ட ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவிற்குத் தலைமையாக சட்டமன்ற உறுப்பினரையே நியமித்து நாங்கள் அனுப்பி வைத்தோம். அங்கே சென்று ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். அங்கிருந்த மக்களும், அங்கு இருக்கக்கூடிய அந்த உள்ளாட்சி அமைப்பில் இருக்கக்கூடிய பிரதிநிதிகளும், இங்கே எங்களுக்கு நீண்ட நாட்களாகத் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது, இந்த ஆட்சி வந்ததிலிருந்து எங்களுக்குத் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது என்று எல்லோரும் சொல்லி, அத்தனை பேரும்

ஒரு கடிதமே எனக்கு எழுதி, அந்தக் கடிதத்தில் அத்தனை பேருமே கையொப்பமிட்டு—இதிலே வேடிக்கை என்னவென்று சொன்னால், அ.தி.மு.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரும் அதிலே கையொப்பமிட்டு அந்தக் கடிதம் என் கையில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இருந்திருந்தால், அதை எடுத்து இப்போது காண்பித்திருப்பேன். அந்த வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த ஆய்வுக் கூட்டத்தினுடைய நோக்கத்தை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேனே தவிர, வேறல்ல.

அதேபோல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரத்தை வழங்க வேண்டும். இது தொடர்ந்து நாம் பரவலாகப் பேசிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு செய்தி. அதை நாங்கள் மறுப்பதற்கில்லை. எப்பொழுதுமே திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே உள்ளாட்சிக்கு என்று இருக்கக்கூடிய அதிகாரத்தை முறையாக வழங்க வேண்டும் என்பதிலே எந்தவிதக் கருத்து மாறுபாடும் இல்லை என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னும்கூட நான் பெருமையோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய நேரங்களில் எல்லாம் இந்த அதிகாரத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு நாம் தொடர்ந்து வழங்கியிருக்கிறோம் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

1996 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, நீண்ட ஆண்டு காலமாக நடைபெறாமல் இருந்த உள்ளாட்சித் தேர்தல், அந்தத் தேர்தலை நாம் முழுமையாக நடத்தினோம். அந்தத் தேர்தலை நடத்தியதற்குப் பிறகு, உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் அப்போது முடிவு எடுத்து, அதற்காக ஒரு குழுவை அமைத்தார்கள். மாநிலத் திட்டக் குழு உறுப்பினர் திரு. எல்.சி. ஜெயின் அவர்கள் தலைமையிலே அந்தக் குழு அமைக்கப்பட்டது. அதேபோல், முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. அந்தோணி அவர்கள், இப்படிச் சிலரை உறுப்பினர்களாகக்கொண்டு அந்தக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு சிறப்பான வகையிலே ஆய்வு செய்து, ஒரு பரிந்துரையை நம்முடைய முதல்வரிடத்திலே ஒப்படைத்தார்கள். பல்வேறு துறைகளைச் சார்ந்து இருக்கக்கூடிய, பல்வேறு தொடர்புடைய அந்தத்



துறைகளுடைய அதிகாரங்கள் எல்லாம் உள்ளாட்சி அமைப்புக்கு வழங்கப்பட வேண்டுமென்று சொல்லி அந்தப் பரிந்துரையைத் தந்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையை நம்முடைய முதல்வர் அவர்கள் உடனடியாக ஏற்றுக்கொண்டு, அந்த அதிகாரத்தை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

அதற்கடுத்து, 1997 ஆம் ஆண்டு மேலும் கூடுதல் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று நம்முடைய ஆட்சி முடிவு செய்து, நம்முடைய முதல்வர் அவர்கள் உடனடியாக அன்றைக்கு இந்தத் துறையினுடைய அமைச்சர் பொறுப்பில் இருந்த நம்முடைய மாண்புமிகு அண்ணன் கோ.சி. மணி அவர்களுடைய தலைமையிலேதான் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணத்தை நடத்தி, 1999 ஆம் ஆண்டு நம்முடைய முதல்வரிடத்திலே கொண்டு வந்து பரிந்துரைகளைத் தந்தார்கள். அந்தப் பரிந்துரைகளைப் பொறுத்தவரையில், 1,209 பரிந்துரைகள். அந்த 1209 பரிந்துரைகளிலே 718 பரிந்துரைகளை நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, உள்ளாட்சிக்குரிய அந்த அதிகாரத்தை அன்றைக்கே வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்போது உள்ளாட்சிக்கு அதிகாரம் வேண்டும், அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று எல்லோரும் சொல்வது நியாயம். ஆனால், அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் சொல்லிக்கொண்டிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. காரணம், கடந்த ஆட்சியில் 2001–2006 ஆம் ஆண்டுகளிலே அ.தி.மு.க. ஆட்சியைப் பொறுத்தவரையில் உள்ளாட்சிக்கு அதிகாரங்களை வழங்க ஏதாவது ஒரு குழு அமைக்கப்பட்டதா என்று கேட்டால், கிடையாது. அதைப் பற்றி யோசித்தார்களா, அதைப் பற்றிக் கவலைப்பட்டார்களா? கிடையாது. ஆக, அதிகாரங்களைக்கூடப் புதிதாக வழங்க வேண்டிய அவசியம் இல்லை. இருந்த அதிகாரங்களைப் பறித்தார்கள். அதுதான் கடந்த கால ஆட்சியினுடைய நிலை.

நண்பகல் 12–00

அதாவது, 1997 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, அன்றைக்கு எங்களைப்போன்றவர்கள் எல்லாம் மாநகராட்சிகளில் மேயர் பொறுப்பு ஏற்றிருந்தபோது பல அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அதாவது, நிர்வாகம் தொடர்பான ஆவணத்தைப் பார்வையிட, ஆணையரிடமிருந்து வரக்கூடிய அறிக்கைகளைப் பெற, அதேபோல, கடிதப் போக்குவரத்து, மாநகராட்சிக்கும், அரசுக்கும் செல்லும் கடிதம் அதேபோல; அரசுக்கும்,

மாநகராட்சிக்கும் வரக்கூடிய கடிதம்; இந்தக் கடிதப் போக்குவரத்து மேயர் வழியாகத்தான் நடைபெற வேண்டும் என்று முடிவு எடுத்து, அதற்காகச் சட்டப் பிரிவு 37 (A) என்கிற அந்தக் கூடுதல் அதிகாரத்தை அன்றைக்கு நம்முடைய ஆட்சி உள்ளாட்சி அமைப்புக்கு வழங்கியது. ஆனால், 2001–லே அ.தி.மு.க ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 37 (A) என்ற அந்தச் சட்டப் பிரிவையே நீக்கி, வழங்கிய அதிகாரங்கள் அனைத்தையும் பறித்து இருக்கிறது.

அது மட்டுமல்ல, பணி மதிப்பீடுகளுக்கு, மேயர்களுக்கு ஓர் அனுமதியை நாம் சிறப்பான வகையிலே வழங்கினோம். அதிலே, சென்னை மேயரைப் பொறுத்தவரையில் ரூ.2 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரை அனுமதி வழங்கினோம். அது கடந்த கால ஆட்சியிலே நீக்கப்பட்டது. அதேபோல, பிற மாநகராட்சிகளுடைய மேயர்களுக்கு ரூ.1 இலட்சம் முதல் 5 இலட்சம் ரூபாய் வரை என்ற அந்த அதிகாரத்தையும் வழங்கினோம். அதையும் கடந்த கால ஆட்சி நீக்கி இருக்கிறது.

இதைவிடக் கொடுமை என்னவென்று கேட்டால், மாநகராட்சிக் கூட்டம் என்பது, மாதத்திற்கு ஒரு முறை நடத்தப்படக்கூடிய ஒரு சூழ்நிலை. இதே சட்டமன்றத்தில் கடந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அ.தி.மு.க.வைத் தவிர்த்து எல்லாக் கட்சித் தலைவர்களும் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் நானும் அதைக் கடுமையாக எதிர்த்தேன். அதை எதிர்க்கக்கூடிய வாய்ப்பு எனக்கு அப்போது கிடைத்தது. என்னவென்று கேட்டால், மாதம் ஒரு முறை நடைபெறக்கூடிய அந்த மாநகர மன்றக் கூட்டத்தை 3 மாதங்களுக்கு ஒரு முறை மாநகராட்சி மன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று ஒரு கடுமையான சட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். அதேபோல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடம் இருந்த விளம்பரப் பலகைகள் வைப்பதற்கான உரிமம், அதையும் பறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே ஒப்படைத்தார்கள். இப்படிப் பல்வேறு அதிகாரங்கள் கடந்த கால ஆட்சியிலே பறிக்கப்பட்டன என்பது உண்மை. அதனால்தான் மீண்டும் இப்போது தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை நடைபெற்ற நேரத்திலே நான் ஒரு அறிவிப்பைக்கூட வெளியிட்டு இருந்தேன். அதாவது, அதிகாரம் பரவலாக்கப்பட உயர் நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்து இருந்தேன். அந்த உயர் நிலைக் குழுவும் அமைக்கப்பட்டு இருக்கிறது.



ஆக, அப்படி அமைக்கப்பட்டிருக்கக்கூடிய உயர் நிலைக் குழுவைப் பொறுத்தவரையிலே, நம்முடைய வசதிக்காக இரண்டு குழுக்களாகப் பிரித்து நாம் அமைத்து இருக்கிறோம். அதாவது, ஊராட்சிகளுக்கு என்று ஒரு குழுவும், நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு என்று ஒரு குழுவும் அமைத்திருக்கிறோம். நகராட்சி உயர் நிலைக் குழுத் தலைவர் பொறுப்புக்கு, அமைச்சராக இருக்கக்கூடிய நானும், வல்லுநர்களாக— அன்றைக்கு இந்தத் துறையினுடைய செயலாளராக இருந்த, இன்றைக்கு உள் துறைச் செயலாளர் பொறுப்பில் இருக்கக்கூடிய திருமதி மாலதி, I.A.S. அவர்கள், ஓய்வுபெற்ற நகராட்சி கூடுதல் நிர்வாக இயக்குநர் திரு. ஜெயராமன் அவர்கள், இந்த இரண்டு பேரையும் வல்லுநர்களாகக்கொண்டு, உறுப்பினர்களாக திராவிட முன்னேற்றக் கழகம், அ.தி.மு.க., காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, பாரதீய ஜனதா கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த உள்ளாட்சி அமைப்பில் இருக்கக்கூடியவர்களை உறுப்பினர்களாக நாம் நியமித்து இருக்கிறோம்.

இதைக்கூட, குழுவின் தலைவர் என்ற முறையிலே ஒவ்வொரு கட்சியினுடைய தலைவர்களுக்கும் நானே கடிதம் எழுதி, அந்தந்தக் கட்சியினுடைய தலைவர்கள் பரிந்துரைக்கக்கூடிய அந்த உள்ளாட்சி அமைப்பினுடைய பிரதிநிதிகளைத்தான் இதிலே நியமித்து இருக்கிறோம் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆக, உள்ளாட்சி என்ற உயர் நிலைக் குழுவிற்கு, நகராட்சி உயர் நிலைக் குழுவிற்கு 16 பேர்கொண்ட ஒரு குழுவும், அதேபோல், ஊரக மற்றும் ஊராட்சிக் குழுத் தலைவராக, அமைச்சர் என்ற முறையிலே நானும், வல்லுநர்களாக, காந்தி கிராமத்தைச் சார்ந்த பேராசிரியர் பழனிதுரை அவர்களும், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களில் ஒருவராக இருக்கக்கூடிய திரு. தமிழருவி மணியன் அவர்களும், அதேபோல, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உள்ளாட்சி அமைப்பில் இருக்கக்கூடிய 18 பேர் இதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆக, அப்படி அமைக்கப்பட்ட அந்தக் குழு கடந்த 7–3–2007 அன்று காலையில் ஊராட்சி அமைப்பிற்கான குழுக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறது. மாலையிலே நகர்ப்புற அமைப்பிற்கான குழுக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். அந்தக் கூட்டத்திலே பல கருத்துகள் எல்லாம் எடுத்துப் பேசப்பட்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து, கடந்த 18–3–2007 அன்று நம்முடைய முதல்வர் அவர்களே பங்கேற்கக்கூடிய வகையில், உள்ளாட்சி அமைப்பினுடைய பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்கக்கூடிய வகையிலே ஒரு சிறப்பான கருத்தரங்கத்தைச்

சென்னை, கலைவாணர் அரங்கத்திலே நடத்தியிருக்கிறோம். அந்தக் கருத்தரங்கத்திலே பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் எடுத்துப் பேசப்பட்டு இருக்கின்றன. அந்தக் கருத்தரங்கத்திலே பங்கேற்று உரையாற்றிய நம்முடைய முதல்வர் அவர்கள்கூட ஒரு வேண்டுகோளை எங்களிடத்திலே எடுத்து வைத்தார்கள். அதாவது, கிராம ஊராட்சித் தலைவர்களையும் அழைத்து நீங்கள் பேச வேண்டும்; அவர்களுடைய கருத்துகளையும் கேட்க வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டார்கள். எனவே, இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடனே மண்டலவாரியாக கிராம ஊராட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து நாங்கள் பேசவிருக்கிறோம். நாங்களே நேரடியாகச் சென்று அவர்களிடத்திலே பேசவிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அந்தப் பணிகள் எல்லாம் முடிவுற்ற பிறகு மீண்டும் உயர் நிலைக் குழு கூடி, அதிலே முழுமையாக இவற்றைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்து, முறையாக அரசுக்கு நாங்கள் அந்தப் பரிந்துரையை வழங்க இருக்கிறோம். நான் உறுதியோடு தெரிவிக்க விரும்புகிறேன், இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், நம்முடைய முதல்வர் அவர்களைப் பொறுத்தவரையில், நியாயமான, முறையான அத்தனை அதிகாரங்களையும் நிச்சயமாக இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த அரசு வழங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–05*

அதேபோல், பல்வேறு துறைகளைச் சார்ந்து இருக்கக்கூடிய அந்த அதிகாரிகளோடு, சம்பந்தப்பட்டு இருக்கக்கூடிய அமைச்சர்களோடு இந்தத் துறை இன்றைக்கு அடிக்கடிக் கலந்துரையாடல் கூட்டங்களை எல்லாம் நடத்தி, ஆய்வு செய்துகொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலே குறிப்பாக, நாங்கள் ஆய்வுக் கூட்டத்திற்குச் செல்லுகிறபோது, அதிலே பங்கேற்கக்கூடிய மின்சாரத் துறை, போக்குவரத்துத் துறை, கல்வித் துறை, அறநிலையத் துறை, அதுபோல் பொதுப் பணித் துறை, இப்படிப் பல்வேறு துறைகளுடைய அதிகாரிகளும் அந்தக் கூட்டத்திலே பங்கேற்றிருக்கிறார்கள். இந்தத் துறைகளுடன் சேர்ந்திருக்கக்கூடிய சில பிரச்சினைகளும் அந்தக் கூட்டத்திலே பேசப்படுகின்றன. அதிலே குறிப்பாக அதிகமாகப் பேசப்பட்ட பிரச்சினை என்னவென்று கேட்டால், இங்கேகூடச் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். மின்சாரத் துறை--இந்தப் பிரச்சினை அதிகமாகப் பேசப்பட்டது. எனவே, இது குறித்து



நான் மின்சாரத் துறை அமைச்சரிடத்திலே அடிக்கடிப் பேசுகின்றபொழுது, இதைப் பற்றி எல்லாம் விளக்கிச் சொன்னபோது, அவரும் என்னிடத்திலே ஒரு கருத்தைச் சொன்னார்கள், நானும், நீங்களும் ஒன்றாகச் சேர்ந்து, என்னுடைய துறையும், உங்களுடைய துறையும் ஒன்றாகச் சேர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து ஒரு கூட்டத்தைக் கூட்டுவோம்; என்னென்ன பிரச்சினைகள் என்பதை நீங்கள் சொல்லுங்கள்; எதையெதைத் தீர்க்க முடியும் என்பதை அதிகாரிகள் சொல்லட்டும்; எனவே, இதில் முதல்வர் அவர்களின் அனுமதியோடு சில பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு காண்போம் என்ற ஒரு கருத்தை அவர் எடுத்துச் சொன்னார்.

அந்த அடிப்படையிலே நம்முடைய மின்சார வாரிய அதிகாரிகளும், உள்ளாட்சித் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளும் ஒருங்கிணைந்த ஒரு கூட்டத்தைக் கூட்டினோம். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டார்கள். பல கருத்துகள் பரிமாறப்பட்டன. பல பிரச்சினைகள் சொல்லப்பட்டன. அந்த வடிவிலேதான் மின் வாரியத்தினுடைய மானியக் கோரிக்கை இந்தச் சட்டமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்ட நேரத்தில் அதற்குப் பதிலளித்துப் பேசிய நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது குறிப்பிட்டுச் சொன்னார். பல்வேறு அறிவிப்புகளை அவர் வெளியிட்டிருக்கிறார். பல சலுகைகளை இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார். இன்னும் விடுபட்டுப் போயிருக்கக்கூடிய சில அறிவிப்புகளைக்கூட, என்னுடைய அறிவிப்பிலே நான் வெளியிட இருக்கிறேன் என்பதை முன்கூட்டியே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த முயற்சியில் ஈடுபட்டு, அதற்குச் சிறப்பான முறையிலே ஒத்துழைப்புத் தந்து இந்த உள்ளாட்சித் துறைக்குப் பல சலுகைகளை வழங்கியிருக்கக்கூடிய நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு, குறிப்பாக இந்த அரசுக்கு, நான் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நம்முடைய துறையின் சார்பிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, மின்சாரத் துறை மட்டுமல்ல; அதேபோல, அறநிலையத் துறை. அறநிலையத் துறையைப் பொறுத்தவரையிலே, ஆங்காங்கு பேருந்து நிலையங்கள் அமைப்பதிலே பல சங்கடங்கள், பல பிரச்சினைகள் இருந்துகொண்டிருக்கின்றன. தொடக்கத்திலேயே நம்முடைய பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் சுதர்சனம் அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். பல முறை என்னைச் சந்திக்கிறபோதெல்லாம

சுட்டிக்காட்டினார்கள். ஏறக்குறைய 20 ஆண்டு காலமாகத் தீர்க்கப்பட முடியாமல் இருக்கக்கூடிய பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்தினுடைய விரிவாக்கப் பணி, அது தடைப்பட்டுப் போயிருக்கிறது. 1987 முதல் இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அறநிலையத் துறை அதிகாரிகளை அழைத்துப் பேசினால்தான் இந்தப் பிரச்சினை முடிக்கப்படும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவ்வாறு அவர்களும் அழைத்துப் பேசப்பட்டு, அந்தப் பிரச்சினையும் முடிக்கப்பட்டு, இப்பொழுது அந்த விரிவாக்கப் பணி தொடங்கியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோலத்தான், பழனி நகராட்சியிலேயும் பேருந்து நிலையத்தை விரிவாக்குவதற்கு ஏறக்குறைய 24 ஆண்டு காலம், அதாவது 1983 முதல் இந்தப் பிரச்சினை இருக்கிறது. அந்தப் பணியையும் முடுக்கிவிடுவதற்காக அந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்து, இப்பொழுது அந்தப் பணியும் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் பழனி நகராட்சிக்கும், பழனி ஆலயத்திற்கும் ஒரு பெரிய பிரச்சினை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது, நிர்வாக ரீதியாக. எனவே, அந்தப் பிரச்சினையும் இப்பொழுது முற்றுப்பெற்றிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாகப்பட்டினத்திலே பாதாளச் சாக்கடைத் திட்டம். அதை அறிவித்தோமே தவிர, அந்தப் பணியைத் தொடங்குவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகாமல் இருந்தது. காரணம், அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ஒரு பிரச்சினை. அந்தப் பிரச்சினையையும் பேசித் தீர்த்து, இப்பொழுது அந்தத் திட்டமும் தொடங்கப்பட்டிருக்கிறது.

குளித்தலை பேருந்து நிலையம், அங்கேயிருக்கக்கூடிய அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஓர் இடம், விலை நிர்ணயம் செய்வதிலே இருக்கக்கூடிய சங்கடம், அதையும் பேசித் தீர்த்து, அந்தப் பிரச்சினைக்கும் ஒரு முடிவைக் கண்டிருக்கிறோம். கொடைக்கானல் பேருந்து நிலைய விரிவாக்கம். அங்கு போக்குவரத்துக் கழகத்திற்கென்று இருக்கக்கூடிய சொந்தமான இடம். அந்த இடத்தைப் பெறுவதிலே ஏறக்குறைய 8 ஆண்டு காலமாக நடந்துகொண்டிருந்தது அந்தப் பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்கும் முடிவு காணப்பட்டு, இப்போது அங்கே பணி தொடங்கப்பட்டிருக்கிறது.



பிற்பகல் 12–10

அதேபோல, கல்வித் துறையைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் தனித்தனியாகச் சொல்வதைவிட ஒரே வரியிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், கிராம ஊராட்சிகளில் இருக்கக்கூடிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுடைய மேம்பாட்டுப் பணிகள், இந்தப் பணிகளை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும், செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோமே தவிர, அந்தப் பணிகள் நடைபெற முடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருந்தது. எனவேதான், பள்ளிக் கல்வித் துறை அமைச்சரோடு, அவரைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளை எல்லாம் அழைத்துப் பேசி சில முடிவுகளை எல்லாம் எடுத்து அந்தப் பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவு காணப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், மத்திய அரசினுடைய நிதி உதவிபெற்று நம்முடைய மாநில அரசின்மூலமாக நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய திட்டங்களைப் பற்றி இங்கே எல்லோரும் விளக்கமாகப் பேசியிருக்கிறீர்கள். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம், பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம், முழு சுகாதார இயக்கம், இப்படிப் பல்வேறு திட்டங்கள்மூலமாக நிதியைப் பெற்று நம்முடைய மாநில அரசு பல திட்டங்களை எல்லாம் இப்போது நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசின்மூலமாக நடைபெறக்கூடிய இந்தத் திட்டங்களின் அடிப்படையிலே, இவற்றின் வளர்ச்சி, இந்தத் திட்டங்களுடைய முன்னேற்றம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி ஆய்வு செய்வதற்காக, மத்திய அரசு 2003–2004–லே ஒரு குழு அமைக்க வேண்டுமென்று சொல்லி, நம்முடைய மாநில அரசுக்குக் கடிதம் அனுப்புகிறது. எப்போது? 2003–2004 ஆம் ஆண்டு கடிதம் அனுப்புகிறது. அந்தக் குழுவை அமைக்கிற நேரத்திலேகூட அவர்களே ஒரு பட்டியலைத் தயாரிக்கிறார்கள். எப்படியென்று கேட்டால், நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர்கள் நியமிக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு சார்ந்த வல்லுநர்கள், இவர்களை எல்லாம் மாநில அரசு நியமிக்க வேண்டும் என்று முடிவெடுத்து, அந்த வகையிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார், யாரை

நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னால், மாண்புமிகு அப்பாதுரை அவர்கள், திரு. பெல்லார்மின் அவர்கள், திரு. தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள், திரு. கே.சி. பழனிச்சாமி அவர்கள்; அதேபோல, அ.தி.மு.க.வைச் சார்ந்த திரு. மலைச்சாமி அவர்கள்; இவர்களைக் கொண்டு ஒரு குழுவை அவர்கள் நியமித்து, அந்தக் குழுவோடு இணைத்து மாநில அளவிலே ஒரு குழு அமைக்க வேண்டுமென்று ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், கடந்த கால ஆட்சி அந்தக் கடிதத்தைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. அந்தக் குழுவை அமைப்பதற்கான முயற்சிகளில் கடந்த கால ஆட்சி ஈடுபடவில்லை. ஆனால், இப்போது நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அவர்களால் நியமிக்கப்பட்ட அந்த நாடாளுமன்றக் குழு உறுப்பினர்களோடு, நம்முடைய மாநிலத்தின் சார்பிலே சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், திரு. கோ.க. மணி அவர்கள், திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள், திரு. வே. மாரிமுத்து அவர்கள், திரு. மு. அப்பாவு அவர்கள், அதேபோல அரசுச் செயலாளர்கள், அலுவல்சாரா உறுப்பினர்கள், இவர்களைக்கொண்ட குழு—30 பேர்கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய கூட்டத்தைக்கூட 30–12–2006 அன்று நாம் கூட்டியிருக்கிறோம்.

நான் உடல் நலிவுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காரணத்தால் அந்தக் கூட்டத்தில்கூடக் கலந்துகொள்ள முடியவில்லை. அதனால் அந்தக் கூட்டத்தை ஒத்திவைக்கலாமா என்று அதிகாரிகள் என்னிடத்திலே கேட்டபோது, இது நீண்ட ஆண்டு காலமாக இருக்கக்கூடிய பிரச்சினை, 2003–2004–லே மத்திய அரசு அனுப்பிய கடிதம். இப்போது நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் இதற்கு ஒரு விடிவு காலம் வந்திருக்கிறது, அதுவும் முதல் கூட்டம், எந்தக் காரணத்தைக் கொண்டும் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டாம், உடனடியாக இந்தக் கூட்டத்தை நீங்கள் நடத்துங்கள் என்று நானும் யோசனை சொல்லி, அதற்குப் பிறகு திரு. அப்பாதுரை அவர்கள் தலைமையிலே முதல் கூட்டம் நடந்திருக்கிறது. அந்தக் கூட்டத்திலே பல்வேறு கருத்துகள் எடுத்துப் பேசப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, திட்டங்களுடைய வழிகாட்டி நெறிமுறைகளைப் பற்றி, அதிலே மாறுதல் செய்திட வேண்டும் என்ற அந்தக் கருத்துகள் எல்லாம்கூடப் பேசப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்திலேகூடக் குறிப்பிட்டுச் சொன்னார்கள், தொகுப்பு வீட்டுக்கான மதிப்பீட்டுத் தொகையை



உயர்த்த வேண்டும் என்ற அந்தத் தீர்மானமும், அதேபோல, பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஓர் ஆண்டுக்கு மத்திய அரசு சுமார் 70 கோடி ரூபாயை சுய உதவிக் குழுக்களுக்கு மானியத் தொகையாக வழங்குகிறது, அதை 150 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டும் என்ற அந்தத் தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு, அதற்குப் பிறகு அந்தத் தீர்மானங்கள் எல்லாம் மத்திய அரசுக்கு நம்முடைய அரசின்மூலமாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 12–15*

அந்த வகையில்தான் தமிழக வேலை உறுதித் திட்டம். இந்தத் தமிழக வேலை உறுதித் திட்டத்தை திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகை, திண்டுக்கல், சிவகங்கைபோன்ற ஆறு மாவட்டங்களில் ஏற்கெனவே நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். ஆக, இவற்றைக் கண்காணிக்க வேண்டும், இவற்றினுடைய முன்னேற்றம் என்ன என்பதைப் பற்றி ஆய்வு நடத்த இதற்கும் ஒரு குழு அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது. எனவே அந்த அடிப்படையிலே, அமைச்சராக இருக்கக்கூடிய என்னுடைய தலைமையிலே, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள், திரு. ஏ.கே.எஸ். விஜயன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய செல்வி கே. பாலபாரதி அவர்கள், திரு. என். சுந்தரம் அவர்கள், அதேபோல, ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர், அரசு அதிகாரிகள் எல்லாம்கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு கூடிய நேரத்தில், இது 6 மாவட்டங்களோடு நின்றுவிடக் கூடாது, இன்னும் சில மாவட்டங்களுக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்ற அந்தக் கருத்துகள் எடுத்துச் சொல்லப்பட்டன. அதற்குப் பிறகு நம்முடைய முதல்வர் அவர்களோடு நாங்கள் கலந்து பேசியபோது, இன்னும் சில மாவட்டங்கள் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டம் வர வேண்டுமென்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதல்வர் அவர்களே பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த அடிப்படையிலேதான், நம்முடைய மத்திய அரசு மூலம் தஞ்சை, திருவாரூர், கரூர் மற்றும் நெல்லை ஆகிய

நான்கு மாவட்டங்களுக்கு இந்தத் திட்டம் இப்போது விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தமிழக வேலை உறுதித் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, அ.தி.மு.க. ஆட்சியிலே அதற்கென்று செலவு செய்திருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்று கேட்டால், வெறும் 3 கோடி ரூபாய்தான். அதனுடைய பணிகளினுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று கேட்டால் 1,524. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த இந்த 10 மாத காலத்திற்குள்ளாக 152 கோடி ரூபாயை இந்தத் திட்டத்திற்காக நாம் செலவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 11,510 பணிகள் இந்தத் திட்டத்தின்மூலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்ல, அவர்களுக்குத் தினக் கூலியாக அவர்களுடைய ஊதியம் எப்படி வழங்கப்பட்டது என்று சொன்னால், 50 ரூபாய், 60 ரூபாய், 40 ரூபாய் என்ற அடிப்படையிலேதான். பொதுப் பணித் துறையினுடைய விலைப் பட்டியல் அடிப்படையிலே அந்த ஊதியம் வழங்கப்பட்டது. முதல் முறையாக நாங்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் இந்தக் கோரிக்கையை என்னிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு தொடர்ந்து எல்லா உறுப்பினர்களும், அதை அதிகப்படுத்தித் தர வேண்டும், 40 ரூபாய், 50 ரூபாய் என்பது தினக் கூலி, தின ஊதியமாக அவர்களால் பெறப்படுகின்ற நேரத்தில், அது போதவில்லை என்ற ஒரு பிரச்சினையை எடுத்துச் சொன்னார்கள். அதைப் பற்றி அரசு சிந்தித்து, இப்போது என்ன முறையைக் கையாண்டுகொண்டிருக்கிறோம் என்று சொன்னால், தனியான விலைப் பட்டியல்மூலமாக, இப்போது ஒரு நாள் ஊதியமாக 80 ரூபாய்க்குக் குறையாமல் அந்தத் தொகையைப் வழங்கக்கூடிய நிலையில் அந்தத் திட்டத்தை நாம் (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கே இருக்கக்கூடியவர்கள் மட்டுமல்ல, வெளியிலே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள், ஏன் பத்திரிகைகளிலேகூட சில நேரங்களில் செய்திகளெல்லாம் வருகின்றன. இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குரிய நிதிப் பகிர்வைப் பற்றித் தொடர்ந்து அந்தச் செய்தி பரவலாகப் பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. இங்கேகூட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. என். நன்மாறன் அவர்கள் நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று



உரையாற்றுகிறபோது இந்தக் கருத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். முதலாவது மற்றும் இரண்டாவது மாநில நிதி ஆணையத்தினுடைய பரிந்துரையின்படி, உள்ளாட்சிக்கு மாநில அரசினுடைய சொந்த வரி வருவாயிலிருந்து நிதிப் பங்கீடு 1996–லிருந்து 8 சதவிகிதமாக இருந்து வந்தது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஆனால் இப்போது, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தினுடைய பரிந்துரையின்படி, நடப்பாண்டில் 9 சதவிகிதமாக அது உயர்த்தப்பட்டு, அப்படி உயர்த்தப்பட்ட காரணத்தினால் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலாக 622 கோடி ரூபாய் இன்றைக்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலையைப் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. நன்மாறன் அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அதாவது, அரசு தன்னுடைய வரி வருவாயிலிருந்து உள்ளாட்சிக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேகூட அது தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு உள்ளாட்சிக்கு அரசு செலவிடும் மொத்தத் தொகை ரூபாய் 9,169 கோடி. இது மாநிலத்தினுடைய சொந்த வரி வருவாயிலிருந்து 30 சதவிகிதம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த 9 சதவிகிதம் என்பது இனி வரக்கூடிய காலங்களில் 9.5 சதவிகிதமாக, 10 சதவிகிதமாக ஆகி, அப்போது உள்ளாட்சி அமைப்புகளுக்கு இன்னும் கூடுதலாக நிதி கிடைக்கக் கூடும் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அங்கீகரிக்கப்படாத மனைகளைப் பற்றி, அவற்றை வரன்முறைப்படுத்த வேண்டும் என்று நாங்கள் ஆட்சிக்கு வந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாகத் தொடர்ந்து எல்லா உறுப்பினர்களும் இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, கோவைப் பகுதியைச் சேர்ந்தவர்கள், திருப்பூரிலே இருக்கக்கூடியவர்கள், குறிப்பாக, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. சி. கோவிந்தசாமி அவர்கள்கூட இதைத் திரும்பத் திரும்ப எங்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். எனவே, ஆட்சிக்கு வந்தவுடனேயே இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று முதல்வர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டார்கள். அதை முறைப்படுத்துவதற்குச் சில சலுகைகளை வழங்கினால்தான் இதை நிறைவேற்ற முடியும். காரணம், நீண்ட ஆண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருந்துகொண்டு இருக்கிறது என்பதை யோசித்து, அதற்குப்

பிறகு நாம் ஆட்சிக்கு வந்தவுடனே, 25-7-2006 அன்று ஒரு அரசாணையைப் பல்வேறு சலுகைகளுடன் நாம் வழங்கினோம். அதற்குப் பிறகு 31-12-2006 வரை 1,25,786 வீட்டுமனைகள் இதுவரையில் வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆக 1,25,786 வீட்டுமனைகள் இதுவரையில் வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தினால், உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கட்டணமாக வந்திருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்று கேட்டால், ரூ.66 கோடியே 35 இலட்சம் இதன்மூலமாக இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புக்கு வந்து சேர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக்கூடக் கால நீட்டிப்புத் தர வேண்டும் என்று நேற்றைக்கு நம்முடைய உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஏற்கெனவே இது பற்றி நம்முடைய முதல்வர் அவர்களிடத்திலே பேசியிருக்கிறோம். அவர்களும் கால நீட்டிப்புத் தருவதாக அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் அறிவிப்பிலே வர இருக்கிறது என்பதை நான் முன்கூட்டியே இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-20*

அடுத்து, இந்தத் துறையினுடைய மகத்தான சாதனைகளில் ஒன்றாக விளங்கிக்கொண்டிருப்பது இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்காக இந்த அரசு முயற்சிக்கும், அதிலே ஈடுபடும் என்று கடந்த ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஆக, அதற்காக ரூ.616 கோடி மதிப்பீட்டில் திட்டம் உருவாக்கப்பட்டு, கடந்த 31-1-2007 அன்று அதனுடைய அடிக்கல் நாட்டு விழா பரமக்குடி நகரத்திலே நடைபெற்றது. அந்த விழாவிற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரடியாகச் சென்று அந்த விழாவிலே பங்கேற்று அதிலே உரையாற்றியிருக்கிறார்கள். அவர்கூட அங்கே உரையாற்றுகிறபோது, "இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகாரிகள் மூன்று ஆண்டுக்குள் முடிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இது மக்களுக்கு அடிப்படையான குடிநீர்ப் பிரச்சினை, நீண்ட காலமாக இருந்துகொண்டிருக்கிற பிரச்சினை. வறண்ட மாவட்டமாக, வறட்சி மாவட்டமாக இருக்கக்கூடிய அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே இதை 3 ஆண்டுகளுக்குள் என்று சொல்வதைவிட, இரண்டு ஆண்டுகளிலே



முடித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். எனவே, அந்தப் பணியை நிறைவேற்றித் தந்தால், அதை நிறைவேற்றித் தருகின்ற பொறியாளர்களுக்கு அரசின் சார்பிலே ஒரு பரிசைக்கூட நான் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்" என்று நம்முடைய முதல்வர் அவர்கள் இதை ஊக்கப்படுத்தக்கூடிய வகையிலே, உற்சாகப்படுத்தக்கூடிய வகையிலே அங்கே உரையாற்றி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புராணத்திலே கதை ஒன்று உண்டு. பிரம்மாவினுடைய மகள் லோபமுத்ரா. காவீர முனிவருடைய மகளாக அவள் பிறந்தாள். அகத்திய முனிவரை மணந்துகொண்டாள். அகத்தியர் தன்னுடைய மனைவியைத் தண்ணீராக மாற்றி, கமண்டலத்தில் வைத்துக்கொண்டார். கமண்டலத்தில் இருக்கக்கூடிய தண்ணீர் நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று கருதி, விநாயகர் காக்கை உருவிலே தோன்றி, அந்தக் கமண்டலத்தைத் தள்ளிவிட்டு காவிரி நதியை உருவாக்கினார் என்பது புராணக் கதை. ஆனால், காலம் காலமாகக் கடுமையான வறட்சியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம். ஆக, அந்த மாவட்ட மக்களுடைய தாகத்தைத் தீர்க்க வேண்டுமென்று கருதி, அதற்காக ரூ.616 கோடி மதிப்பீட்டிலே ஒரு திட்டத்தை உருவாக்கிய அந்தச் சிறப்பான திட்டம்தான் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) அது கதை. இது நிஜம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் முக்கியம்.

அதேபோலத்தான் தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். இந்த இரண்டு மாவட்டங்களுடைய நீண்ட நாள் கனவாக இருக்கக்கூடிய ஒரு மாபெரும் திட்டம் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஜப்பான் நாட்டினுடைய கூட்டுறவு வங்கியினுடைய நிதியுதவிபெற்று நிறைவேற்றப்பட இருக்கிற திட்டம். ரூ.1,005 கோடி மதிப்பீட்டிலே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஜப்பான் நாட்டு ஆய்வாளர்கள்கூட அந்த இரண்டு மாவட்டங்களுக்கு நேரடியாக வருகை தந்து ஆய்வுப் பணிகளையெல்லாம்கூட முடித்துவிட்டுப் போய் இருக்கிறார்கள். ஜப்பான் நாட்டினுடைய அந்த நிதியுதவியை எதிர்நோக்கி நாம் காத்திருக்கிறோம். நம்முடைய முதல்வர் அவர்கள்கூட இதே சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள். ஒரு வேளை ஜப்பான் நாட்டினுடைய நிதி உதவி நமக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னாலும், இதை ஒரு சவாலாக

ஏற்றுக்கொண்டு இந்தத் திட்டத்தை அரசே ஏற்று நடத்தும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிவித்து இருக்கிறார்கள்.

அதேபோல், மத்திய, மாநில அரசுகளுடைய திட்டங்களையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறைமூலம் நிறைவேற்றப்படும் எல்லாத் திட்டங்களையும்விட ஒரு மிகப் பெரிய திட்டமாக விளங்கிக்கொண்டிருப்பது, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) 12,618 கிராம ஊராட்சிகளில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது.

ஆக, வருடத்திற்கு 2,500 கிராம ஊராட்சிகள் என்று சராசரியாக எடுத்துக்கொண்டு, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படப் போகிறது. இந்தத் திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு ரூபாய் 2,523 கோடியே 60 இலட்சம். ஒரு ஊராட்சிக்கு ரூ.20 இலட்சம். இங்கேகூட அதிமு.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறபோது "எங்கேயிருந்து இதற்கு நிதி வரப் போகிறது என்று" குறிப்பிட்டுச் சொன்னார். நான் நிச்சயமாகச் சொல்கிறேன், அரசுதான் அந்தத் தொகையை வழங்கப் போகிறது. சந்தேகம் வேண்டாம். 20 இலட்சம் ரூபாய் அரசின்மூலமாக வழங்கப்பட்டாலும், இன்னும் பல்வேறு சார்புத் துறைகள் இருக்கின்றன. அந்தத் துறைகள்மூலமாகவும் அந்தக் கிராமத்திற்கு நிதி வருகிறது. ஆகவே, இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அந்த ரூ.20 இலட்சத்தையும் சேர்த்துப் பார்த்தால், சில கிராமங்களுக்கு ரூ.50 இலட்சம், ரூ.60 இலட்சம், ரூ.70 இலட்சம், ஏன், சில கிராமங்களுக்கு இப்பொழுது ரூ.1 கோடிகூட வரக்கூடிய நிலை வந்திருக்கிறது. ஆக, இப்படிச் சராசரியாக அந்த ஒவ்வொரு கிராமத்திற்கு நாம் செலவு செய்ய இருக்கிறோம்.

*பிற்பகல் 12–25*

கடந்த நிதியாண்டிலே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே 508 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 2,540 கிராம ஊராட்சிகளை நாம் தேர்ந்தெடுத்தோம். இந்த ஆண்டு 2,534 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து, அதற்காக 507 கோடி ரூபாய் நிதியை நாம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒன்றை நான் சொல்ல வேண்டும்.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகமான அளவிற்கு விவாதம் நடந்திருக்கிறது.



ஆனால், இப்பொழுது அதிகம் நடக்கவில்லை. அதனால், ஓரளவிற்கு நீங்கள் புரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதைத் தெளிவாக நாங்கள் உணர்ந்துகொண்டிருக்கிறோம். இருந்தாலும், நான் ஒரு விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, சட்டமன்ற உறுப்பினர்கள்மூலமாகப் பரிந்துரையை நீங்கள் பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் சிறப்பாக இருக்கும் என்ற ஒரு கருத்து எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கிறது என்பதை நாங்கள் உணராமல் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஒன்றை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டிற்காக 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படக்கூடிய அந்த 1 கோடியே 20 இலட்சம் ரூபாயை இன்றைக்கு முழுவதுமாக நீங்கள் பரிந்துரை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறதா என்று கேட்டால், இல்லை. யாரும் தவறாகக் கருதிவிடக் கூடாது. நான் என்னையும் சேர்த்துச் சொல்கிறேன். ஏறக்குறைய 60 சதவிகிதம் பேர் இன்னும் முழுமையாக அந்தப் பரிந்துரையைக்கூட அரசுக்கு அனுப்பி வைக்கவில்லை என்பதுதான் உண்மை.

ஆக, இது இப்படி இருக்கிறபொழுது, இதையும் உங்களுடைய பரிந்துரைகள்மூலமாக நிறைவேற்றுவோம் என்று சொன்னால், எந்த அளவிற்கு இது காலதாமதமாகும், இந்தப் பணி எந்த அளவிற்கு முழுமையாக நிறைவேற்றப்பட முடியாத ஒரு சூழ்நிலைக்குப் போகும் என்பதைத் தயவுசெய்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது என்று நான் உங்களையெல்லாம் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, நம்முடைய முதல்வர் அவர்கள் இதிலே ஒரு கொள்கை உறுதியோடு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை பொறுத்தவரையிலே, பாரபட்சமின்றி, விருப்பு, வெறுப்பின்றி, கட்சிப் பாகுபாடின்றி இந்தத் திட்டத்தை அனைத்து கிராமங்களிலும் நாம் நிறைவேற்ற வேண்டும் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உறுதியோடு நம்முடைய முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, சில நேரங்களில் இந்தப் பிரச்சினை குறித்து சில இடங்களுக்கு நாம் பரிந்துரை செய்கிற நேரத்தில், அது குறித்து

நீதிமன்றத்திற்குச் சென்றுகூடத் தடை உத்தரவு பெறக்கூடிய ஒரு சூழ்நிலைகூட சில நேரங்களில் வந்துவிடும். எனவே, அதுவும் இதன்மூலமாகத் தவிர்க்கப்படும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதனால்தான் வட்டார அளவிலே, அனைத்து கிராம ஊராட்சிகளுடைய சொந்த வரி வருவாய்க்கான கேட்பினைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, மக்கள் தொகை அடிப்படையிலே வகுத்து, ஒரு நபருக்கான வருவாய் ஒவ்வொரு ஊராட்சிக்கும் கணக்கிடப்படுகிறது. எந்த ஊராட்சியில், தனி நபர் வருவாயைக் கணக்கிட்டுத் தொகை குறைவாக உள்ளதோ, அந்தக் கிராமம் தேர்வு செய்யப்படுகிறது. இவ்வாறு கீழிருந்து மேலாகக் கிராமங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் பயன்பெற இருக்கக்கூடிய கிராமப் பட்டியல்கள் அதேபோல முன்பே தயாராக இருப்பதால், தேவையான பணிகளைத் தேர்வு செய்வதும், அதைத் தொடர்ந்து சார்புத் துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய திட்டப் பணிகளையும் ஒருங்கிணைப்பதும் சுலபமாக முடிகிறது. அதுவும் நிதியாண்டினுடைய தொடக்கத்திலேயே அந்தப் பணியை நம்மால் மேற்கொள்ள முடியும். அதனால்தான் இந்த முறை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை நான் இங்கே தெளிவோடு உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தைப் பற்றிக்கூட நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார். அதேபோல, ம.தி.மு.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானதாஸ் அவர்கள்கூடப் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார். இதைக் கிராம ஊராட்சிகள் செயல்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் இது பற்றி முன்பே விவாதித்திருக்கிறோம். யோசித்துப் பார்த்தோம். கலந்து பேசினோம். ஆனால், இதில் இருக்கக்கூடிய நிலை என்னவென்று கேட்டால், கிராம ஊராட்சியைப் பொறுத்தவரையில், தொழில்நுட்ப அலுவலர்கள், மதிப்பீடுகள் தயாரிக்கக்கூடிய. பணி, ஒப்பந்தப்புள்ளி கோரக்கூடிய அந்தப் பணி, அதுபோலப் பணிகளைக் கண்காணிக்கிற பணி, இதற்கென்று தனி அலுவலர்கள், அலுவலகங்கள் எல்லாம் கிடையாது என்பது உங்களுக்குத் தெரியும். எனவேதான், இந்த ஊராட்சி ஒன்றியத்திலேதான் இந்த வசதிகள் எல்லாம் இருக்கின்றன. அதனால்தான் இந்த நிலையை நாம் ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



*பிற்பகல் 12-30*

அதேபோல், மகளிர் சுய உதவிக் குழு. இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் அதிகம் உங்களுக்கு விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. 1989 ஆம் ஆண்டு முதன்முதலில் தருமபுரி மாவட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் உருவாக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க.வைச் சார்ந்த திரு. ரவிச்சந்திரன் அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார். இது சமூக நலத் துறையோடு இருந்தது; இப்போது ஏன் உள்ளாட்சித் துறைக்கு மாற்றியிருக்கிறார்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள்; ஏற்கெனவே உள்ளாட்சித் துறை அமைச்சருக்குப் பல பணிகள் இருக்கின்றன. இந்தப் பணியை எப்படி நிறைவேற்ற முடியும் என்று. எந்தப் பணிகள் இருந்தாலும் இந்தப் பணியையும் தலையாய பணியாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுவதுதான் இந்த அரசினுடைய கொள்கை என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் பெருமையோடு குறிப்பிட வேண்டும் என்று சொன்னால், எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு சுழல் நிதி, பொருளாதார நிதி நம்முடைய மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்ததற்குப் பிறகுதான்--கிராம ஊராட்சி அளவிலேதான் இந்தச் சுழல் நிதி வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால், நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான்--நகர்ப்புற சுய உதவிக் குழுவினருக்கு இந்தச் சுழல் நிதியை வழங்கிக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 5 ஆயிரம் குழுக்களுக்கு மானியத் தொகையாக 5 கோடி ரூபாய் இந்தத் திட்டத்தின்மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. நாம் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருக்கிறோம், 25 ஆயிரம் குழுக்களை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம் என்று. ஆக, இந்த 10 மாத காலத்திற்குள்ளாக 22,020 குழுக்கள் நம்முடைய அரசின் சார்பிலே அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் அறிக்கையிலேகூடக் குறிப்பிட்டுச் சொன்னோம். ஏற்கெனவே தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, இந்த மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு அன்றைக்குப் பயிற்சித் தொகையாக 45 ரூபாய் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே அது குறைக்கப்பட்டு, வெறும் 7 ரூபாய் 50 காசு வழங்கப்பட்டது.

அதை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் உயர்த்தித் தருவோம் என்று சொன்னோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே 45 ரூபாய் இன்றைக்கு மகளிர் சுய உதவிக் குழுவினுடைய பயிற்சித் தொகையாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஒப்பந்தப்புள்ளிகளைப் பொறுத்தவரையிலே, அதிலே கலந்துகொள்ளக்கூட ஒரு சலுகையை நாம் தந்திருக்கிறோம். பிணை வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு இப்போது அவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல, சுனாமி பாதித்து இருக்கக்கூடிய 12 கடலோரப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாவட்டங்களைச் சார்ந்த 25,955 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 67 கோடியே 27 இலட்சம் ரூபாய் சுழல் நிதியாக, மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல், வழக்கமாக மத்திய அரசு கிராமப் பகுதிகளுக்குத்தான் அதிகமான அளவில் இதுவரையிலே நிதியை வழங்கிக்கொண்டிருந்தது. ஆனால், இந்த முறை நகர்ப்புறப் பகுதிகளுக்கும் அதிகமான அளவில் நிதி வழங்கத் திட்டமிட்டு, அதற்காகப் பல்வேறு திட்டங்களின்மூலமாக அந்த நிதியை இப்பொழுது வழங்க முடிவு செய்து இருக்கிறது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை அபிவிருத்தித் திட்டம், கிராமப்புறங்களுக்கு மத்திய அரசு நிதி உதவி வளர்ச்சித் திட்டம் என்று பல திட்டங்களை இப்பொழுது உருவாக்கி இருக்கிறது. எனவே, முதல் முறையாக, வரலாற்றிலே இல்லாத அளவிற்கு மத்திய அரசு நிதி உதவியோடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்தத் திட்டங்கள் 2006–2007 முதல் செயல்படுத்தப்பட இருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவிக்கிறேன். மத்திய அரசு இந்தத் திட்டத்திற்காக 3,235.24 கோடி ரூபாய்க்கு ஒப்புதலைத் தந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தத் திட்டத்தைப் பற்றி அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டார். ஆனால், பதில் சொல்லுகிறபோது அவர் இங்கே இல்லை. இருந்தாலும், உங்களுக்காக நான் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, மாநகர மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்குக் கடந்த 5 வருடங்களிலே பல்வேறு பெரிய வளர்ச்சித் திட்டங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகை



எவ்வளவு தெரியுமா? ரூ.3,109.23 கோடி. ஆனால் இப்போது 10 மாத காலத்தில்—இப்போது தி.மு.க. ஆட்சிக்கு வந்து இந்த 10 மாத காலத்தில் ஒரு பெரிய மகத்தான சாதனையாக ரூ.3,235.24 கோடிக்கு நாம் ஒப்புதல் பெற்றிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல் சுனாமியைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இதனுடைய பணிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் இதில் ஈடுபட்டு இருந்தாலும், உள்ளாட்சி அமைப்புகள், குடிநீர் வாரியத்தின்மூலமாக இந்த சுனாமியைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய மறுவாழ்வுத் திட்டப் பணிகளுக்காக ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய நிதி உதவி பெற்று 3 ஆண்டுத் திட்டமாக ரூபாய் 495.33 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சி இந்த நிதியைப் பயன்படுத்திச் செலவு செய்து இருக்கக்கூடிய தொகை 4.95 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் இந்த 10 மாத காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 184.48 கோடி ரூபாயை நாம் செலவு செய்திருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதிலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒன்று, உடல் ஊனமுற்ற 26,954 பேர்களுக்கு 26 கோடியே 95 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–35*

அதேபோல், பணியாளர்கள் நியமனத்தைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் கடந்த கால ஆட்சியிலே இந்தப் பணியாளர்கள் எல்லாம் எப்படிப்பட்ட கொடுமைகளுக்கு, சோதனைகளுக்கு எல்லாம் ஆளாக்கப்பட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, அதைப் பற்றி நான் அதிகம் பேசவில்லை என்று சொன்னாலும், நாம் இன்றைக்கு அந்தப் பணியாளர்களினுடைய நலன்களில் எப்படி அக்கறை எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு எந்த வகையிலே துணை நிற்கிறோம் என்பதைத் தயவுசெய்து நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த அ.தி.மு.க ஆட்சியிலே காலியான பணியிடங்களை நிரப்பவில்லை, நான் தலைப்புச் செய்திகளாகவே உங்களிடத்திலே குறிப்பிடுகிறேன். வேலை நியமனத் தடை உத்தரவும் போட்டிருந்தார்கள்; மக்கள் நலப் பணியாளர்களையும் நீக்கி வைத்திருந்தார்கள்; கருணை நியமனத்திற்குக்கூட தடை கடந்த ஆட்சியிலே வழங்கப்பட்டிருந்தது.

இப்போது தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு வேலை நியமனத் தடையை நாம் இரத்துச் செய்திருக்கிறோம். 12,774 மக்கள் நலப் பணியாளர்களை, ஒரே கையெழுத்தில் அத்தனை பேரையுமே இன்றைக்கு வேலையிலே சேர்த்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில் காலியாக இருந்த 5,045 பணியிடங்களில் 1,225 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. எஞ்சியிருக்கக்கூடிய 3,820 பணியிடங்களை நிரப்ப நம்முடைய முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல, நகராட்சிகளில் காலியாக இருக்கக்கூடிய 5,196 பணியிடங்களை நிரப்ப இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. பேரூராட்சிகளில் காலியாக இருக்கக்கூடிய 3,097 பணியிடங்களை நிரப்ப அரசு உத்தரவிட்டிருக்கிறது. மாநகராட்சிகளில், சென்னை மாநகரம் தவிர்த்து, 1,158 பணியிடங்களை நிரப்ப உத்தரவிட்டிருக்கிறது. சென்னை மாநகராட்சியில் பல்வேறு நிலைகளில் 1,716 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதை அறிந்து, 445 பணியிடங்களை நிரப்ப இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய 1,271 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, அ.தி.மு.க.வைச் சார்ந்த மேலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் இங்கே பேசுகிறபோது ஒரு கோரிக்கையை எடுத்துச் சொன்னார். அதாவது, மதுரை மாவட்டத்தில் 148 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே மேலூர் நகராட்சியில் இருக்கக்கூடிய எ. வெள்ளாளபட்டி மற்றும் 7 ஒன்றியங்களைச் சார்ந்த 1,332 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது; அது என்னவாயிற்று என்ற கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். தற்போது அது ஆய்வில் இருப்பது உண்மைதான். இத்திட்டத்திற்குத் தேவையான மொத்தக் குடிநீரின் அளவு சுமார் 360 இலட்சம் லிட்டர், நாளொன்றுக்கு. இதற்கான நீராதாரங்கள் தெரிவு செய்யப்பட்டு, அதற்குப் பொதுப் பணித் துறையினுடைய நீர்ப் பயன்பாட்டுக் குழுவினுடைய ஒப்புதல் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினுடைய ஆய்வுப் பணிகள் இந்த ஆண்டு நிறைவுபெறும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோல், அவரே இன்னொரு கேள்வியையும் கேட்டார். கடந்த ஆண்டு, 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறச் சீரமைப்புத் திட்டம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுடைய மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் நகர்ப் பகுதிகளுக்கான கட்டமைப்பு வசதிகள் ரூ.410 கோடி மதிப்பீட்டில் செய்து கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்களே, அது என்னவாயிற்று என்று கேட்டார்கள். இந்தத் திட்டங்களின்கீழ் 1,760 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 113 திட்டங்களுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் யாவும் இந்த ஆண்டு செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது, வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய குடும்பங்களின் கணக்கெடுப்பு எடுக்கிற நேரத்திலே அதிலே பல்வேறு குழப்பங்கள் இருக்கின்றன, அது சரியாக இல்லை, அதை முறைப்படுத்த வேண்டும் என்ற ஒரு பிரச்சினையை இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மைதான். ஏற்கெனவே இந்தப் பிரச்சினைகளையெல்லாம் அவர் என்னிடத்தில் எடுத்துச் சொன்னபோது, அதற்குப் பிறகு ஒவ்வொரு ஆய்வுக் கூட்டத்திலும் இது பற்றி நாங்கள் கலந்து பேசியிருக்கிறோம். அதற்காக ஆய்வுப் பணிகளைக்கூட நடத்தியிருக்கிறோம். ஆனால், 2003–2004 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு நடத்திய நேரத்தில் அது சரியாக, முறையாக எடுக்கப்படவில்லை என்பதுதான் நூற்றுக்கு நூறு உண்மை. அதை இப்போது நாங்கள் முறைப்படுத்திக்கொண்டிருக்கின்றோம். என்னதான் முறைப்படுத்தினாலும் மத்திய அரசினுடைய guidelines, அது சரியாக வந்தால்தான் இதையெல்லாம் ஒழுங்காகச் செய்ய முடியும் என்கிற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் உண்மை என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டிருக்கின்றோம் எனவேதான், நம்முடைய முதல்வர் அவர்கள் பல முறை மத்திய அரசுக்கு இது சம்பந்தமாகக் கடிதங்கள் எல்லாம்கூட எழுதியிருக்கிறார்கள். தொடர்ந்து நாங்கள் இதிலே ஈடுபட்டு, இதை முழுமையாகச் சரி செய்வதற்கு இந்த அரசு காத்திருக்கிறது, செய்யும் என்பதை நான் உறுதியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஜெனரேட்டர்கள் அமைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை எடுத்து வைத்தார்கள்.

இந்தத் திட்டத்தினைப் பற்றி நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த ஆண்டே முதல் கட்டமாகத் தனி மின் பாதை அமைக்க, 52 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூபாய் 22 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலே தனி மின் பாதைத் திட்டம் ஏற்கெனவே தொடங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த திரு. கோ.க. மணி அவர்கள், அதேபோல திரு. ஆறுமுகம் அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது சென்னைக் குடிநீர் வடிகால் வாரியத்தைப் பற்றிப் பேசுகிறபோது, வட்டிக்கு வட்டி போட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்று ஒரு கருத்தை அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதைப் பற்றி நாங்கள் உடனே விசாரித்தோம். உண்மை நிலை என்னவென்று கேட்டால், வாரியத்திடமிருந்து இணைப்புப் பெற்றுள்ளவர்கள் ஒரு வருடத்தில் இரண்டு தவணைகளாகக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு வரி செலுத்த வேண்டும். மேலும் ஒவ்வொரு மாதமும் குடி நீர்க் கட்டணத்தை வாரியத்திற்குச் செலுத்த வேண்டும். இந்தத் தொகையையும் வாரியத்திற்குச் செலுத்த வேண்டும். குடிநீர்க் கட்டணம் மற்றும் குடிநீர் வரியானது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை செலுத்த வேண்டியதைச் செலுத்தத் தவறினால், அந்தத் தொகையில் 1.25 சதவீத மேல்வரிதான் விதிக்கப்படுகிறதே தவிர, நிச்சயமாகச் சொல்கிறேன், அது surcharge ஆகத்தான் விதிக்கப்படுகிறதே தவிர, வட்டிக்கு வட்டியும் கிடையாது, வட்டியும் கிடையாது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 12–40

அதேபோல், நம்முடைய மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. சிவபுண்ணியம் அவர்கள் இங்கே பேசுகிறபோது, கூத்தாநல்லூரிலே வெண்ணாற்றின் குறுக்கே பாலம் கட்டக்கூடிய ஒரு பணியை, பிரச்சினையைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார். ஏற்கெனவே அந்த மாவட்டத்தினுடைய ஆய்வுக் கூட்டத்திற்குச் சென்றிருந்தபோது இது பற்றிக் கலந்து பேசியிருக்கிறோம். எனவே, அதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு, இந்தப் பாலத்தைப் பொறுத்தவரையிலே, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பிரதான சாலையை இணைக்கும் நகராட்சி சாலைகளுக்குத் தொடர்புடைய வகையிலே அமைந்திருக்கிறது. எது எப்படியிருந்தாலும், இந்தப் பாலம் சுமார் ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில்



அமைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் தன்னுடைய தொகுதியிலே, செங்கல்பட்டு நகரத்திலே, நகராட்சியிலே ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து நகராட்சிகளிலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் இன்றைக்கு இந்த அரசினுடைய கொள்கை. எனவே, விரைவில் அந்தத் திட்டம் உங்களுக்குக் கிடைக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், திருவள்ளூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவாஜி அவர்கள் பேசுகிறபோது அவருடைய திருவள்ளூர் தொகுதிக்கு, அந்த நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். திருவள்ளூர் நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.34 கோடியே 76 இலட்சம் மதிப்பீட்டிலே தயார் செய்யப்பட்டு, மாநிலத் திட்டம் அங்கீகரிக்கும் குழுவினால் அனுமதியும் பெறப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் ஏற்கெனவே அறிவித்தபடி இந்த ஆண்டு செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபிநாத் அவர்கள் இங்கே வேதனையோடு பேசினார்கள்; நான் ஊருக்கு ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டுமென்று சொன்னால், ஓர் அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நிச்சயமாகச் சொல்கிறேன், உறுதியோடு சொல்கிறேன், எந்தக் கவலையும் நீங்கள் படவேண்டாம். நீங்கள் நிச்சயமாக ஊர் போய்ச் சேர்வீர்கள், தைரியமாக நீங்கள் ஊர் மக்களைப் போய்ச் சந்திக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஓசூர் நகராட்சியில் இருக்கக்கூடிய, சொத்து வரியைக் குறைக்கின்ற பிரச்சினை பற்றி இங்கே அவர் தெளிவாகப் பேசியிருக்கிறார். ஏற்கெனவே ஒரு பத்து நாட்களுக்கு முன்பு இந்தப் பிரச்சினையை என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். நாங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே இது பற்றிக் கலந்து பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே, அங்கிருக்கக்கூடிய அதிகாரிகளையும் அழைத்து இது பற்றி விசாரித்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இந்த அளவிற்கு அவர் பேசிய காரணத்தால், இப்போதே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. நகராட்சி

நிருவாக ஆணையர் ஓசூருக்குச் சென்று, உடனடியாக இது பற்றி விசாரணை செய்து, ஒரு வார காலத்திற்குள் எங்களுக்கு அறிக்கை தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அது வந்ததற்குப் பிறகு, நம்முடைய முதல்வருடைய அனுமதியோடு, அரசினுடைய அனுமதியோடு, அவருடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை நான் இங்கே உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, அவர் மேலும் பேசுகிறபோது, ஓசூர் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைப் பற்றிக்கூட இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்; அந்தக் கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார். பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்குச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க இடம் இறுதியாக்கப்பட்டதும், விரிவான மதிப்பீடுகள் தயாரித்து, அடுத்த ஆண்டு அது செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அறிவிப்புகளுக்கு வருகிறேன். இந்த அறிவிப்புகளைப் பொறுமையோடு இருந்து கேட்பதற்கு என்னுடைய வேண்டுகோளாகவே முதலிலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அறிவிப்புகளைப் பொறுத்தவரையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினுடைய அறிவிப்புகளை முதலில் இங்கே எடுத்து வைக்கிறேன்.

ஊரக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில அரசினுடைய பங்கீடு, மாநில அரசினுடைய சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதி இந்த நிதியாண்டில் தற்போதுள்ள 8 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்வினாலும், வருவாய் வளர்ச்சியினாலும், 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.1,225 கோடியாக இருந்த நிதிப் பங்கீடு 2007–2008 ஆம் ஆண்டில் ரூ.1,586 கோடியாக உயரும். இதன்மூலம் ஊரக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த ஆண்டில் ரூ.361 கோடி, அதாவது 30 சதவிகிதம் கூடுதலாக நிதி கிடைக்கும். குடிநீர் வழங்குதல், சுகாதாரம், சாலைகள் மற்றும் தெரு விளக்குகளைப் பராமரித்தல்போன்ற அடிப்படை வசதிகளை நிறைவு செய்யும் பொறுப்பு கிராம ஊராட்சிகளைச் சார்ந்தது. இதைக் கருத்தில்கொண்டு, 2007–2008 ஆம் ஆண்டு முதல் ஊரக, உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியில் கிராம ஊராட்சிகளின் பங்கு 47 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதமாக உயர்த்தப்படும். மேலும், மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே நிதிப் பங்கீடு செய்யும்போது,



பல ஊராட்சிகளுக்குப் போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையை மாற்ற, ஒவ்வோர் ஊராட்சிக்கும் குறைந்தபட்சமாக, ஆண்டு ஒன்றிற்கு 3 இலட்சம் ரூபாய் வழங்கவும், (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள தொகையினை மக்கள் தொகை அடிப்படையிலே பிரித்தளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், கிராம ஊராட்சிகளின் நிதிநிலை தன்னிறைவுபெற்று, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய வழிவகுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–45

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம். தமிழ்நாட்டிலுள்ள சுமார் 22,000 ஆரம்ப மற்றும் 4,500 நடுநிலைப் பள்ளிகளில், அநேகப் பள்ளிகள் பல ஆண்டுகளாகப் பராமரிப்பின்றிப் பழுதடைந்த நிலையில் உள்ளன. இந்நிலையை மாற்ற, கிராமங்களின் பள்ளிச் சூழலைச் சீரமைக்க, இவ்வரசு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம் என்ற ஒரு சிறப்புத் திட்டத்தை ஏற்படுத்தி இவ்வாண்டு முதல் செயல்படுத்தவுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பள்ளிக் கட்டடங்களில் பழுது நீக்கம் செய்யவும், வெள்ளை அடித்தல்போன்ற பணிகளை மேற்கொள்ளவும், தேவைப்படின், மின் வசதி செய்து, மின் விளக்குகள் மற்றும் மின் விசிறிகள் அமைக்கவும் இந்த ஆண்டு 135 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதி. நீங்கள் வைத்த கோரிக்கை. பொது மக்களும், அலுவலர்களும், கிராம ஊராட்சிகளும் தொடர்புகொள்ள ஏதுவாக, அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் இந்த ஆண்டு தொலைபேசி வசதி செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், கிராம ஊராட்சிகள் கணினிகள் வழியாக Internet இணைப்புப் பெற்றுப் பயன்படுத்த வாய்ப்பாக அமையும்.

சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு விருது. வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்கள் தங்களது சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக, பாராட்டத்தக்க வகையில் பல்வேறு சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில், நடப்பாண்டிலிருந்து ஆண்டுதோறும் இத்தகைய சிறந்த நிறுவனங்களுக்குத் தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும், நற்சான்றிதழும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

பயிற்சிக்கான நிதி மற்றும் வசதிகளை மேம்படுத்துதல். தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு, உள்ளாட்சி நிர்வாக மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றிப் பயிற்சி அளித்திடப் பயிற்சித் தொகுப்பு நிதி ஒன்றை ஏற்படுத்தி, அதற்காக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. சிறந்த செயல்பாடுகளை நேரில் கண்டறிவதற்கு ஏதுவாக, மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும், பிற மாநிலங்களுக்கும் பட்டறிவுப் பயணங்கள் மேற்கொள்ளவும் இந்த நிதி பயன்படுத்தப்படும். மேலும், மாநிலத்திலுள்ள 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

வளர்ச்சித் துறை நிர்வாகத்தை நவீனமயமாக்குதல். இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும்பொழுது, ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கத்தைத் தீவிரமாகக் கண்காணிக்கவும், மாவட்ட மற்றும் வட்டார நிர்வாகங்களுக்கிடையே தடையற்ற தகவல் தொடர்புக்குக் கம்பியில்லாத் தகவல் தொடர்பு அவசியமாகிறது. எனவே, முதற்கட்டமாக 17 மாவட்டங்களில் வளர்ச்சித் துறையின் மாவட்ட மற்றும் வட்டார அலுவலர்களுக்கு 4 கோடி ரூபாய் செலவில் கம்பியில்லாத் தகவல் தொடர்புச் சாதனங்கள் வழங்கப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளில் மின் வாரியம் தொடர்புடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு. கடந்த ஆட்சியில் தெரு விளக்கு விரிவாக்கப் பணிகளுக்கு, ஒவ்வொரு பணிக்கும் தனித்தனி மதிப்பீடுகள் தயார் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதால், மின் கம்பங்கள் அமைக்க அதிகச் செலவினமும், காலதாமதமும் ஏற்பட்டது. இந்நிலையை மாற்றி, 13–3–2007 முதல் இப்பணிகளுக்கு நிலையான கட்டணமாக, ஒரு மின் கம்பத்திற்கு ரூ.9,500/– என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள் மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின்மீது விதிக்கப்படும் அபராத வரி 13–3–2007 முதல் 12 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதமாகக் குறைக்கப்படுவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்புள்ள காலத்திற்கான நிலுவையிலுள்ள அனைத்து அபராத வரித் தொகையினையும் அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மின் கட்டணங்களுக்கான கேட்பு பெறப்பட்ட நாளிலிருந்து 20 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகள் முழுத் தொகையினையும் செலுத்திட வேண்டுமென்ற கால அளவை 13–3–2007 முதல் 60 நாட்களாக அரசு கூட்டியுள்ளது.



உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர் பொருத்துவதற்கு, ஒவ்வொரு மின் கட்டணப் பட்டியல் வழங்கும்போது ஆரம்ப மற்றும் இறுதி மீட்டர் அளவுகளைப் பதிவு செய்து முறையான பட்டியல் வழங்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

அடுத்து, உள்ளாட்சிக்கான மின் கட்டணக் குறைப்பு. அந்தக் கட்டணக் குறைப்பைப் பற்றி எல்லோரும் இங்கே பேசியிருக்கின்றீர்கள். நேற்று மாலை நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரிடத்திலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும், நம்முடைய நிதித் துறை அமைச்சரிடத்திலும் நாங்கள் இது பற்றிப் பேசி, அதற்குப் பிறகு இறுதியாக நம்முடைய முதல்வரிடத்திலே நாங்கள் இந்தப் பிரச்சினையைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு முதல்வருடைய முழு ஒப்புதலோடு இதை நான் இங்கே பெருமையோடு, மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன்.

கிராம ஊராட்சிகள் ஒரு யூனிட்டிற்கு மின்சாரக் கட்டணமாக 3 ரூபாய் 40 காசு எனச் செலுத்துகிறது. இனி வரக்கூடிய காலங்களில் வெறும் 3 ரூபாய் மட்டுமே செலுத்தினால் போதும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நாங்கள்கூட—நானும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும்—நேற்று மாலையிலே என்ன முடிவு செய்திருந்தோம் என்றால், வெறும் 3 ரூபாய் 20 காசு போடலாம் என்றுகூட முடிவு செய்திருந்தோம். உடனே நம்முடைய முதல்வர் அவர்கள், அதென்ன 20 காசுகள், round ஆக வெறும் 3 ரூபாய் போட்டாலே போதும் என்று எங்களுக்கு உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒரு யூனிட்டுக்கு மின்சாரக் கட்டணமாக 3 ரூபாய் 50 காசுகள் என செலுத்துவது இனி 3 ரூபாய் 30 காசு என்று அதுவும் குறைக்கப்படுகிறது. (சிரிப்பு) இந்தக் கட்டணச் சலுகை (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதிலே பல பிரிவுகள் இருக்கின்றன, பாருங்கள். இந்தக் கட்டணச் சலுகை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கும் பொருந்தும். எனவே, மின் வாரியத்திற்கு இதனால் ஏற்படக்கூடிய இழப்பீடு சுமார் 50 கோடி ரூபாய். எனவே, அதைக்கூட மானியத் தொகையாக அரசே வழங்குவதற்கு முடிவெடுத்திருக்கிறது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–50*

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் ரூபாய் 120 இலட்சத்தில் ரூபாய் 60 இலட்சத்தை வரையறுக்கப்படாத பணிகளுக்காகவும், மீதமுள்ள ரூபாய் 60 இலட்சத்தை வரையறுக்கப்பட்ட பணிகளுக்காகவும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஆண்டு வரையறுக்கப்பட்ட ரூபாய் 60 இலட்சம் நிதியிலிருந்து ஊரகப் பகுதிகளில் தார்ச் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள், நகர்ப்புறப் பகுதிகளில் தார்ச் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் மழை நீர் வடிகால்களுடன்கூடிய கான்கிரீட் நடைபாதைகள் ஆகிய பணிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கடந்த ஆண்டில் 2,540 கிராம ஊராட்சிகளில் 508 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டில் 2,534 கிராம ஊராட்சிகளில் 507 கோடி ரூபாய் நிதியுதவியோடு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

ஊரகப் பகுதிகளில் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்படும் விளையாட்டு மையங்கள் தொடர்ந்து இயங்குவதற்கு ஏதுவாக, கிராம ஊராட்சிகள் ஆண்டுதோறும் 10,000 ரூபாய்க்கு மிகாது பராமரிப்புச் செலவினம் மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

சாலைகள் பராமரிப்பு. 2006–2007 ஆம் நிதியாண்டில் பன்னிரண்டாவது நிதி ஆணைய மானியம் 103 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த சாலைகளைச் சீரமைத்ததுபோலவே, இந்த ஆண்டும் 103 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

மாநிலத் தேர்தல் ஆணையத்திற்குப் புதிய கட்டடம். மாநிலத் தேர்தல் ஆணையத்திற்குக் கூட்ட அரங்குடன்கூடிய புதிய அலுவலகக் கட்டடம் கட்ட 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை. 1989 ஆம் ஆண்டில் இவ்வரசால் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் இன்று வியக்கத்தக்க வளர்ச்சிபெற்றுள்ளன. இக்குழுக்கள் சமுதாயத்தில்



அங்கீகாரம் பெறவும், அரசு அலுவலகங்கள் மற்றும் வங்கிகளை எளிதாக அணுகிப் பயன்பெறவும், அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கும் அரசு செலவில் அடையாள அட்டை வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த அடையாள அட்டையில் குழு உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள், குழுவினுடைய சேமிப்பு, கடன் மற்றும் இதர தகவல்களும் இடம்பெறும். இப்பணிக்காக இந்த ஆண்டு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுய உதவிக் குழுப் பெண்களுக்கு அடிப்படைக் கல்வி. தற்போது 54 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்து நல்ல முன்னேற்றம் அடைந்து வருகின்றபோதிலும், ஊரகப் பகுதிகளில் எழுத்தறிவில்லா சுய உதவிக் குழுப் பெண்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் இருந்து வருகிறது. ஒரு பெண்ணிற்கு அளிக்கப்படும் கல்வி ஒரு குடும்பத்திற்கே அளிக்கப்படும் கல்வியாகும். ஆகவே, சுய உதவிக் குழுப் பெண்களுக்கு "அனைவருக்கும் ஆரம்பக் கல்வித்" திட்டத்துடன் இணைந்து, அடிப்படைக் கல்வி அளிக்க ஒரு முன்னோடித் திட்டமாக 1,000 ஊராட்சிகளில் இந்த ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும். இத்திட்டம் "சுய உதவிக் குழு கல்வித் திட்டம்" என்று அழைக்கப்படும். இத்திட்டத்திற்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் அரசால் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகளுக்கிடையே போட்டிகள் நடத்துதல். சுய உதவிக் குழு உறுப்பினர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்தவும், சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகளுக்கிடையே சமத்துவப் பொங்கல் திருநாளில் பல்வேறு குழுப் போட்டிகள் நடத்தப்படும். வட்டார அளவிலும், பின்னர் மாவட்ட அளவிலும் போட்டிகள் நடத்தி, வெற்றிபெறும் கூட்டமைப்புகளுக்கு ரொக்கப் பரிசுகளும், விருதுகளும் வழங்கப்படும். இதற்கு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி நிவாரணப் பணிகள். கடல் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் இருக்கும் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் மற்றும் 1,000 மீட்டர் தொலைவிற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு அரசுத் திட்டங்கள்மூலம் கட்டப்பட்டுப் பழுதடைந்துள்ள வீடுகள், ஆக மொத்தம் 15,869 வீடுகள் ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்ட நிதியிலிருந்து

396 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் மீண்டும் கட்டித் தரப்படும். இவ்வாறு கட்டப்படும் ஒவ்வொரு வீடும் 325 சதுர அடியில் இருக்கும். மேலும், இவ்வீடுகளுக்குத் தலா 40,000 ரூபாய் செலவில் அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

பாரம்பரியம் மிக்க நமது பண்பாட்டின் சின்னமாக விளங்கும் கிராமக் கைவினைஞர்கள் தொழில் மேம்பாட்டிற்காக விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் ஒன்றும், மாமல்லபுரத்தில் சிற்பப் பூங்காவும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியோடு 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–55

நிர்வாக வசதிகள் மற்றும் பணியாளர் நலன். திட்டப் பணிகளை ஆய்வு செய்து, துரிதமாகவும், தரத்துடனும் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி இயக்குநர்கள், உதவிச் செயற்பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள்போன்ற அலுவலர்களுக்கு 5 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் 123 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

ஊரக வளர்ச்சிப் பணிகளைச் செம்மையாகக் கண்காணிக்கத் தற்போது வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் போதுமானதாக இல்லாததால், 2007–2008 ஆம் ஆண்டிலிருந்து இரு வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் மாத எரிபொருள் ஒதுக்கீடு தலா 100 லிட்டரிலிருந்து 150 லிட்டராகவும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு மாத எரிபொருள் ஒதுக்கீடு 75 லிட்டரிலிருந்து 100 லிட்டராகவும் உயர்த்தி வழங்கப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலகங்களை மேம்படுத்த, 29 உதவி இயக்குநர்கள் (தணிக்கை) அலுவலகங்களை 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், துறையின் பிற அலுவலகங்களுக்கும், 416 படிப்பெருக்கிகள் வழங்கப்படும். மேலும், 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிகரி இயந்திரங்கள் வழங்கப்படும். இதற்காக அரசு 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

கடலூர், தருமபுரி, தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் உதவி இயக்குநர்களுக்குப் (தணிக்கை) புதிய



அலுவலகக் கட்டடங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் அமைக்கவும், சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலருக்கு முகாம் அலுவலகம் கட்டுவதற்கும் அரசு மொத்தம் 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1996–2001 ஆம் ஆண்டுகளில் இதே அரசு ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் முழுநேர மற்றும் பகுதிநேர எழுத்தர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள், துப்புரவுப் பணியாளர்கள் ஆகியவர்களுக்குச் சிறப்பு பொங்கல் கருணைத் தொகை வழங்கப்பட்டு வந்தது. இடையிலே முந்தைய ஆட்சியில் இது வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டது. இந்த ஆண்டு முதல் கருணைத் தொகையாக ஆண்டுக்குத் தலா 300 ரூபாய் மீண்டும் வழங்கப்படும். இதனால் 60,000–க்கும் மேற்பட்டோர் பயன்பெறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு மே 2006–ல் பதவியேற்றபோது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அனைத்துப் பிரிவுப் பணியிடங்களிலும் அதிக எண்ணிக்கையில் காலிப் பணியிடங்கள் இருந்தன. இது திட்டங்களின் செயலாக்கத்தை வெகுவாகப் பாதித்தது. இதனால் இந்த அரசு காலிப் பணியிடங்களை நிரப்ப கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பித்தது:

தமிழ்நாடு தேர்வாணையம்மூலம் 30 உதவி இயக்குநர்கள், 187 உதவிப் பொறியாளர்கள், 1,001 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்கள் நிரப்புதல்;

தொழில்நுட்பக் கல்வித் துறைமூலம் 630 தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடங்கள் நிரப்புதல்;

வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் 407 பணிப் பார்வையாளர்கள், 54 இளநிலை வரைவு அலுவலர்கள், 657 சாலை ஆய்வாளர்கள், 63 அலுவலக உதவியாளர்கள் பணியிடங்கள் நிரப்புதல்;

கருணை அடிப்படையிலே 402 இளநிலை உதவியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர் வரையிலான காலிப் பணியிடங்கள் நிரப்புதல்;

தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகம்மூலம் 202 இரவுக் காவலர்கள் மற்றும் ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்புதல்;

தினக் கூலி அடிப்படையிலே பணிபுரியும் 47 பணியாளர்களின் பணியை நிரந்தரமாக்குதல்.

மக்கள் நலப் பணியாளர்கள் மற்றும் இதர பணியிடங்களையும் சேர்த்து இந்த அரசால் கண்டறியப்பட்ட 17,819 காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசு உத்தரவு பிறப்பித்து, இதுவரை 13,999 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 3,820 காலிப் பணியிடங்களை இந்த அரசு இந்த ஆண்டு நிரப்ப இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகை மாநகராட்சிகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் ஒரு மிகப் பெரிய நிதிச் சுமையாக அமைந்துள்ளது. 1-4-2007 அன்று மாநகராட்சிகளும், நகராட்சிகளும் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் அசல் தொகை ரூபாய் 430 கோடியாகும். அதேபோல், அவை செலுத்த வேண்டிய நிலுவை வட்டித் தொகை ரூபாய் 363 கோடியாகும். நகராட்சி அமைப்புகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஒவ்வொரு ஆண்டும் இந்த அமைப்புகளுக்கு அரசு வழங்கும் பகிர்வு நிதித் தொகையிலிருந்து (Devolution) பிடித்தம் செய்யப்படுகிறது. பல நகராட்சிகளில் இவ்விதம் பிடிப்பதற்குக்கூட நிதி ஆதாரங்களின்றி அவதிக்கு ஆளாகின்றன.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது குறித்துப் பரிசீலிக்க அமைக்கப்பட்டிருக்கக்கூடிய உயர் நிலைக் குழுவால் இது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. ஊராட்சித் தலைவர்களுடைய கருத்தரங்கத்திலும் கடன் நிவாரணம் ஒரு முக்கியக் கோரிக்கையாகப் பலரால் வலியுறுத்தப்பட்டது. மேலும், நகர்மன்றத் தலைவர்களுடைய பேரவையும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியது.

மூன்றாம் மாநில நிதி ஆணையமும் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதத்தைக் குறைத்திடப் பரிந்துரை செய்துள்ளது. இப்பொருள் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநகராட்சிகளும், நகராட்சிகளும் கடன் சுமையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும், இதற்கு வட்டி விகிதத்தில் மட்டும் குறைத்துச் சலுகை வழங்குவது போதாது என்றும், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள கடினமான நிதி நிலைமைகளைக் கருத்தில்கொண்டு, மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான அசல் ரூபாய் 430 கோடி மற்றும் வட்டி ரூபாய் 363 கோடி, ஆக மொத்தம்



ரூபாய் 793 கோடியையும் தள்ளுபடி செய்யலாம் என்று முடிவெடுத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முழுக் கடன் தள்ளுபடி, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் நிதிநிலை சீரடையப் பெரிதும் உதவும் என்றும் நம்புகிறேன். மேலும், இதனால் மேம்படும் நிதியாதாரங்களைக்கொண்டு, தரமான சாலைகள், குடிநீர் வடிகால் வசதிகள்போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளைச் செவ்வனே செய்து, இக்கடன் நிவாரணத்தின் பயன் பொது மக்களை எட்ட மாநகராட்சிகளும், நகராட்சிகளும் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

பிற்பகல் 1-00

தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏழு நகர்ப்புற உள்ளாட்சிச் சட்டங்கள் உள்ளன. இதனால், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே சீரான சட்டங்களும், விதிகளும் இல்லாமல் உள்ளன. மேலும், தேவைப்படும் மாற்றங்களைக் கொண்டு வரும்பொழுதெல்லாம், அனைத்து நகர்ப்புறச் சட்டங்களிலும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இதைக் கருத்தில்கொண்டு, 1998 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசால் ஒருங்கிணைந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆயினும், சில நடைமுறைக் காரணங்களுக்காக இந்தச் சட்டத்தினுடைய செயல்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுப் பழைய சட்டங்களே தற்போது நடைமுறையில் உள்ளன. 1998-க்குப் பிறகு இந்தச் சட்டங்களில் பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆகவே, மீண்டும் 1998-ல் நடைமுறைப்படுத்திய சட்டத்தைப் புதுப்பிப்பதற்குப் பதிலாக, தேவையான திருத்தங்களுடன் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரு பொதுவான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தை இயற்ற அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறும் பணிகள், செலவினங்கள், நிதி நிலைமை, நிதியறிக்கை போன்றவற்றை அவ்வப்போது மக்களுக்குத் தெரிவிப்பதன்மூலம் மக்களின் ஈடுபாட்டை அதிகரிக்கவும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் ஒளிவுமறைவின்றி நடைபெறுவதை உறுதி செய்யவும் முடியும். ஆகவே, தேவைப்படும் அனைத்துத் தகவல்களையும்

மக்களுக்கு வெளியிடுவதைச் சட்டபூர்வமாக்க, நகர்ப்புற உள்ளாட்சிச் சட்டங்களில் தேவைப்படும் திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப் படி உயர்த்தி வழங்கப்படும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் தங்களது அலுவலகத் தகுதிப்பாட்டில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கு அரசினுடைய முன்னனுமதிபெற வேண்டும் என்றும், அவ்வாறான வகைமுறையை மீறும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு ரூ.50,000/– அபராதம் மற்றும் பதவியிழப்பு ஆகிய தண்டனைகள் வழங்கப்படும் என்றும் முந்தைய அரசால் சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மன்றத் தலைவர்கள் பேரவையின் கோரிக்கையை ஏற்று, மேற்குறிப்பிட்டுள்ள அபராதம் மற்றும் பதவியிழப்பு ஆகிய தண்டனைகளுக்கு வகை செய்யும் விதிமுறைகள் நீக்கம் செய்யப்படும்.

விளம்பரப் பலகைகள் வரி முதலில் அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் வசூலிக்கப்பட்டு வந்தது. இதைக் கடந்த ஆட்சியில் அரசு மாற்றி, அந்த வரி வருமானத்தில் 75 விழுக்காட்டை அரசிற்கும், 25 விழுக்காட்டை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்க சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தது. இந்த அரசு இதனை மாற்றி, முன்பு இருந்ததுபோலவே விளம்பரப் பலகைகள்மூலம் கிடைக்கும் வருமானம் முழுமையும் அந்தந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கே வழங்க உத்தரவிட்டிருக்கிறது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கடைகளைக் குத்தகைக்கு விடும் முறையை ஒழுங்குபடுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி, அசல் குத்தகைதாரர்கள் அல்லாத பிறர் கடைகளைத் தற்போது நடத்தி வந்தால், அவர்களுக்கே அனுமதி வழங்கி, அவற்றை ஒரு முறை ஒழுங்குபடுத்தவும், குத்தகைக் கால அளவைத் தற்போதுள்ள மூன்று வருடங்களிலிருந்து ஒன்பது வருடங்கள் என்று மாற்றியமைக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது.

சென்னைப் பெருநகர்ப் பகுதி தவிர ஏனைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் உள்ள அனுமதியற்ற காலி மனைப் பிரிவுகளை முறைப்படுத்தும் திட்டத்தைக் கடந்த ஆண்டு இவ்வரசு கொண்டு வந்தது. இத்திட்டம் 31–12–2006 அன்றுடன் நிறைவுபெற்றுள்ளது.



பொது மக்களுக்கு மிகுந்த பயனை அளித்துள்ள இத்திட்டத்தின் கால அவகாசத்தை மேலும் நீட்டிக்க வேண்டும் என்ற பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று, இத்திட்டம் 31–12–2007 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1–05

தமிழகத்தில் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள நகராட்சிப் பேருந்து நிலையங்களையும் மற்றும் சுற்றுலா, வழிபாட்டுத் தலங்களிலுள்ள பேருந்து நிலையங்களையும் நவீனப்படுத்தி, பயணிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் உயர்ந்த தரத்தில் அமைத்திட அரசு முடிவெடுத்துள்ளது. ஓசூர், பழனி, வந்தவாசி, பொள்ளாச்சி, பூவிருந்தவல்லி மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளுடைய பேருந்து நிலையங்கள் இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக மேம்படுத்தப்படும்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுடைய பராமரிப்பில் உள்ள அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் நவீன வசதிகளுடன் வடிவமைக்கப்பட்ட சுத்தமான பராமரிப்புடன்கூடிய நவீனக் கழிப்பறைகள் அமைக்கப்படும்.

பேருந்து நிலையங்களில் தமிழ் நூல்கள் விற்பது பொது மக்களுக்கு நூல் படிக்கும் பழக்கத்தை அதிகரிக்கவும், தமிழ் நூல்களின் விற்பனையை அதிகரிக்கவும் ஏதுவாக அமையும். இதைக் கருத்தில்கொண்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் இரண்டு பெட்டிக் கடைகள் அமைக்கப்பட்டு, இக்கடைகளில் நூல்கள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன், முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற முறையில் குறைந்த வாடகையில் வழங்கப்படும்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள காலி மனைகளுக்குத் தற்போது விதிக்கப்பட்டு வரும் காலி மனை வரியானது பதிவுத் துறையினுடைய வழிகாட்டு மதிப்பீட்டின்படி விதிக்கப்படுகிறது. வழிகாட்டு மதிப்பு அடிக்கடி அதிகரிப்பதால், இந்த வரி மேலும் உயர்ந்துகொண்டே செல்லும் நிலையுள்ளது. மேலும், இந்த வரியைப் பெரும்பாலான மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் வசூலிக்க இயலாத நிலையும் உள்ளது. ஆகவே, மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று, காலி மனை வரியினை

வழிகாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் விதிக்காமல், காலி மனையின் பரப்பளவிற்கு ஏற்றவாறு விதிக்கலாம் என்று அரசு முடிவெடுத்துள்ளது.

நகர்ப்புறங்களில் வாழக்கூடிய தாய்மார்களின் நலனைக் கருத்தில்கொண்டு 42 நகராட்சிகளில் உள்ள மகப்பேறு நிலையங்கள் இரண்டு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சம் ரூபாய் அரசு மானியத் தொகைமூலம் அனைத்து நவீன வசதிகளும்கொண்ட நிலையங்களாக மேம்படுத்தப்படும்.

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வரும் மயானங்களில் மயானப் பணிபுரியும் வெட்டியான் என்று அழைக்கப்படும் பணியாளர்கள் இனிமேல் மயான உதவியாளர்கள் என்று அழைக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இப்பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு முறையான கால முறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

நகர்ப் பகுதிகளில் உள்ள முறையான அணுகுச் சாலை வசதிகள் இல்லாத மயானங்கள் அனைத்திற்கும் இந்த ஆண்டே உரிய சாலை வசதிகள் அமைத்துத் தரப்படும்.

சுற்றுப்புறச் சூழல் கெடாமல் பாதுகாக்கவும், குறைந்த செலவில் தகனம் செய்திடவும், கடந்த ஆண்டு 5 மாநகராட்சிகள் மற்றும் 33 நகராட்சிகளில் பதினைந்து கோடியே இருபது இலட்சம் ரூபாய் செலவில் எரிவாயு தகன மேடைகள் அமைக்க அரசு ஒப்புதல் வழங்கியது. இத்திட்டம் 2007–2008 ஆம் ஆண்டில் மேலும் 14 நகராட்சிகளில் ஐந்து கோடியே அறுபது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 விழுக்காடு அரசு மானியத்துடன் செயல்படுத்தப்படும்.

69 நகராட்சிகளில் உள்ள இடுகாடுகளில் சுற்றுப்புறச் சுவர்கள் கட்டுதல், புதர்களை நீக்கிச் சமப்படுத்துதல், பூந்தோட்டம் அமைத்தல், பொது மக்கள் அமர்வதற்கு வசதி ஏற்படுத்துதல், தண்ணீர் மற்றும் கழிப்பிட வசதி செய்தல், இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல், சடங்குகள் செய்வதற்கான கூடங்கள் அமைத்தல்போன்ற பணிகளைச் செய்து, ஆறு கோடியே இருபத்தெட்டு இலட்சம் ரூபாய் செலவில் இடுகாடுகள் மேம்படுத்தப்படும். இதற்கு அரசு மூன்று கோடியே பதினான்கு இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கும்.

பொது இடங்களில் பிராணிகள் வதை செய்யப்படுவதை முற்றிலும் தடை செய்யவும், பொதுச் சுகாதாரத்தைக் கருத்தில்கொண்டும், முதல் கட்டமாக 2006–2007 ஆம் ஆண்டில் 32 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் ஏழு கோடியே நாற்பது இலட்சம் ரூபாய் செலவில் நவீன இறைச்சிக் கூடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியது. இத்திட்டத்தினை அனைத்து நகராட்சிகளிலும் செயல்படுத்திடும் நோக்கத்தில், 2007–2008 ஆம் ஆண்டில் இரண்டாவது கட்டமாக மேற்கொண்டு 65 நகராட்சிகளில் பதின்மூன்று கோடி ரூபாய் செலவில் நவீன இறைச்சிக் கூடங்கள் கட்டப்படும். இதற்கு மாநில அரசினுடைய 50 விழுக்காடு மானியத் தொகையாக ஆறு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.



நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் உள்ள மண் சாலைகள் மற்றும் கற்சாலைகள் நான்கு ஆண்டுகளில் தார்ச் சாலைகளாகவும், சிமென்ட் கான்கிரீட் சாலைகளாகவும் மாற்றியமைக்கப்படும் எனக் கடந்த ஆண்டு உறுதியளித்தபடி, கடந்த ஆண்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2007–2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்மூலம் 500 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்படும். நிதி வசதியற்ற அறுபது நகராட்சிகளுக்கு இத்திட்டத்திற்காகப் பத்துக் கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கும்.

தற்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்கும் முறையை எளிதாக்கிட அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, முறையான கட்டணங்கள் செலுத்தி வீட்டுக் குடிநீர் இணைப்புகள் கோரும் அனைவருக்கும் மொத்த இணைப்பு எண்ணிக்கையில் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றிக் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

செங்கோட்டை, புளியங்குடி, உசிலம்பட்டி, ஆற்காடு, நெல்லிக்குப்பம், துவாக்குடி, குமாரபாளையம், தாராபடவேடு மற்றும் சாத்தூர் நகராட்சிகளுக்கு அரசு மானியத்தில் இரண்டு கோடியே எழுபத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

உயர் கல்வி பயிலும் மாணவர்கள், குறிப்பாக வருமானம் குறைந்த குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்மூலம் உயர் கல்விப் படிப்பகங்கள் ஏற்படுத்தி, அவற்றில் பாடப் புத்தகங்கள் மற்றும் பாட சம்பந்தப்பட்ட நூல்கள், தேர்வுகள் சம்பந்தப்பட்ட துணை நூல்கள், விளக்கங்கள் அடங்கிய நூலகம், கணினிகள், வலைத்தள வசதிகள், படிப்பறை வசதிகள், விளக்கு, குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்து கொடுக்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாகக் கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி,

மதுரை, திருநெல்வேலி, ஈரோடு, வேலூர், நாகர்கோவில், தஞ்சாவூர், விழுப்புரம் ஆகிய நகரங்களில் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படும்.

தற்போது மாநகராட்சி மற்றும் நகராட்சிகளால் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான இதர வசதிகள் மற்றும் கருவிகள் முதலியவற்றை வழங்கி, அவற்றின் தரத்தினை மிகச் சிறந்த பள்ளிகளின் நிலைக்கு இணையாக உயர்த்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறக்கூடிய முதல் 25 மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் வகையில், மாநகராட்சி, நகராட்சி நிதியிலிருந்து பாராட்டுப் பத்திரங்களும், பரிசுத் தொகையும் வழங்கிச் சிறப்பிக்கப்படும். மேலும், இவர்களில் பொருளாதாரக் காரணங்களுக்காக உயர் கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ள மாணவ, மாணவியரின் பட்டப் படிப்புச் செலவுகள் அனைத்தும் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

*பிற்பகல் 1–10*

எல்லா நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்துவது இந்த அரசின் கொள்கையாகும். அதன் அடிப்படையில், 2007–2008 ஆம் ஆண்டில் பல்லவபுரம், மறைமலை நகர், பொள்ளாச்சி, கொடைக்கானல், குமாரபாளையம், இராசிபுரம், சின்னமனூர், பரமக்குடி, சங்கரன்கோவில், தென்காசி, சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம், பெரம்பலூர், திருவள்ளூர், திருத்துறைப்பூண்டி, கீழக்கரை, உள்ளகரம்–புழுதிவாக்கம், கத்திவாக்கம், மதுரவாயல், அவனியாபுரம், கவுண்டம்பாளையம், குறிச்சி, குனியமுத்தூர், மன்னார்குடி, குடியாத்தம், செய்யாறு மற்றும் மாதவரம் ஆகிய 27 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–3–ன்கீழ் கத்திவாக்கம் நகராட்சியில் ஆறு கோடியே இருபத்திரண்டு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர்த் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 2007–2008 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட இருக்கக்கூடிய சில முக்கியத் திட்டங்கள்:

மதுரை மாநகராட்சியில் எழுபத்து நான்கு கோடியே இருபத்து ஒன்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொண்ணூற்றாறு கோடியே ஐம்பத்தோரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் திடக் கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மதுரை மாநகராட்சி தலைமை நீரேற்றுப் பகுதிகளில் நீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்காக, வைகையாற்றின் குறுக்கே மேலக்கால், கோச்சடை மற்றும் மணலூர் ஆகிய மூன்று இடங்களில் நான்கு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணைகள் கட்டப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கான இரண்டாவது பில்லூர் குடிநீர் விநியோகத் தனித் திட்டம் நூற்றுப் பதின்மூன்று கோடியே எழுபத்து நான்கு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

சென்னைப் புறநகர்ப் பகுதியில் உள்ள தாம்பரம் நகராட்சியில் முப்பத்திரண்டு கோடியே அறுபது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் நகராட்சி மற்றும் ஹார்விபட்டி பேரூராட்சி ஆகிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம் ஒன்பது கோடியே அறுபத்தேழு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திருவொற்றியூர், ஆலந்தூர், கத்திவாக்கம், அம்பத்தூர் மற்றும் மாதவரம் நகராட்சிகளில் மொத்தம் இருபத்து மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்நகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளும், வீட்டு வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

மதுரை மாநகராட்சியில் நூற்று முப்பது கோடியே நாற்பத்து நான்கு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாநகராட்சியில் இருநூற்று ஐம்பத்தேழு கோடியே எண்பத்திரண்டு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் அந்த மாநகராட்சிகளில் வாழும் குடிசைப் பகுதி

மக்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் வீட்டு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

இது தவிர, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்மூலமாகக் கோயம்புத்தூரில் அம்மன்குளம் மற்றும் உக்கடம் பகுதிகளில் தொண்ணூற்றாறு கோடியே முப்பத்தெட்டு இலட்சம் ரூபாய் மதிப்பிலும், மதுரை, பெரியார் நகர் பகுதியில் முப்பத்தொன்பது கோடியே எழுபத்தேழு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் வீட்டு வசதிகள் அளிக்கும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நாமக்கல் நகராட்சியில் மூன்று கோடியே ஐம்பத்தெட்டு இலட்சம் ரூபாய் மதிப்பிலான திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் 2007–2008 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

சங்கரன்கோவில், தேவகோட்டை, சிவகங்கை மற்றும் ஈரோடு நகராட்சிகளில் இருபத்தைந்து கோடி ரூபாய்த் திட்ட மதிப்பிலான சாலை மேம்பாடு மற்றும் வடிகால் அமைக்கும் பணிகள் செயல்படுத்தப்படும்.

விழுப்புரம், மறைமலை நகர், கரூர், தஞ்சாவூர், ஈரோடு, தேவகோட்டை மற்றும் சிவகங்கை நகராட்சிகளில் இருபத்தெட்டு கோடியே நாற்பத்தொன்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர்த் திட்டங்கள் 2007–2008 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தருமபுரி, கொடைக்கானல், மணப்பாறை, சீர்காழி, நாகப்பட்டினம், திருப்பத்தூர், ஈரோடு, குமாரபாளையம், புதுக்கோட்டை, கும்பகோணம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, உதகமண்டலம், மன்னார்குடி மற்றும் திருவாரூர் நகராட்சிகளில் நூற்று இருபத்தோரு கோடியே நாற்பத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

பேரூராட்சிகள். தமிழகத்திலுள்ள நகர்ப்புற மக்கள் தொகையில் 28 விழுக்காட்டைக்கொண்டுள்ள பேரூராட்சிகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்பட வேண்டிய தேவை



அதிகமாகி வருகிறது. பெரும்பான்மையான பேரூராட்சிகள் நிதி ஆதாரத்தில் நலிவுற்றவைகளாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, அரசு, "அனைத்துப் பேரூராட்சிகள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" எனும் பெயரில் ஒரு சிறப்புத் திட்டத்தை இந்த நிதியாண்டு முதல் நடைமுறைப்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) பேரூராட்சிகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும், ஒருங்கிணைந்த புதிய வசதிகளை உருவாக்கிடவும், குடிநீர் வழங்கல், மழை நீர் வடிகால், சாலைகள், தெரு விளக்குகள், சுய உதவிக் குழுக்களுக்கான பணிக் கூடங்கள், அலுவலகக் கட்டடங்கள்போன்ற பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு ஆண்டும் 140 பேரூராட்சிகள் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தினால் பயன்பெறும். நான்கு ஆண்டுகளில் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் அனைத்துப் பேரூராட்சிகளிலும் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 1–15*

பேரூராட்சிகளில் கணினிமயமாக்குதலை வலுப்படுத்தவும், கணினிச் சேவைகளை வழங்குவதிலான தரம் மற்றும் தகவல் மேலாண்மைச் சேவையை மேம்படுத்திடவும் 561 பேரூராட்சிகளுக்கும் தேவையான கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் வசதிகள் அளித்து, பணியாளர்களுக்குக் கணினிப் பயிற்சி வழங்கப்படும்.

செவிலிமேடு பேரூராட்சியில் ரூ.731 இலட்சம் மதிப்பீட்டிலும், லப்பைகுடிகாடு பேரூராட்சியில் ரூ.99 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்பத்தூர் பேரூராட்சியில் பன்னிரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் சென்னைப் பெருநகர் எல்லைக்குட்பட்ட சிட்லப்பாக்கம், குன்றத்தூர், நந்தம்பாக்கம், பெருங்களத்தூர், சோழிங்கநல்லூர், மாடம்பாக்கம், மாங்காடு, பெருங்குடி, செம்பாக்கம், திருநீர்மலை, மீனம்பாக்கம், பள்ளிக்கரணை, பீர்க்கன்கரணை, சின்னசேக்காடு, மீஞ்சூர், நாரவாரிகுப்பம், புழல், திருநின்றவூர் மற்றும் திருமழிசை ஆகிய 19 பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

சிட்லப்பாக்கம், ஒட்டன்சத்திரம் மற்றும் திருச்செந்தூர் பேரூராட்சிகளில் ரூபாய் 100 இலட்சம் மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்படும்.

திருக்கழுக்குன்றம், நாரவாரிகுப்பம், செங்கம், ஓமலூர், அவிநாசி, துடியலூர், கருமத்தம்பட்டி, லால்பேட்டை, அய்யம்பேட்டை மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய 10 பேரூராட்சிகளில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் இறைச்சிக் கூடங்கள் நவீனமயமாக்கப்படும்.

50 பேரூராட்சிகளில் சோடியம் ஆவி விளக்குகளுக்கு இணையான ஒளிரும் அடர் மின் விளக்குகள் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் ஆயிரம் இடங்களில் அமைக்கப்படும்.

நிதிநிலையில் நலிவடைந்த 75 பேரூராட்சிகளில் குடிநீர் விநியோக விஸ்தரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் ரூபாய் 200 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

பள்ளிப்பட்டு, அச்சரப்பாக்கம், மேல்பட்டாம்பாக்கம், செஞ்சி, மெலட்டூர், சுவாமிமலை, மல்லாங்கிணறு மற்றும் பளுகல் ஆகிய எட்டு பேரூராட்சிகளில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகளும், மொடக்குறிச்சி, கம்பைநல்லூர், நாகார்ஜுனஹள்ளி, கீரமங்கலம், எரியோடு, வேடசந்தூர், உப்பிடமங்கலம், டி.கல்லுப்பட்டி, எழுமலை, தாத்தையங்கார்பேட்டை, ஆத்தூர் மற்றும் திருவட்டாறு ஆகிய 12 பேரூராட்சிகளில் மிகவும் பழுதடைந்துள்ள அலுவலகக் கட்டடங்களைச் சீரமைக்கும் பணிகளும் ரூ.140 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

புராதன, சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களாக உள்ள துரித வளர்ச்சி காணும் 20 பேரூராட்சிகளில், சர்வதேச மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான அனைத்து வசதிகளுடன்கூடிய நவீனப் பேருந்து நிலையங்கள் அமைக்கும் பணி இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும். இப்பேருந்து நிலையங்களில் பேருந்துகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடங்கள், உணவகங்கள், குளிரூட்டப்பட்ட நவீன கட்டண ஓய்வறைகள், அங்காடிகள்போன்ற ஒருங்கிணைந்த வசதிகள் அமைக்கப்படும்.

போரூர் பேரூராட்சியில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

சென்னை மாநகராட்சி. சென்னை மாநகராட்சியில் ரூபாய் 255 கோடி மதிப்பீட்டில் பெரிய அளவிலான திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் இந்த ஆண்டு துவங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்கள் சீரமைக்கப்பட்டு அறிவியல் முறையில் பராமரிக்கப்படும். மேலும், திடக் கழிவுகளை அகற்றுவதற்குத் தேவையான நவீன புதிய வாகனங்கள் வாங்கப்படும். தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் திறந்த வகை லாரிகளுக்குப் பதிலாக 80 அழுத்தி மூடப்படும் லாரிகள் வாங்கப்படும்.



தங்க சாலை சந்திப்பு, பேசின் பிரிட்ஜ், திருவான்மியூர் எல்.பி. ரோடு மற்றும் மத்திய கைலாஷ் I.T. காரிடார் சந்திப்பு ஆகிய நான்கு இடங்களில் புதிய மேம்பாலங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையில் தற்போது உள்ள 38 மயானங்களில் இதுவரை 11 மயானங்களில் நவீன எரிவாயு/மின்சார தகன மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 27 மயானங்களிலும் நவீன எரிவாயு/மின்சார தகன மேடைகள் ரூபாய் 28 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகராட்சியினுடைய பராமரிப்பில் உள்ள கேப்டன் காட்டன் கால்வாய், மாம்பலம் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய் மற்றும் நந்தனம் கால்வாய் ஆகிய கால்வாய்களின் கரைகளும், தளங்களும் சிமெண்ட் கான்கிரீட் தளங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

சரியான அடுப்புகள் மற்றும் பிற வசதிகள் இல்லாமல் அமைந்துள்ள 630 பள்ளிச் சத்துணவுக் கூடங்கள் ரூபாய் 1.44 கோடி மதிப்பீட்டிலே மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவான்மியூர் பகுதியில் அமைந்துள்ள கடற்கரைப் பகுதி ரூபாய் இரண்டு கோடி மதிப்பீட்டில் அழகுபடுத்தப்படும்.

சென்னை மாநகராட்சியினுடைய அனைத்து மண்டலங்களிலும் மக்கள் தொடர்பு மின்னணுச் சேவை மையம் உருவாக்கப்பட்டு, இம்மையங்களின்மூலம் சொத்து வரி, குடிநீர்க் கட்டணம் செலுத்துதல் மற்றும் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் பெறுதல்போன்ற சேவைகள் அளிக்கப்படும்.

அடையாறு கிரீக் எனும் சிற்றோடைப் பகுதியையும், திரு.வி.க. பாலத்தின் கிழக்கே அமைந்துள்ள அடையாறு கடல்முகப் பகுதியையும் மேம்படுத்தி, சுமார் ரூபாய் 100 கோடி செலவில் "அடையாறு பூங்கா" என்ற பெயரில் உலகத் தரம் வாய்ந்த சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கடந்த ஆண்டு

அறிவிக்கப்பட்டது. அதன்படி இந்தப் பகுதியை உலகத் தரம் வாய்ந்த பூங்காவாக மாற்றப் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில், இங்குள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகளைக் கணக்கெடுத்தல், மரக் கன்றுகளை வளர்த்தல்போன்ற சிறு அளவிலான சில மேம்பாட்டுப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. முழு அளவிலான பணிகள் இந்த ஆண்டு தொடங்கப்படும்.

அரும்பாக்கம், வேளச்சேரி பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளைத் தடுக்க ஒரு சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம். சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைக்கு நிரந்தரத் தீர்வு காண இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இதற்காக மீஞ்சூரிலே நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன்கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்காக 25-2-2007 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர, தென் சென்னைப் பகுதியில், சென்னை–மாமல்லபுரம் சாலையிலுள்ள நெம்மேலி என்னும் இடத்தில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன்கொண்ட மற்றொரு கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்க 40.05 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான விரிவான திட்ட அறிக்கை கலந்தறிதற்குரியர்மூலம் தயாரிக்கப்படுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய அரசினுடைய நிதி உதவியுடன் இப்பணிகள் துவங்கப்படும்.

*பிற்பகல் 1-20*

சென்னைக் குடிநீர் வாரியம் இந்த ஆண்டில் பி.வி.சி. குழாய்களுக்குப் பதிலாக நெகிழிரும்புக் குழாய் பதிக்கும் பணியை 115 கி.மீ. நீளத்திற்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தும். இதன்மூலம் நீர்க் கசிவுத் தடுப்பு மற்றும் சம அளவு குடிநீர்ப் பகிர்மானம் மக்களுக்கு உறுதி செய்யப்படும்.

வள்ளுவர் கோட்டம் பகிர்மான மண்டலத்தில் சோதனை அடிப்படையிலே தினசரி 24 மணி நேரமும் தடையில்லாக் குடிநீர் வழங்க சென்னைக் குடிநீர் வாரியம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் தொடங்கப்பட்டு, மூன்று ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள்



முடிவடைந்தபின், வள்ளுவர் கோட்டம் பகிர்மான மண்டலத்திலுள்ள ஏறத்தாழ 3.50 இலட்சம் மக்கள் 24 மணி நேரமும் தடையில்லாக் குடிநீர் பெறுவார்கள்.

தற்போது பெருங்குடி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவு வளரும் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லாததால், ரூ.31.48 கோடி மதிப்பீட்டில், கூடுதலாக நாள் ஒன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி இந்த ஆண்டில் தொடங்கப்பட்டு, 18 மாதங்களில் முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

செம்பரப்பாக்கம் ஏரி அருகில் நாள் ஒன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிப்புத் திறன்கொண்ட நிலையத்தின் 200 mld நீர் சுத்திகரிக்கும் பணி சோதனை ஓட்டமாக 8-4-2007 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய நிலையமாக அமையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சுத்திகரிப்பு நிலையம் ஜூன் 2007 அன்று தொடங்கப்பட இருக்கிறது.

அதேபோல், குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலே பல அறிவிப்புகள் ஏற்கெனவே புத்தக வடிவிலே அச்சடிக்கப்பட்டு, என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, இன்னும் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன, எந்தெந்தப் பணிகள் ஆய்வில் இருக்கின்றன என்பதைப் புத்தக வடிவிலே ஏற்கெனவே உங்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறோம்; துறை அறிவிப்புகள் பற்றிய இந்தப் புத்தகத்திலேகூட அவை வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, இதை நான் தொடர்ந்து இங்கே படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத்தான் நீங்களே உணர்ந்துகொண்டிருக்கிறீர்கள்; நானும் உணர்ந்துகொண்டிருக்கிறேன். எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பற்றிய அறிவிப்புகளை@ எல்லாம் நான் படித்தாகக் கருதி, குறிப்பேட்டிலே பதிவு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, நான் இந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஆற்றிக்கொண்டிருக்கிற இந்தப் பணிகளுக்கெல்லாம் ஒத்துழைப்புத் தந்துகொண்டிருக்கக்கூடிய உங்களுக்கெல்லாம் மீண்டும் நான் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், இறுதியாக, நிறைவாக, என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்பு ஒன்றை மாத்திரம் இங்கே குறிப்பிட நான் ஆசைப்படுகிறேன்.

@ 493 முதல் 500 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியினுடைய மேயர் என்ற பொறுப்பை ஏற்ற நேரத்தில், அப்போது முதன்முதலாக மாநகராட்சியினுடைய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதற்கு முன்பு ஒரு முன்னுரையை எழுதி, அந்த முன்னுரை எழுதியிருப்பது சரியாக இருக்கிறதா என்று எனக்குள்ளே ஒரு சந்தேகம் ஏற்பட்டு, நம்முடைய முதல்வரிடத்திலே கொண்டு போய் அதைக் காண்பித்தபோது, அதைப் படித்துப் பார்த்த நம்முடைய முதல்வர் அவர்கள், அதிலே இரண்டு இடங்களில் அடித்துத் திருத்தித் தந்தார்கள். அதாவது, 'மேயர் பதவி' என்று நான் போட்டிருந்தேன், அந்தப் 'பதவி' என்ற வார்த்தையை மாத்திரம் இரண்டு இடங்களிலே அடித்தார்கள். அவற்றை அடித்துவிட்டு, என்னிடத்திலே விளக்கம் சொன்னார்கள்; 'உனக்கு மக்கள் தந்திருப்பது மேயர் பதவி அல்ல, மேயர் பொறுப்பு; மக்களுக்குப் பணியாற்ற வேண்டும், அந்தப் பொறுப்போடு உன் கடமையை ஆற்ற வேண்டும்' என்று (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது எனக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை உணர்ந்துதான் இந்தக் கடமைகளையெல்லாம் உங்களுடைய ஒத்துழைப்போடு ஆற்றிக்கொண்டிருக்கிறோம். எனவே, அதற்கு நீங்கள் தந்திருக்கக்கூடிய ஒத்துழைப்புக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை எண் 34–ன்மீது 380 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறீர்கள். அதேபோல, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை எண் 42–ன்மீது 361 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறீர்கள். இவற்றையெல்லாம் உரிய முறையிலே நாங்கள் பரிசீலித்து, அவ்வப்போது அதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நானும், இந்தத் துறையும் காத்திருக்கிறோம். அந்த உறுதிமொழியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்திருக்கக்கூடிய இந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களைக் கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கெல்லாம் சேர்த்துத்தான் அறிவித்து இருக்கிறார்கள் அல்லவா? பிறகு என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு அறிவிப்புகளை நம்முடைய தமிழகம் முழுமைக்கும் வாரி வழங்கி இன்று ஒரு நல்ல பெயரை மிகத் திறமையாக எடுத்திருக்கிறார்கள். எங்களுடைய வேலூருக்கும் சிலவற்றையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இப்போது எங்களுக்கு மிகவும் அவசரமாக, அத்தியாவசியமாகத் தேவைப்படுவது, ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம். ஆகவே, கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு இப்போது அறைகூவலாக, சவாலாக ஏற்று எடுத்துக்கொண்டிருக்கிற இந்தத் திட்டத்தை வேலூர் மாவட்டத்திற்கும் விரிவாக்கம் செய்து, அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு செயல்படுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் முதலமைச்சரிடத்திலேகூடப் பல முறை சொல்லியிருக்கின்றார்கள். என்னைச் சந்திக்கின்றபோதெல்லாம் இதைப் பற்றித் தொடர்ந்து அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, வேலூர் மாவட்டத்தோடு எப்படிச் சேர்க்கலாம் என்று நாங்கள் யோசித்துக்கொண்டிருக்கிறோம். எது எப்படியிருந்தாலும், வேலூர் மாவட்டத்திற்கு வேறொரு திட்டத்தின்மூலமாகக் குடிநீர் வழங்கக்கூடிய அந்த முயற்சியைக்கூட, அதற்கான ஒரு திட்டத்தைப் பற்றிக்கூட நாங்கள் யோசித்துக்கொண்டிருக்கிறோம். எனவே, நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. எப்படியும் வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் புறக்கணிக்கமாட்டோம். குடிநீர் வழங்குவதிலே, அது எந்தத் திட்டமாக இருந்தாலும், அதன்மூலமாக நிறைவேற்றித் தருவதற்கு இந்த அரசு காத்திருக்கிறது, தயாராக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓசூர் உறுப்பினர், சொல்லுங்கள், திரு. கோபிநாத்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 1990 முதல் ஓசூர் மக்களிடையே இருந்த tax பிரச்சினைக்கு, கேட்டவுடனே 8 நாட்களுக்குள் நல்ல தீர்வு கண்டு, நல்ல பதிலைக் கொடுத்ததற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஓசூர் நகர மக்கள் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்தை நெருங்குகின்ற வகையில் தன்னுடைய பதிலுரையில் எல்லாவிதமான சலுகைகளையும், சலுகை மழையாகவே அறிவித்து எல்லோரையும் மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்த்தியிருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்த, மன்னார்குடிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம், கூத்தாநல்லூருக்குப் பாய்க்காரத் தெரு பாலம், இவற்றை நிறைவேற்றுவதற்கான அறிவிப்புகளை வெளியிட்டதற்காகவும் தொகுதி மக்களின் சார்பிலே என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இராமநாதபுரம் மாவட்ட மக்களுடைய நீண்ட காலப் பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினையைக் கருத்தில்கொண்டு, அங்கு நிலவுகின்ற கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர், இந்தியத் திருநாட்டின் மூத்த குடிமகன், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக ரூ.616 கோடியை ஒதுக்கிக் கொடுத்து, அதற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு என்னுடைய பரமக்குடித் தொகுதிக்கு, பரமக்குடி நகருக்கு வருகை புரிந்து அந்த விழாவிலே கலந்துகொண்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றியதற்காக, நிதியை ஒதுக்கிக் கொடுத்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அய்யா அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதே சமயத்திலே, 2001 ஆம் ஆண்டு, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இந்த அவையிலே அன்றைய முதலமைச்சர் அவர்கள் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் திருச்சியிலே இருக்கின்ற முக்கொம்பு என்னும் இடத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு நாங்கள் நிறைவேற்றுவோம் என்று சொன்னார்கள். ஆனால், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அது அறிவிப்பாகவே இருந்ததேயொழிய, அவர்கள் நிறைவேற்றிக் கொடுக்கவில்லை. ஆனால், டாக்டர் கலைஞர் அய்யா அவர்கள் இன்றையதினம் நாங்கள் கேட்காமலேயே எங்கள் மாவட்ட மக்களுடைய மனநிலையைப் புரிந்துகொண்டு, இன்று 616 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்ததற்காக உண்மையிலேயே நான் அவரைப் பாராட்டுகிறேன், வணங்குகிறேன், நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். சொல்லியாகிவிட்டது இல்லையா? திரும்பத் திரும்ப என்ன? (குறுக்கீடு)

**திரு. இரா. இராம்பிரபு:** அதேபோல, எங்கள் பரமக்குடி நகரின் 20 வருட காலக் கோரிக்கையான பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அன்புத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஐந்து வருடங்களாக இதே கோரிக்கையை இந்த அவையிலே நான் வைத்தேன். அன்றைய ஆட்சியாளர்கள் செய்து கொடுக்கவில்லை. இன்று செய்து கொடுத்ததற்கு மனமார்ந்த பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொண்டு, அதேபோல, தமிழ்நாடு ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம்பிரபு, சிறப்புரையாற்றாதீர்கள், நன்றி சொல்லிவிட்டு, உட்காருங்கள்.

**திரு. இரா. இராம்பிரபு:** ஒரே ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். பரமக்குடியில் இருக்கக்கூடிய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. டி. சுதர்சனம், நீங்கள் சொல்லுங்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சிறந்த அறிவிப்புகளை, கன்னியாகுமரியிலிருந்து ஆந்திர மாநில எல்லை வரை இருக்கின்ற பல்வேறு பகுதிகளுக்கு, கிராமப்புற வளர்ச்சிக்கு, நகர்ப்புற வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். . .

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. டி. சுதர்சனம்:** கேட்க மனம் உடையவர்கள் எல்லாம் இந்த அவையிலே இருந்து கேட்டு, மகிழ்ச்சி அடைகிறார்கள். கேட்க மனம் இல்லாதவர்கள், அவர்களுடைய அறையிலே இருந்து கேட்டு, மகிழ்ச்சியடைந்துகொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு நொண்டிச் சாக்கைச் சொல்லி, யாரையோ திருப்திப்படுத்துவதற்காக இந்த அவையைவிட்டு அவர்கள் சென்றிருந்தாலும், அவர்களது கோரிக்கைகளையும் நீங்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்காகவும், இந்தப் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருப்பதற்காகவும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை; 11–4–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,926,38,61,000/–, மூலதனக் கணக்கில் ரூ.582,40,29,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.151,93,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை; 11–4–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,664,26,48,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.806,10,18,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

இன்று அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்யும்போது ** என்று கூறிய வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13-4-2007) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

69. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (2006-2007)

70. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை. (2006-2007)

71. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை. (2006-2007)

72. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் முதலாவது அறிக்கை. (2006-2007)

73. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2006-2007)





## இணைப்பு

*(485 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.)*

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

## அறிவிப்புகள்-2007-2008

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வசதி இல்லாத 200 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதி அளிக்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் உள்ள 750 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மேல்நிலைத் தொட்டிகள் அமைத்து, குடிநீர் வசதி மற்றும் கழிவறைகளுக்குத் தண்ணீர் வசதி 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

கடந்த செப்டம்பர் 2006 மறு ஆய்வு முடிவுகளின்படி தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 16,826 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில், 6,991 குடியிருப்புகளில் தனியாக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இல்லாத நிலை உள்ளது. எனவே, இந்தக் குடியிருப்புகள் அனைத்திற்கும் மேல்நிலைத் தொட்டி அமைக்கத் திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக நடப்பாண்டில் மேல்நிலைத் தொட்டிகள் இல்லாத 2,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனியாக மேல்நிலைத் தொட்டிகள் அமைத்து, குடிநீர் வசதி அளிக்கப்படும்.

நடப்பு நிதியாண்டில், நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட உள்ள முக்கியக் குடிநீர்த் திட்டங்கள்:

கரூர் மாவட்டத்தில் கடவூர், கிருஷ்ணராயபுரம் ஒன்றியங்கள் மற்றும் திருச்சி மாவட்டத்தில் வையம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த 541 குடியிருப்புகளுக்கு 49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 98 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கரூர் மாவட்டத்தில் தாந்தோணி ஒன்றியத்தைச் சேர்ந்த 100 குடியிருப்புகளுக்கு 6 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆயக்குடி, அச்சன்புதூர், வடகைகீழ்பிடாகை, பண்பொழி பேரூராட்சிகள் மற்றும் கடையம், கீழப்பாவூர், தென்காசி, செங்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 151 குடியிருப்புகளுக்கு 29 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 86 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை, நாங்குநேரி, களக்காடு ஒன்றியங்களைச் சேர்ந்த 185 குடியிருப்புகளுக்கு 16 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 78 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வில்லுக்குறி, ஆளூர் பேரூராட்சிகள் மற்றும் குருந்தன்கோடு, தக்கலை ஒன்றியங்களைச் சேர்ந்த 53 குடியிருப்புகளுக்கு 9 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 56 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தேனி மாவட்டத்தில் சி. புதுப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, அனுமந்தன்பட்டி, உத்தமபாளையம் பேரூராட்சிகள் மற்றும் கம்பம் ஒன்றியத்தைச் சேர்ந்த 16 குடியிருப்புகளுக்கு 8 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 78 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டராம்பட்டு, செங்கம், திருவண்ணாமலை, கலசப்பாக்கம் மற்றும் துரிஞ்சாபுரம் ஒன்றியங்களைச் சேர்ந்த 90 குடியிருப்புகளுக்கு 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் ஊத்தங்கரை ஒன்றியங்களைச் சேர்ந்த 168 குடியிருப்புகளுக்கு 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 56 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

2006-07 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் திட்டங்கள்:

பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர் மற்றும் வேப்பந்தட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 306 குடியிருப்புகளுக்கு





51 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம்.

ஈரோடு மாவட்டத்தில் முத்தூர்-காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து விடுபட்ட வெள்ளக்கோவில், மூலனூர் மற்றும் கொடுமுடி ஒன்றியங்களைச் சேரந்த 179 குடியிருப்புகளுக்கு 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 24 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி மற்றும் கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த 165 குடியிருப்புகளுக்கு 13 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 232 குடியிருப்புகளுக்கு 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 இலட்சத்து 28 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தேனி மாவட்டத்தில் கோம்பை, பண்ணைப்புரம் மற்றும் தேவாரம் பேரூராட்சிகளுக்கு 6 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 36 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

நாமக்கல் மாவட்டத்தில் ராசிபுரம் நகராட்சிக்கு 5 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிப்பாளையம் நகராட்சிக்கு 4 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 36 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் சாயர்புரம் மற்றும் பெருங்குளம் பேரூராட்சிகளுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 19 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கடந்த 10 மாதங்களாக 28 மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகள் குறித்து மேற்கொண்ட ஆய்வின்போது சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளின் பேரில் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள முக்கியக் குடிநீர்த் திட்டங்கள்:

விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் நகராட்சி, விருதுநகர் மற்றும் ராஜபாளையம் ஒன்றியங்களைச் சேர்ந்த 41 குடியிருப்புகளுக்கு 32 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி நகராட்சிக்கு 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 92 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி, திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்தும் வகையிலும், களக்காடு பேரூராட்சிக்குக் கூடுதல் குடிநீர் வசதி அளித்திடவும் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு 2 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மூலக்கரைப்பட்டி பேரூராட்சிக்கு 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு பேரூராட்சிக்கு ஒரு கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி பேரூராட்சிக்கு 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

மதுரை மாவட்டத்தில் ஆனையூர் நகராட்சிக்கு 7 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 40 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

வேலூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் நகராட்சிக்கு 6 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 69 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

வேலூர் மாவட்டத்தில் கழிஞ்சூர், அம்மூர், திமிரி, காந்தி நகர் மற்றும் செம்பாக்கம் பேரூராட்சிகளுக்கு 4 கோடியே 24 இலட்சம் ரூபாய்





மதிப்பீட்டில் 59 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்.

வேலூர் மாவட்டத்தில் காட்பாடி பேரூராட்சிக்கு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், கே.வி. குப்பம் ஒன்றியத்தைச் சேர்ந்த 37 குடியிருப்புகளுக்கு 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இராஜாதோப்பு மற்றும் பாலாற்றில் நீராதாரங்கள் அமைத்து 18 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி பேரூராட்சி மற்றும் மொடக்குறிச்சி ஒன்றியத்தை சேர்ந்த 74 குடியிருப்புகளுக்கு 4 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 29 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் பேரூராட்சிக்கு 2 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை பேரூராட்சிக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 19 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

சேலம் மாவட்டத்தில் காடையாம்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த 54 குடியிருப்புகளுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்லூர், மருங்கூர் மற்றும் மைலாடி பேரூராட்சிகளுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 34 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்.

கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்கு ஒரு கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 23 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

[2007 ஏப்ரல் 12

தஞ்சாவூர் மாவட்டத்தில் சுவாமிமலை பேரூராட்சிக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தொட்டியம் பேரூராட்சிக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 14 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த 43 குடியிருப்புகளுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தேனி மாவட்டத்தில் கம்பம் நகராட்சிக்கு 4 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

நடப்பு நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் முக்கியக் குடிநீர்த் திட்டங்கள்:

திண்டுக்கல் மாவட்டத்தில் தொப்பம்பட்டி மற்றும் பழனி ஒன்றியங்களைச் சேர்ந்த 200 குடியிருப்புகளுக்கு 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் சின்னாளப்பட்டி, அம்மையநாயக்கனூர், சித்தையன்கோட்டை பேரூராட்சிகள் மற்றும் ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு ஒன்றியங்களைச் சேர்ந்த 137 குடியிருப்புகளுக்கு 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 66 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் நகராட்சி மற்றும் ஜெயங்கொண்டம் ஒன்றியத்தைச் சேர்ந்த 281 குடியிருப்புகளுக்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 3 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசி, தெள்ளார் ஒன்றியங்களைச் சேர்ந்த 227 குடியிருப்புகளுக்கு 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.



2007 ஏப்ரல் 12]

ஈரோடு மாவட்டத்தில் வெள்ளக்கோவில் நகராட்சிக்கு 8 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் நகராட்சிக்கு 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அன்னூர், அவினாசி மற்றும் காரமடை ஒன்றியங்களைச் சேர்ந்த 259 குடியிருப்புகளுக்கு 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர், கருங்கல், கீழ்குளம், கப்பியறை, திங்கள் நகர், மற்றும் வெள்ளிமலை பேரூராட்சிகளுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலப்பள்ளம், ரீத்தாபுரம், கல்லுக்கூட்டம், அஞ்சுகிராமம், மண்டைக்காடு, மணவாளக்குறிச்சி கணபதிபுரம், அகஸ்தீஸ்வரம், தெற்கு தாமரைக்குளம், புத்தளம், தெங்கம்புதூர் பேரூராட்சிகள் மற்றும் தக்கலை, இராஜாக்கமங்கலம் ஒன்றியங்களைச் சேர்ந்த 19 குடியிருப்புகளுக்கு 4 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அழகியபாண்டியபுரம், ஆரல்வாய்மொழி, பூதப்பாண்டி, தாளக்கொடி, அழகப்பபுரம், தேரூர், கொட்டாரம் பேரூராட்சிகள் மற்றும் தோவாளை, அகஸ்தீஸ்வரம் ஒன்றியங்களைச் சேர்ந்த 212 குடியிருப்புகளுக்கு 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சத்து 80 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரிமளம், ஆலங்குடி, கரம்பக்குடி மற்றும் கீரமங்கலம் பேரூராட்சிகளுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 40 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்.

நாமக்கல் மாவட்டத்தில் ஆலம்பாளையம் பேரூராட்சிக்கு 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 16 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

[2007 ஏப்ரல் 12

ஈரோடு மாவட்டத்தில் கொல்லன்கோவில் பேரூராட்சிக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தற்போது ஊரகப் பகுதிகளில் குடிநீர்த் திட்டங்களையும், நகர்ப்புறப் பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் தரத்துடன் செயல்படுத்தத் தேவையான எண்ணிக்கையில் உதவிப் பொறியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டியது அவசியம் என்று அரசு கருதுகிறது. எனவே, நடப்பாண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள 100 உதவிப் பொறியாளர் காலியிடங்கள் விதிமுறைகளின்படி நிரப்பப்படும்.

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.

D
V21,31 P07
P07.27.2
227655
சென்னை-600 003